# St. Mary's High School

## DINDIGUL

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS

# ANNUAL

MARCH 1952

# ஆண்டு மலர்


புனித மரியாளின்
உயர்தரப்பள்ளி
திண்டுக்கல்

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS

மார்ச்சு 1952

திருச்சிறுப்பள்ளி
யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்,
திருச்சிராப்பள்ளி.


CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS



Our Clock Tower

Photo : Mannarsamy

SOME SCHOOL VIEWS



CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS




Photo: C. Jesuraj




Photo: Mannarsamy

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS

# CONTENTS


| | | Page |
|---|---|---|
| ஸ்டதஸ்கோப் | ... | 1 |
| பிடிபட்டான் | ... | 2 |
| நாவலன் கண்ட நங்கை | ... | 3 |
| காந்தியடிகள் காட்டிய வழி | ... | 4 |
| விஞ்ஞானத்தினால் ஏற்பட்ட பலன்கள் | ... | 5 |
| பேராசையின் பலன் | ... | 6 |
| தமிழ் | ... | 7 |
| "கிளிக்கண்ணி" மெட்டு-பாட்டு | ... | 8 |
| உத்தமர் காந்தி | ... | 9 |
| மனம் வேறு செய்கை ஒன்று | ... | 10 |
| நரைக்கு மருந்து | ... | 11 |
| அறம் செய்ய விரும்பு | ... | 12 |
| அரசியலும் மாணவரும் | ... | 14 |
| துறவி இளங்கோ | ... | 15 |
| காலத்தின் அருமை | ... | 17 |
| விளையாட்டா? வினையா? | ... | 18 |
| நமது கடமை | ... | 22 |
| ஆசையை அடக்கத் துன்பம் குறையும் | | 23 |
| தமிழ்நாடும் தமிழும் | ... | 24 |
| நாட்டின் செல்வம் ... | ... | 25 |
| பொங்கற் புதுநாள் | ... | 26 |
| கிராமச் சீர்திருத்தம் | ... | 27 |
| விஞ்ஞானம் | ... | 28 |
| வாசகசாலை | ... | 30 |
| கிராம எழில் | ... | 31 |
| எமது விடுதி வாழ்க்கை | ... | 33 |
| யானை | ... | 34 |
| உயர்நிலைப்பள்ளியில் தொழிற் கல்வி | | 35 |
| கிராமத்துப் பாடசாலை | ... | 36 |
| இணைகரவிதி | ... | 39 |
| School Associations | ... | 44 |
| Athletic Association | ... | 44 |
| The Volunteer Corps | ... | 45 |
| Literary and Debating Society | | 46 |
| Pen Club | ... | 47 |
| Social Service League | ... | 47 |
| Health Association | ... | 48 |
| Ramblers' Club | ... | 49 |
| Entertainment Committee | ... | 49 |
| Arts and Crafts Club | ... | 50 |
| In Memoriam | ... | 51 |


## ILLUSTRATIONS


| | | Facing Page |
|---|---|---|
| Our Clock Tower | .. | .. |
| Some School Views | .. | .. |
| School Sports | .. | 8 |
| School Views | .. | 9 |
| Views of Places of Interest | .. | 24 |
| Do. | .. | 25 |
| Do. | .. | 32 |
| Do. | .. | 33 |
| Altar of Boarding Chapel | .. | 50 |
| Our Departed | .. | 51 |

# ஸ்டதஸ் கோப்

ஸ்டதஸ்கோப் என்னும் கருவியைப் பற்றி அடிக்கடி கேள்விப்பட்டும் இருப்பீர்கள், பார்த்தும் இருப்பீர்கள். இக்கருவியைச் சாதாரணமாக ஒவ்வொரு வைத்தியரிடமும் காணலாம். வைத்தியர்கள் உடலில் நிகழும் இருதயத் துடிப்பு, நுரையீரலில் துடிப்பு முதலியவைகளை அறிய உபயோகிக்கிறார்கள். இஃது பலரும் அறிந்த கருவியாய் இருப்பினும், இதன் வரலாற்றைச் சிலரே அறிந்திருப்பர். ஆகவே இதன் வரலாற்றைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

பிரிட்டனில் வசித்து வந்த லெனக் என்பவர் இக்கருவியை முதன் முதலில் கண்டு பிடித்தார். லெனக் தன் சிறு வயதிலேயே ஒரு விஞ்ஞானியிடம் வேலை பார்த்து வந்தார். பின் காலப் போக்கில் தன் சொந்த முயற்சியினாலேயே ஆராய்ச்சிகள் செய்யத்தொடங்கினார். வைத்தியத்திலும், பொருள்களை ஆராய்வதிலும் சிறந்திருந்தார். முற்காலத்தில்—அதாவது 18ம் நூற்றாண்டிற்கு முன்—வைத்தியர்கள் இருதயம், நுரையீரல் முதலியவற்றின் துடிப்புகளை அறியக் கையாண்டமுறை மிக விசித்திரமாக இருந்தது, வைத்தியர், நோயாளிகளின் அவ்விதத் துடிப்புகளை அறிவதற்கு, அவர்களின் மார்பில் தங்கள் காதை வைத்து உற்றுக் கேட்பர். பின்பு, அவருக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்வர். விஞ்ஞானி லெனக்கும் வைத்தியம் செய்வதில் அம்முறையையே கையாண்டார். ஆயினும் அம்முறை சரியான பலன் கொடுக்காததினால், புதியதொரு கருவியைக் கண்டுபிடிக்க எண்ணங் கொண்டு பல ஆராய்ச்சிகள் நடத்தினார்.

ஒரு நாள் லெனக் ஓர் அழகிய சீமாட்டிக்கு வைத்தியம் செய்ய நேர்ந்தது. அவளுடைய நோயை அறிய, மார்பில் காதை வைத்துப் பார்த்தாக வேண்டும். அந்நிலை அவருக்குக் கூச்சமளித்ததேயாயினும், சீமாட்டியின் வீட்டை நோக்கி நடந்தார். போகும் வழியில் சில சிறுவர்கள் ஒரு கொம்பை வைத்துக்கொண்டு ஏதோ விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஓர் சிறுவன் கொம்பின் ஒரு நுனியை ஊசியால் கீறவும், மற்றச் சிறுவர்கள் ஒவ்வொருவராக மறு நுனியில் தங்கள் காதை வைத்துக் கேட்டுக்கொண்டும் இருந்தனர். உடனே லெனக்கிற்கு ஓர் யுக்தி தோன்றியது. ஆயினும் அதைப் பின் ஆராயலாமென எண்ணிக்கொண்டு சீமாட்டியின் வீட்டை அடைந்தார்,

முதலில் சீமாட்டியைத் தன் பழைய முறைகளை உபயோகித்துப் பரிசோதித்தார். சரியான பலன் இல்லை. அப்பொழுது அவருக்கு அச்சிறுவர்களின் நினைவு வந்தது. அவர் ஒரு நீளமான காகிதத்தைக் கொண்டு வரும்படி சொன்னார். பின் அதை ஒரு கொம்பு போல் சுருட்டி இடையில் ஒரு மரக்கட்டையைச் சொருகினார். அதை அம்மாதின் உறுப்புகளில் வைத்துப் பரிசோதித்தார். என்ன விநோதம்! இருதயத் துடிப்பும் நுரையீரல் துடிப்பும் நன்றாகக் கேட்டன. பிறகு அம்மாதிற்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளைச் செய்துவிட்டு, தனது இல்லம் சென்று அதைப்பற்றி மேலும் மேலும் ஆராய்ந்தார். இரண்டு வருட ஆராய்ச்சியின் பின் ஒரு அற்புதக் கருவியைக் கண்டுபிடித்தார். அது மரக்கட்டையால் செய்யப்பட்டிருந்தது. துடிப்பை அறியும் நுனியில் இரு குழாய்களும், கேட்கும் குழாய் இரண்டும் சேர்ந்து ஒரு குழாயாக அமைக்கப்பட்டிருந்தது. லெனக் இதற்கு **ஸ்டதஸ்கோப்** எனப் பெயரிட்டார். அப்பெயரே இன்றும் வழங்கி வருகிறது. பிற்காலத்தில் இக்கருவியில் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டு இன்றுள்ள நிலைமைக்கு வந்துள்ளது. இக்கருவியினால் விஞ்ஞானத் துறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

விளையாட்டுப் பிள்ளைகளின் செயலை அடிப்படையாகக்கொண்டு விஞ்ஞான உலகத்தையே புரட்சி செய்த, ஸ்டதஸ்கோப்பை கண்டு பிடித்த லெனக் விஞ்ஞானப் பெரு மக்களால் போற்றப்படுகிறார். லெனக் தம் 45-ம் வயதில் அகால மரணமடைந்தார்.

முற்காலத்து அநாகரீக பழக்க வழக்கங்களைச் சீர்திருத்தி அமைப்பதில் பல விஞ்ஞானிகள், விஞ்ஞானத்துறையில் ஈடுபட்டு பல புதிய செய்திகளையும், பொருள்களையும் கண்டுபிடித்துள்ளனர். அவர்களில் லெனக்கும் சிறந்தவர் வரிசையில் வைத்தெண்ணத்தக்கவரே என்று கூறுவது மிகையாகாது. அவர் கண்டுபிடித்த ஸ்டதஸ்கோப் வைத்தியஉலகில் போற்றத்தக்கதன்றோ! லெனக்கின் சரிதையை மனதிற்கொண்டு மாணவர்கள் விஞ்ஞானத்துறையில் சிறந்த ஊக்கம் காட்ட வேண்டும்.

**S. திருமூர்த்தி, VI. E.**

# பிடிபட்டான்!

அன்று ஞாயிற்றுக்கிழமை. லீலாவும் அவளுடைய அண்ணன் பாலுவும் வீட்டின் பக்கத்திலுள்ள மரத்தடியில் மிகவும் குஷியாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது சினிமா விளம்பரவண்டி யொன்று அப்பக்கமாக வாத்திய ஒலிகளுடன் மிகவும் டம்பமாய் வந்துகொண்டிருந்தது. லீலாவும் பாலுவும் அந்தவண்டியின் பக்கத்தில் போய் அதைப் பார்த்தனர். அதில் "ஸேம்ஸன் டிலைலா" இன்று கடைசி. அனைவரும் காணத் தவறாதீர்கள். இடத்துக்கு முந்துங்கள் என்று கொட்டை எழுத்துக்களில் ; எழுதியிருந்தது. இதைப் பார்த்தவுடன் இருவரும் எப்படியாவது இன்று சினிமாவுக்குப்போக வேண்டுமெனத் திட்டம் போட்டார்கள். உடனே பாலுவும் லீலாவும் வீட்டுக்குள் சென்று அம்மாவிடம் அம்மா இன்னைக்குத்தாம்மா "ஸேம்ஸன்டிலைலா கடைசி நாள். நானும் லீலாவும் போய் வருகிறோம்மா" என்று பாலு ஒரே மூச்சாகச்சொன்னான். அம்மாவுக்கு இரக்கம் பிறந்தது. அவள் அவர்களிடம், அப்பா இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார் வந்ததும் எப்படியாவது பணம் வாங்கித் தருகிறேன் என்றாள். இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே அவர் ஆபீஸிலிருந்து வந்துவிட்டார்.

பாலுவின் அப்பா வேணுகோபாலுக்கு அவ்வூரில் தபால்காரன்வேலை. மாதச்சம்பளம் ரூ. 50. இது வீட்டுச் செலவுக்கே போதாது. வேணுகோபால் குழந்தைகள்மேல் அன்புடையவர். பாலுவின் அம்மா கெஞ்சிக் கேட்டு அவரிடமிருந்து ஒரு ரூபாய் வாங்கி பாலுவின்கையில் கொடுத்து ஜாக்கிரதையாகப் போய்விட்டு வாருங்கள் என்றாள். அப்போது மணி சுமார் 7 இருக்கும். ராஜாதியேட்டர் இவர்கள் வீட்டிலிருந்து இரண்டு மைல் தூரமிருக்கும். பாதைவண்டிப் போக்குவரத்துக்குரிய சாலையாக இருந்ததால் தைரியமாக அப்பாவின் பேட்ரிலைட்டை எடுத்துக்கொண்டு தன் நண்பன் வேணுவையும் அழைத்துக்கொண்டு மூவருமாகப் புறப்பட்டனர். தியேட்டரை அடைந்ததும் மூன்று டிக்கட்டுகள் வாங்கிக்கொண்டு உள்ளே சென்றனர். படம் ஆரம்பிக்க இன்னும் 15 நிமிடங்களே இருந்தன. படமும் ஆரம்பிக்கப் பட்டது. இடைவேளையில் விளம்பரம் ஒன்று போடப்பட்டது. அதாவது பிரபல கொள்ளைக் காரனும் கொலைகாரனுமான மாயாண்டி என்பவனை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பரிசுத் தொகையாக ரூபாய் 1000 அளிக்கப்படுமென்றும் அவனுடைய போட்டோவும் காண்பிக்கப்பட்டது. பிறகு ஒருவாறாகப்படம் பார்த்துவிட்டு மூவரும் ஊரை நோக்கிப் புறப்பட்டனர். போகும்வழியில் அவர்கள் அந்த விளம்பரத்தைப் பற்றி அளவளாவிக்கொண்டே போனார்கள். அந்தச் சாலையின் வழியாக ஒரு பஸ்ஸை டிரைவர் மட்டும் உட்கார்ந்து ஓட்டிக்கொண்டு வந்தான். இந்தமூவரும் மாயாண்டியைப்பற்றி பேசிக்கொண்டே போனபோது மாயாண்டி என்ற வார்த்தை அவன்காதில் விழுந்தது. அவன் மெதுவாகவே வந்ததனால் பஸ்ஸை நிறுத்தி அவர்களைக் கூப்பிட்டு என்னப்பா மாயாண்டிக்கு அவனைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும் என்று கேட்டான். அத்தச்சமயம் பாலுவின் கையிலிருந்த பேட்ரிவிளக்கு அவன் முகத்தை வெளிச்சமாக்கியது. மூவருக்கும் பயமேற்பட்டது. தங்களையும் கொலைசெய்து விடுவானோ என்று பயந்தனர். வேணு அன்று அவர்கள் பார்த்த விளம்பரத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது பாலு மெதுவாக அக்கூட்டத்திலிருந்து விலகி பஸ்ஸின் முன் இடத்தை அடைந்து பஸ்லைட்சுவிட்சை கழட்டிக்கொண்டு வேகமாக போலீஸ் அலுவலகம் சென்று அங்கு சப்இன்ஸ்பெக்டரிடம் விபரத்தைக் கூறினான். மேலும் அந்த திருடன் ஒரு மைலுக்கப்பால்தான் இருக்கிறான் என்றும் பஸ்ஸின்லைட்சுவிட்சை கழட்டிக் கொண்டுவந்து விட்டதாகவும் கூறி அதை அவர்களிடம் காட்டினான். சந்தேகம் அவருக்கு கொஞ்சம் நீங்கியது. பின் சப்இன்ஸ்பெக்டரும் ஐந்து போலீஸாரும் போலீஸ்லாரியில் வெகுவேகமாகப் பறந்தனர். கொஞ்ச நேரங்கழித்து அந்த டிரைவர் பஸ் சுவிட்சைக்காணாமல் தேடினான். அவன் சுவிட்சு காணாததால் நம்பிக்கை இழந்து கீழேஇறங்கி வேணுவையும் லீலாவையும் இன்னொரு பையன் எங்கே என்று பயமுறுத்தலுடன் கேட்டான். அதற்கு அவர்கள் பயந்துகொண்டே எங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று அழுதுகொண்டே சொன்னார்கள். இதற்குள் போலீஸ்லாரி நெருங்கி விட்டது. லாரியின் வெளிச்சத்தைக்கண்டதும் அவன் பயந்து பக்கத்து மரத்தின்மறைவில் ஒளிந்து கொண்டான். இதைக்கூர்மையாக கவனித்தனர் அழுது கொண்டிருந்த வேணுவும் லீலாவும். போலீஸ்லாரி இவர்கள் இருந்த இடத்துக்கு வந்து விட்டது. பாலு முதலில் இறங்கி அந்த பஸ்ஸைக் காட்டினான். பின்அவனைக்காணாது தேடப்போகும் சமயம் வேணுவும் லீலாவும் அவன் ஒளிந்து கொண்டிருக்கின்ற மரத்தைச் சுட்டிக் காட்டினார்கள். பின்னர் சப்இன்ஸ்பெக்டரும் போலீஸ் காரர்களும் அவனை அமைதியாக கைதிசெய்தனர். பிறகு பஸ்சுவிட்சை பொருத்தி பஸ்ஸையும் எடுத்துக்கொண்டு போலீஸ் அலுவலகத்தை அடைந்தனர். மாயாண்டி கைதிசெய்யப்பட்டான். பரிசுத்தொகையாகிய ரூபாய் 1000 மூவருக்கும் கிடைத்தது. பாவம் டிரைவராக வந்த மாயாண்டி பிடிபட்டான்.

இ. நாகப்பிள்ளை.

# நாவலன் கண்ட நங்கை

மாலை நேரம் பரிதியின் பொன்னிறக் கதிரின் ஒளியானது, பார் முழுதும் தங்கத்தினை உருக்கிப் பாய்ச்சியது போலும் தோற்றமளிக்கின்றது. வானமானது நீலக்கடல் போன்றும், வெண் மேகங்களானது அக்கடலிடைத் தோன்றும் தரங்கம் போன்றும் காட்சி தருகின்றது. ,வைகறையில் தன்னை வென்ற கதிரவனை வெல்லவேண்டி இருளானது அவன், அற்றம்பார்த்துப் போர் தொடுக்கின்றது. இவ்விரு படைகளும் பொருதழிந்த போர்க்களத்தே இரத்த வெள்ளம் ஓடுதல் போலும், குடபால் யாண்டும் செவ்வானம் தோற்றமளிக்கின்றது. பொன்னிறக் கதிரால் தனக்கு அழகு செய்த கதிரவன் அழிந்தமையறிந்து, பூமியாகிய பெண், தனது கூந்தலை விரித்து வருந்துதல் போலும்; இருளானது யாண்டும் பரவாநின்றது. அவள் வாய்விட்டரற்றுதல் போலும் பறவையினங்கள் ஆரவாரம் செய்து கொண்டு தங்கள் கூட்டை நோக்கிச் செல்கின்றன. பொய்கையிலுள்ள ஆம்பல் மலரானது, தனது காதலனாகிய சந்திரனின் வருகையை ஆவலோடும் எதிர்நோக்கி நிற்கின்றது. மல்லிகை மலரானது தனது நறுமணத்தை எங்கும் பரப்பி, எல்லோரையும் மகிழச்செய்கின்றது. ஆநிரைகளோடும் ஏறுகள் மன்றிலே நுழைகின்றன. பொய்கையிலே பெடையோடும் திரிந்த அன்னமானது மென்னடையோடும் குடம்பை பெயர்கின்றது. பள்ளிச் சிறார்கள் தம் பாடங்களைச் செவ்வனே பயில்கின்றார்கள்.

இத்தகைய மாலைக்காலத்தே ஒரு பெண்ணானவள் தனது இல்லத்தின் முன்னர் புள்ளி வைத்து கோலம் தீட்டுகின்றாள். புள்ளி வைப்பதும், அவற்றை எண்ணுவதும், சாலையை வெறித்துப் பார்ப்பதும், நெட்டுயிர்ப்புக்கொள்வதும், பின்னர் கோடிழுப்பதும், அவளது தினசரி கடமையாகும்; அன்றும் அவ்வாறே செய்கின்றாள் அந்நங்கை. அதனை அவ்வழியே சென்ற புலவர் பெருமானாய வள்ளுவர் கண்டார். அவள்; தன்னை ஒப்பனை செய்துகொள்ளாது, இல்லத்தின் முகப்பை ஒப்பனை செய்வதைப்பற்றி கற்பனை செய்தது அவர் உள்ளம், நங்கையின் செயலின் தன்மையை நாடிய உள்ளம் உவந்தது. தமிழணங்கே தழைக நின் பண்பு என வாய்விட்டுக் கூறினார். அவர் அறிந்ததென்ன?

கணவனானவன் பொருள் ஈட்டும் பொருட்டு பிற நாட்டிற்குச் செல்லும்போது தனது மனைவியாகிய அவளிடம், தான் இத்தனை நாளில் வருவேன் என்று கூறிப் போனான். வெளியூர் சென்றோர் வரும் காலம் (பண்டைக்காலத்தே) மாலைக் காலமேயாகும். ஆகவே அப்பெண்ணானவள், மாலைக்காலத்தே தன் கணவன் வருவானென்று, வாசலில் நின்று வழி பார்த்துக்கொண்டிருப்போமேயானால் இல்லத்தே உள்ளவர்கள் அறிந்து கொள்வார்களென்றும், கணவன் சென்ற நாளைக் கணக்கிட்டுப் பார்ப்பின் வீட்டிலுள்ளோர் தன்னிலைகண்டு வீணே வருந்துவர் என்றும் எண்ணிய அந்நங்கை தன்னிலையினை அவர்கள் அறிவதற்கு நாணமுற்று, அவர்களறியாவண்ணம் அவன் சென்ற நாட்களைப் புள்ளிகளின்மூலம் கணக்கிட்டு, அவற்றை முடிக்கும் வகையறியாது, யோசனை செய்வதுபோலும் சாலையைப் பார்ப்பதுமாக, தன்னில்லத்தார் தன்னிலையை அறியா வகை நடந்துகொள்ளும், அவ்வணங்கின் செயல் கண்ட வள்ளுவர், தமிழ்ப் பெண்டிரின் தாயகமாகிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய அனைத்தும் ஒருங்கே மிளிரும் அந்நங்கையைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்திச் சென்றார். அப்பாவையின் செயலினைப் பாவாக இசைத்தது அவர் நா.

> “வாளற்றுப்புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
> நாளொற்றித் தேய்ந்த விரல்”

அச்செய்யுளையே வள்ளுவர் தாம் இயற்றிய ‘திருக்குறள்’ என்னும் நூலில், ‘அவர் வயின் விதும்பல்’ என்ற அதிகாரத்தே முதன்மையாக அமைத்தார்.

**புலவர் கு. செல்வக்கணேசன்.**
(தமிழாசிரியர்)

# காந்தியடிகள் காட்டிய வழி

★

நமது நாட்டில் பல பெரியார்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களில் சிலர், பொது மக்களின் சேவைக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் பாடுபட்டிருக்கிறார்கள். நாட்டின் நலனுக்காகவும், மக்களின் முன்னேற்றத்திற்கும், பாடுபட்ட பெரியாருள் முக்கியமானவர் நம் சுதந்திர பிதாவாகிய மகாத்மா காந்தியவர்களாகும். இத்தகைய பெரியாரின் அருள் மொழிகளைப் பின்பற்றி அவர் காட்டிய வழிகளில் நடப்பதே நமது கடமையாகும்.

இப்பெரியார் நமது நாட்டின் மேற்கு கரையிலுள்ள கத்தியவார் தீபகற்பத்தில், போர்பந்தர் என்னும் ஊரில் 1869-ம் வருடம் பிறந்தவர். இவர் முழுப் பெயர் மோகனதாஸ் கரம் சந்து காந்தி என்பது. இவரது தந்தை இராச கோட்டை அரசரிடம் அமைச்சராக இருந்தார். இவர் வாய்மை, நேர்மை என்னும் சிறப்பியல்கள் வாய்ந்தவர். இவருடைய தாயார் கடவுள் பக்தியும் சமயப்பற்றும் உடையவர். பொறுமைக்கு இருப்பிடமானவர். "மகனறிவு தந்தையறிவு" என்பதும் "தாயைப்போல் சேய்" என்பதும் நம் நாட்டு முதுமொழிகள். காந்தியடிகள் தந்தையார் வாயிலாக வாய்மை, நேர்மை முதலிய பண்புகளையும், தாயின் மூலமாக சாந்தம், சமயப்பற்று, கடவுள் பக்தி முதலிய உயர்ந்த குணங்களையும் பெற்றார். உயர் குணங்களுக்கு உறைவிடமாய் விளங்கிய காந்தியாரும் பல தவறுகள் செய்துள்ளார். "ஒரு 'குடம் பாலில் ஒரு துளி நஞ்சு சேருமானால் அந்தப் பால் முழுவதும் நஞ்சாகும்." அது போல நல்ல குணங்கள் நிறைந்த பலருள் துர்க்குணங்கள் நிறைந்த சிலர் சேரினும் நல்லவர் தீயவராய் மாறிவிடுவர். இவர் தீய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு, தன் தவறை உணர்ந்து திருந்திவிட்டார். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நன்னெறியைக் கடைப்பிடிக்கவேண்டும்.

இவர் உள்நாட்டில் படித்துக்கொண்டிருக்கும்பொழுது இவர் படித்த பாடசாலையை அதிகாரி ஒருவர் பார்வையிட்டார். ஆசிரியர் நான்கு வார்த்தைகள் டிக்டேஷன் போட்டாராம். அவைகளில் ஒரு வார்த்தை காந்தியாருக்குத் தெரியவில்லையாம். ஆசிரியர் அவர் பக்கத்தில் வந்து காலை மிதித்து அடுத்த பையனைப் பார்த்து எழுதும்படி சயிக்கினை செய்தாராம். இவர் பார்த்து எழுதாமல் தன் தவறை ஒப்புக்கொண்டாராம். ஆகையால் நாம் காந்தியாரைப் போல் உண்மையாக இருக்க வேண்டும்.

உள்நாட்டுப்படிப்பு முடிந்தவுடன் வழக்கறிஞர் படிப்புக்காக இங்கிலாந்து செல்ல நேர்ந்தது, தாயார் மறுத்தார். ஏனென்றால் வெள்ளையர் நாட்டிற்குச் சென்றால் மாமிசம் தின்னல். சாராயம் குடித்தல் போன்ற துர்ப்பழக்கங்கள் படிந்துவிடுமே என்று பயந்தார். நம் காந்தியவர்கள் அன்னையார் காலில் விழுந்து அப்படிப்பட்ட துர்ப் பழக்கங்களைத் தொடமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்தார். பின் இங்கிலாந்தில் எத்தனையோ இடையூறுகள் வந்தும் தன் அன்னைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினார். மூன்று ஆண்டுகள் இங்கிலாந்தில் தங்கி பாரிஷ்டர் பரீட்சையில் தேறி இராச கோட்டையில் வழக்கறிஞர் தொழிலை நடத்திவந்தார். ஒரு வழக்கு விஷயமாக தென் னாப்பிரிக்கா சென்றிருந்தார். அங்கு வசிக்கும் இந்தியர்களை மிகத் தாழ்வாக நடத்தினர். இந்தியர்களைத் தம் அருகிலிருக்கவும் விடுவதில்லை. இந்நிலையைப் போக்க அறப்போர் தொடுத்து துன்புறுத்தாமை என்னும் படையை துணையாகக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்தார். அதில் வெற்றியும் கண்டார். அங்கு வசிக்கும் இந்தியர்கள் கற்றவரானாலும், கல்லாதவரானாலும் ஒரு பத்திரத்தில் கைவிரல் பத்தி மையொற்றி அடையாளம் வைக்கவேண்டுமென்று சட்டமிருந்தது. இந்த அவமானத்தைத் தாங்காமல் அதையும் எதிர்த்து வெற்றி கண்டார்.

அவர் வட நாட்டிலுள்ள ஒரு ஊருக்குப் போயிருந்தார். அங்கு கூட்டத்தில் ஹரி ஜனங்கள் தனியாக உட்கார்ந்திருப்பதை அறிந்து அவர்களுடன் சேர்ந்து உட்கார்ந்து கொண்டார். ஆகையால் நாமும் ஜாதி வித்தியாசம் பாராமல் எல்லோரும் ஒரே வயிற்றில் பிறந்த சகோதரர்களைப்போல் இருக்கவேண்டும். எல்லா மதத்தினரிடமும் ஒற்றுமையாக இருந்து மத விஷயங்களில் தன் பூரண உழைப்பையும் செலவழித்தார். **1914**-ம் வருஷம் நம் நாட்டிற்கு வந்து மக்களின் நன்மைக்காகவும் நாட்டின் விடுதலைக்காகவும் முப்பதாண்டுகள் உழைத்து வெற்றி கண்டார். **1947**-ம் வருஷம் ஆகஸ்ட் திங்கள் 15-ம் நாள் நள்ளிரவில் நம்மையும் நம் நாட்டையும்சூழ்ந்திருந்த அடிமையாட்சி என்னும் இருள் மறைந்தது. சுதந்திரம் என்னும் சூரியன் உதிக்கக் கண்டு அடிகள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார், நாடு சுதந்திரம் அடைந்து ஐந்து திங்களுக்குள்ளேயே அவர் மறைந்தார்.

நமக்கும் நம்முடைய நாட்டிற்கும் தம்முடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் கொடுத்துதவிய உண்மைத் தியாக மூர்த்திக்கு நாம் செய்யவேண்டியது அவர் காட்டிய வழி அதாவது சாதி வேறுபாடு, சமயப்பூசல், மதுபானம், தீண்டாமை, கல்வியின்மை ஆகிய பேய்களை நம் நாட்டினின்றும் வெளியேற்றி வெற்றி காண்பதே அவர் காட்டிய வழியில் நிற்றலுக்கு அடையாளமாம். அதுவே நமது நாட்டுக்கு நாம் செய்யவேண்டிய கடமையுமாகும்.

**A. Jeganathan**, III. D.

★

# விஞ்ஞானத்தினல் ஏற்பட்ட பலன்கள்

இன்றைக்கு உலகம் விஞ்ஞானத்தினுலேயே ஆளப்படுகிறது. ஆதியில் மனிதனின் தேவைகள் அதிகமாயில்லை. ஜனங்கள் அதிகரித்தபின் மனிதனின் தேவைகள் அதிகப்பட்டன. ஆகவே மனிதன் தன் பகுத்தறிவை உபயோகித்து பற்பல பொருள்களைக் கண்டுபிடித்துத் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய முனைந்தான். முதலில் விவசாய அபிவிருத்திக்காக எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பலபேர் செய்யும் வேலையை ஓர் இயந்திரம் விரைவாகவும் நன்ருகவும் சில மணி நேரத்தில் செய்கிறது. நாம் உடுத்தும் ஆடை, உபயோகிக்கும் பேனு, எழுதும் காகிதம் முதலியன எல்லாம் இயந்திரத்தினுலேயே செய்யப்படுகின்றன, விளக்குகள் எரிக்கவும், சமையல் செய்யவும், படம் காட்டவும், விசிறி சுழலவும், ஓர் செய்தியைப் பரப்பவும், பஞ்சாலைகளை ஓட்டவும் மின்சாரம் உபயோகப்படுகிறது. துரிதமாகப் பிரயாணம் செய்யவும், கடிதங்கள் அனுப்பவும், வியாபாரம் செய்யவும், சுற்றுப் பிரயாணங்கள் செய்யவும், புகை வண்டிகளும், கப்பல்களும், மோட்டார் வண்டிகளும், ஆகாயக் கப்பல்களும் உதவுகின்றன, இவையெல்லாம் விஞ்ஞானத்தின் பயனே! நோயாளிக்கு சிகிச்சை செய்ய விஞ்ஞானம் பேருதவியாயிருக்கிறது. தொத்து நோய்களின் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவைகளை பரவாமல் தடுக்கவும் சிகிட்சை செய்யவும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளைத் தவிர கிராமபோன், ரேடியோ, டெலிவிஷன், சினிமா, குளிர் அறைகள், ஆகிய சுக வாழ்வுக்கான சாதனங்களையும் விஞ்ஞானத்திலிருந்தே பெற்றிருக்கிரேம். மேலும் யுத்த காலங்களில் மக்களை அழிக்கக்கூடிய வெடி குண்டுகள், விஷப்புகை, அணுக்குண்டு ஆகிய சர்வ நாசப் பொருள்களையும் விஞ்ஞானத்திலிருந்து பெறுகிரேம். இவ்வாறு விஞ்ஞானத்தை துர்ப்பிரயோகம் செய்வது தவறு. அதை நற்பிரயோகம் செய்யவேண்டும். இவ்வாறு நாம் செய்தால் உலகில் சமாதானம் நிலவி நாடுகள் ஒன்ருெடொன்று நேசப் பான்மையுடன் இருக்கும். நாமும் சுகமே வாழலாம்!

**S. Santiago**, IV. A.,

# பேராசையின் பலன்

ஒரு கிராமத்தில் ஒரு வியாபாரி வாழ்ந்து வந்தான். அவன் ஒரு பேராசைக்காரன். அவன் சந்தைகளுக்குச் சென்று ஆடு மாடுகளை வாங்குவது அவைகளை மற்றொரு சந்தையில் கொண்டு போய்விற்று பணம் சம்பாதிப்பது, இன்னும் வட்டிக்குப் பணம் கொடுப்பது திரும்பவும் வட்டியுடன் பணத்தை வாங்கிவிடுவது. இவ்வாறு அவன் பணம் சம்பாதித்தான். ஆனால் அவன் எவ்வளவு பணம் சம்பாதித்தபோதிலும் அவனுக்கு திருப்தியாக இருக்காது. வியாபாரி அவனுக்காக உடைகள், நல்ல சாப்பாடு முதலியவைகளைக் கூட விரும்புவதில்லை. கிழிந்த சட்டை, ஒட்டுப் போட்ட வேட்டி, அழுக்கடைந்த ஒரு முண்டாசு, இவைகளே அவனுடைய உடைகள். விசேஷ தினங்களுக்குக்கூட புதுத்துணிகள் வாங்குவதில்லை. அவன் வீட்டுக் குழந்தைகளுக்குக்கூட நல்ல துணிகள் கிடையாது. எல்லோரும் அவனைப் போலவேதான் இருப்பார்கள்.

ஒரு நாள் அவனது கிராமத்திற்குப் பக்கத்தில் கூடிய சந்தைக்கு தன்னுடைய ஆடுகளை எல்லாம் ஓட்டிக்கொண்டு போனான். அன்று முழுவதும் அவனுடைய ஆடுகளை எல்லாம் விற்றான். விற்று ஆயிரம் ரூபாய் சேர்த்துக் கொண்டு மாலை நேரத்தில் வீட்டிற்குத் திரும்பினான். கொஞ்சத் தூரம் சென்றவுடன் இலேசாக குளிர் காற்று வீசத்தொடங்கியது. சிறிது நேரத்திற்கெல்லாம் மழை பெய்ய ஆரம்பித்தது. உடனே ஒரு மரத் தடியில் போய் நின்று கொண்டான். மழை பின்னும் அதிகமாகப் பெய்து அவனுடைய சட்டை வேட்டி எல்லாம் நனைத்து விட்டது. சிறிது நேரத்தில் மழை நின்றது. காற்று அடிக்கத் தொடங்கியது. நனைந்த உடைகளுடன் வீட்டை நோக்கி நடந்தான். இருட்டும் சமயம் வீட்டை அடைந்தான். வீட்டிற்குப் போனதும் நனைந்த உடைகளைக் கழற்றி விட்டு வேறு உடைகளை அணியலாமென்றால் உடைகள் கிடையாது. ஆகையால் ஒரு துண்டை இடையில் கட்டிக்கொண்டு ஆடுகளை விற்ற பணத்தை எடுத்துப் பெட்டியில் வைக்க எண்ணி சட்டைப்பையில் கையை விட்டான். சட்டைப்பையில் பணப்பையைக் காணவில்லை. பை அடியில் கிழிந்திருந்தது. அப்பொழுது இரவு தொடங்கி நீண்ட நேரமாகி இருந்த படியால், இனிமேல் பையைத் தேடிப் போகவும் முடியாது. ஆகவே அவன் விசனத்துடன் பணத்தை நினைத்து நினைத்து வருந்தினான். இரவு வெகுநேரமாகி விட்டபடியால் மனைவி குழந்தைகள் எல்லோரும் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிவிட்டார்கள். அவன் இரவு முழுவதும் விழித்துக்கொண்டேயிருந்தான். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தான். விடிந்ததும் அவ்வூரிலுள்ள மற்றொரு வியாபாரியிடம் சென்று யோசனை கேட்கலாம் என்று முடிவு செய்தான்.

மறுநாள் காலை அந்த வியாபாரியிடம் சென்று நடந்தவைகளைக் கூறினான். உடனே அந்த வியாபாரி பறை சாற்றினால் ஏதாவது பலன் கிடைத்தாலும் கிடைக்கும் என்று கூறினான். சரியென்று ஒரு பறைசாற்றுபவனிடம் சென்று சந்தைக்குச் சென்று வரும் வழியில் நம்மூர் ஆட்டு வியாபாரியினுடைய ஆயிரம் ரூபாய் கொண்ட பணப்பைகாணாமல் போய்விட்டதாகவும் அதை எடுத்து வைத்திருப்பவர்கள் கொண்டு வந்து கொடுத்தால் (50) ஐம்பது ரூபாய் இனாம் கொடுப்பதாகவும் கிராமம் முழுவதும் பறைசாற்றச் சொன்னான். அன்று கிராமம் முழுவதும் பறைசாற்றப்பட்டது.

இதைக் கேட்ட ஒரு குடியானவன் தான் கண்டெடுத்த பணப்பையை எடுத்துக்கொண்டு போய் வியாபாரியிடம் கொடுத்து அது சந்தையிலிருந்து திரும்பி வரும்பொழுது கிடைத்ததென்றும் அது தங்களுடையது என்று தெரிந்து எடுத்து வந்தேன் என்றும் கூறிவிட்டு பறைசாற்றியவன் கூறியபடி இனாம் தொகையாகக்கூறிய ஐம்பது ரூபாயைக் கேட்டான். இப்பொழுதுதான் அவனுக்குப் பழைய பேராசை வந்தது. வியாபாரி ஒன்றும் பேசாது பணப்பையை வாங்கி பையிலிருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான். அது சரியாக ஆயிரம் ரூபாய் இருந்தது. ஆனால் வியாபாரி குடியானவனுக்கு ஐம்பது ரூபாய் தராமலிருப்பதற்காக, குடியானவனிடம் டேய், இன்னும் நூறு ரூபாய் எங்கே? நூறு ரூபாயை எடுத்துக் கொண்டது மல்லாமல் இன்னுமா ஐம்பது ரூபாய் வேண்டும், என்று பயமுறுத்தினான். குடியானவனோ அதிலிருந்து நான் ஒரு ரூபாய் கூட எடுத்துக்கொள்ள வில்லையே என்று உண்மையைக் கூறினான். வியாபாரி ஐம்பது ரூபாய் கொடுக்கமுடி

யாது என்று கூறினன். மேலும் குடியானவன் நூறு ரூபாயைத்திருடிவிட்டதாக பஞ்சாயத்துச் சபையில் வழக்குத் தொடுப்பதாகவும் கூறினன். உடனே குடியானவன் பயந்துகொண்டு திரும்பிப் போய்விட்டான். வியாபாரி பஞ்சாயத்துச் சபையில் வழக்கைப்பதிவு செய்தால் இன்னும் நூறு ரூபாய் நமக்குக் கிடைக்குமென்று எண்ணி வழக்கைப் பதிவுசெய்தான்.

மறுநாள் பஞ்சாயத்துசபை கூடிற்று. அதற்கு வியாபாரி, பறைசாற்றுபவன், குடியானவன் ஆகிய மூன்று பேரும் வந்திருந்தார்கள். இவ்வழக்கின் முடிவைத் தெரிவதற்காக அக் கிராமத்தார்களும் கூடியிருந்தனர். கிராமத்திலுள்ள பெரியவர்கள் சபையில் அமர்ந்திருந்தார்கள்.

நீதிபதி முதலில் வியாபாரியை விசாரித்தார். வியாபாரி சந்தைக்குப் போய் ஆடுகளை விற்று ஆயிரத்தி நூறு ரூபாய் எடுத்துக் கொண்டுவரும் வழியில் ரூபாய் காணமல் போய்விட்டதாகவும், அதை எடுத்து வைத்திருப்பவர் யாராவது கொண்டுவந்து கொடுத்தால் ஐம்பது ரூபாய் தருவதாகவும் பறைசாற்றினதாகவும், குடியானவன் (100) நூறு ரூபாயை எடுத்துக் கொண்டு ஆயிரம் ரூபாயைத் தந்ததாகவும், பாக்கி நூறு ரூபாயைத் தரவில்லை என்றும் கூறினன்.

பிறகு நீதிபதி பறைசாற்றியவனை விசாரித்தார். பறைசாற்றுபவன், வியாபாரியின் ஆயிரம் ரூபாய் கொண்ட பை காணமல் போய்விட்டதாகவும் அதை எடுத்துக்கொடுப்பவருக்கு ஐம்பது ரூபாய் இனம் தருவதாகக்கூறியதாகவும் வியாபாரி பறைசாற்றச்சொன்னர். நானும் அதன்படி பறைசாற்றினேன் என்று உண்மையைக் கூறினன். பிறகு குடியானவனை விசாரித்தார். குடியானவன் வியாபாரியினுடைய ரூபாய் நிறைந்த பணப்பை தான் சந்தையிலிருந்து வரும்பொழுது வழியில் கிடைத்ததாகவும் பின் பறைசாற்றியதை அறிந்து அதை அவனிடம் கொடுத்துவிட்டு ஐம்பது ரூபாய் கேட்டதற்கு கொடுக்கவில்லை என்றும் உண்மையைக் கூறினன்.

நீதிபதி மூன்றுபேர்களும் கூறியவற்றைக் கேட்டுவிட்டு வியாபாரியிடமுள்ள ஆயிரம் ரூபாயை உடைய பணப்பையை வாங்கி குடியானவனிடம் கொடுத்தார். பிறகு வியாபாரியை நோக்கி உன்னுடைய பணப்பையில் இருந்த பணம் எவ்வளவு என்று கேட்டார். வியாபாரி ஆயிரத்தி நூறு ரூபாய் என்றான். பிறகு நீதிபதி பறைசாற்றுபவனிடம் நீ எவ்வளவு ரூபாய் காணமற்போய்விட்டது என்று பறைசாற்றினய்? என்று கேட்டார். பறைசாற்றுபவன் ஆயிரம் ரூபாய் என்றான். பிறகு நீதிபதி வியாபாரியை நோக்கி, நீ உன்னுடைய ஆயிரத்தி நூறு ரூபாய் உள்ள பணப்பையை தேடிக்கொண்டுபோ. இப்பையில் ஆயிரம் ரூபாய் இருப்பதால் இது உன்னுடையதல்ல என்று அவருடைய முடிவைத் தெரிவித்தார்.

சபையும் கலைந்தது

குடியானவன் பெற்ற ஆயிரம் ரூபாயைக் கொண்டுபோய் அதில் இருநூறு (200) ரூபாயை பறைசாற்றியவனுக்கு கொடுத்தான். மீதியைக் கொண்டு சுகமாக வாழ்ந்தான்.

பறைசாற்றியவனும் சுகமாகவே மனைவி மக்களுடன் வாழ்ந்துவந்தான்.

வியாபாரி அவனுடைய ஆயிரம் ரூபாயையும் இழந்தான். அத்துடனில்லாமல் அதே விசனமாக அவன் வியாதியாய்க் கிடந்து இறந்தான்.

"பேராசை பெருநஷ்டம்"

**வே. சீனுவாசன், III I.**

## தமிழ்

தமிழே! தமிழே! செந்தமிழே!
தரணியில் புகழ் பெற்ற பூந்தமிழே!
முடிமன்னர் மூவரின் தண்டமிழே!
முனிவன் வளர்த்த பைந்தமிழே!
சங்கத்தில் தழைத்து நின்றாய்நீ!
தரணியெல்லாம் புகழ் கொண்டாய் நீ!
உண்மையில் உன்னைப் புகழ்ந்திடவே!
உற்றார் ஒருவரும் ஈங்கிலையே!

**வ. முருகேசன், VI. E.**

# 'கிளிக்கண்ணி' மெட்டு

1. நாடு நலமாக வேண்டும்
நாட்டு மக்கள் பிழைக்கவேண்டும்
சுரண்டல் ஒழியவேண்டும்—மனிதா
சுபிட்சமாய் வாழவேண்டும்.

2. பாடுபடும் பாட்டாளிக்கு
பாட்டுக்குத் தகுந்த கூலி
பணக்காரர் கொடுக்கவேண்டும்—மனிதா
பண்பாக வாழவேண்டும்.


3. நேர்மை ஆட்சி நிலவவேண்டும்
நேரு தலைமை ஆகவேண்டும்
ஊருணி நிறையவேண்டும்—மனிதா
ஊக்கமாய் வாழவேண்டும்.

4. இன்பத்திலிருந்தபோதும்
துன்பத்தில் துயின்றபோதும்
கருமத்தை கைமேற்கொள்ளு—மனிதா
தருமத்தை தலைமேற்கொள்ளு.

5. ஊருக்குழைத்தபோதும்
உபகாரம் செய்தபோதும்
உள்ளன்பு இல்லையானால்—மனிதா
உபகாரம் ஆகுமோடா.


6. பணத்தினால் பாவங்கொண்டு
சினத்தினால் சீற்றங்கொண்டு
அறலோகம் நினைக்காயானால்—மனிதா
பரலோகம் சேர்வதெப்போ?

தி. நாச்சிமுத்து, V. D.




Staff Tug-of-war

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS




House Flags-hoisting




March-past

*Photos : B. S. Mohamed Ali*

# SCHOOL VIEWS




CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS



'Mani' the Hosteller

*Photo: by a hosteller*



*Photos: B. S. Mohamed Ali*

PUBLIC LIBRARY
JUN 1955
MADRAS

# உத்தமர் காந்தி

சொல்லில் அடங்குவதில்லை நினைவுக்கு நிற்பதில்லை, சற்பனைக்கு எட்டுவதில்லை, காந்திமகாத்மாவின் பெருமை. கவிதை திகைக்கிறது. காவியம் திணறுகிறது, கலைகள் தலைவணங்குகிறது- காந்தியடிகளின் அற்புதசரித்திரத்தை எண்ணி. இமயத்தைக்காட்டிலும் உயர்ந்து நின்றவர் தாயை காட்டிலும் கருணை உள்ளவர். உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி.

பாரத புண்ணிய பூமியிலே இன்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன்பு 1869-ம் வருஷம் அக்டோபர் மீ 2ம் உ இந்த உலகத்தை உய்விக்க அவர் அவதரித்தார். அவர் அடிமைத்தனம் என்னும் கொடிய பூதத்தின் வாயிலிருந்து இந்திய மக்களைக் காப்பாற்றினார். தீண்டாமை, மதுபானம் என்ற அரக்கர்களிடமிருந்து நம்மை காப்பாற்றினார்.

ஒருவர் நமக்கு உதவிசெய்தால் அதைஉயிர் உள்ளவரைக்கும் மறக்கக் கூடாது என்பது மனித குலத்தின் தர்மம். மக்களில் உயர்ந்தோர் அனைவரும் இத்தர்மத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள் அதாவது.

"தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார் ;

என்று தமிழ்மறை சொல்லுகிறதன்றோ ;

காந்திமகாத்மா நமக்கு செய்திருக்கும் நன்றி தினைத்துணையானதா ? அற்பசொற்பமானதா ? அதற்கு ஈடு இணை சொல்ல உலகில் வேறு ஒன்று உண்டா ?

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது ; அல்லவா ?

இந்தியாவில் உள்ள நாற்பது கோடிமக்களையும் நாற்பதுகோடி புழுக்களாக மதிக்கிறார்களே அயல்நாட்டார் என்று விவேகானந்தர் அன்று கதறினார். ஆனால் காந்திமகாத்மா தோன்றி இந்திய மக்களை அந்தநிலையிலிருந்தும் உயர்த்தினார். மாநிலத்தில் நம்மை மனிதர்களாக ஆக்கினார், உலக சரித்திரத்தில் கண்டும் கேட்டும் அறியாத அஹிம்சாதர்ம முறையில் பாரத நாட்டைச்சுதந்திரம் பெறச்செய்தார். இதன் மூலம் பாரததேசத்தை உலகத்துக்கே வழிகாட்டும் ஜோதியாக விளங்கச் செய்தார். அத்தகைய மகாபுருஷரை நாம் மறக்க முடியுமா ? அல்லது அவர் நமக்குச் செய்த நன்றியைத்தான் மறக்கமுடியுமா ? ஆகவே நாம் காந்திமகானுக்குச் செலுத்தக்கூடிய நன்றி அவர் காட்டிய வழியில் நடந்து, அவர்போதித்த உபதேசங்களைக் கடைப்பிடித்து மேலும் மேலும் வாழ்க்கையில் உயருவோமாக !

எஸ். கிருஷ்ணன், VI C.

# மனம் வேறு செய்கை ஒன்று

முன்னொரு காலத்தில் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் அல்லும் பகலும் இறைவனது தியானத்தில் ஈடு பட்டவராய்க் காலம் கழித்து வந்தார். அவர் சிறு துரும்புக்கும் தீமை செய்யார். மரத்திலிருந்து உதிர்ந்த பழங்களையே புசிப்பார். பலர் அவரை அணுகிப் பெரும் பேறு பெற்றனர். அவர் குடிசை யொன்றில் வாழ்ந்து வந்தார். அவருக்கு இவ்வுலகில் அவசியமாய் இருந்த பொருள்கள் முழத்துண்டு ஒன்றே. ஆனால் அவரை ஒரு பெரிய மகானாக போற்றிய, சீடர் பலர் அவரைக் கேளாமல், கட்டில் படுக்கை பல ஆடைகள் இவற்றை அவரது குடிசையில் கொணர்ந்து வைத்தனர். அன்பர் மனமுவந்து அளிக்கும் பொருளை ஏற்க மறுத்தால் அன்பரது மனம் புண்படுமோ என்ற தயாள சிந்தனையினால் அப்பெரியார் அப்பொருள்களைத் தம்மிடமே வைத்திருந்தார். ஆனால் அப்பொருள்களை அவர் உபயோகித்தாரில்லை.

முனிவரது குடிசை எப்பொழுதும் திறந்தே கிடக்கும். ஒரு நாள் இரவில் அவர் நித்திரை செய்து கொண்டிருந்த போது சில திருடர்கள் குடிசையினுள் நுழைந்து துளவினர். கிடைத்தது ஒன்றும் இல்லை. ஆனால் அக்குடிசையின் ஓர் மூலையில் கட்டில் ஒன்றுசாற்றி வைத்திருப்பதைக்கண்டனர். அதைத் தூக்கிக்கொண்டு போயினர். திருடர்கள் குடிசையை விட்டு அகன்ற சிறிது நேரத்திற்கெல்லாம் கண்விழித்த முனிவர் திருட்டுப்போன பொருள் என்ன வென்பதை கண்டார். உடனே படுக்கைதலையணை இவற்றை எடுத்துக்கொண்டு சென்று திருடரை அணுகி அன்பர்களே, கட்டிலை வைத்துக்கொண்டு என்ன செய்வீர்கள் இதோ பாருங்கள் படுக்கை, தலையணை இவற்றையும் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள் என்றார். திருடர்கள் ஸ்தம்பித்துப் போயினர், முனிவரது காலில் வீழ்ந்தனர். கட்டில், படுக்கை இவற்றை குடிசை கொண்டு சேர்த்தனர். (இது முனிவர் நிலை).

முனிவருக்கு மிகவும் பிரியமான சீடர் ஒருவர் இருந்தார். மேலே விவரித்த சம்பவம் நடந்த பல ஆண்டுகளுக்குப்பின் சீடர் ஒருவர் புண்ணிய ஸ்தலங்களை சுற்றிப் பார்க்க கையில் சிறிது பணத்துடன் குதிரைமீதேறிப் போனார். வழியில் திருடர் பலர் வழிமறித்து அவருடைய பணம் குதிரை இவற்றைப்பிடுங்கி சென்றுவிட்டனர். சீடர் பெரும் துயருற்றார் என்ன செய்வதென்று அவருக்குப் புலப்படவில்லை. கொஞ்ச நேரத்திற்குப்பிறகு பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. குடிசைக்கு திருடர் வந்த பொழுது தமது குருநாதர் நடந்து கொண்ட முறையை நினைத்தார். குதிரைச்சவுக்கு கையில் இருப்பதைக் கண்டார். சீடர் உடனே திருடர்களிடம் ஓடி அன்பர்களே இதோ பாருங்கள் குதிரைச் சவுக்கு, குதிரையை மட்டும் வைத்துக்கொண்டு என்ன செய்வீர்கள் என்றார். திருடர்கள் சவுக்கைப் பற்றிக்கொண்டு நன்றாக அடித்தனர். பிறகு சீடரை அங்கேயே கிடத்தி விட்டு சென்று விட்டனர்.

சீடர் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினார் "ஈதென்ன உலகம்" ஈசனுடைய லீலையில் நியாயம் என்பதே இல்லை. குருவைப்பின் பற்றிய சீடர்க்கு நேர்ந்த கதி இது வாயிற்றே. ஒரே மாதிரியான செய்கைக்கு இக்கதி என்று எண்ணி வருந்தினர். அச்சமயம் "அசரீரி வார்த்தை தோன்றியது. அன்பரே உன்னுடைய மனதை நன்றாய் ஆராய்ந்து பார். உண்மைவிளங்கும் குருநாதர் படுக்கையை திருடருக்கு ஏன் கொண்டு போய் கொடுத்தார். திருடர் மீதுள்ள அன்பினால் ஆனால் நீ ஏன் சவுக்கை கொடுத்தாய். அவர்கள் மீதுள்ள அன்பினாலா? அல்லது பணத்தையும் குதிரையையும் மீண்டும் பெற வேண்டுமென்ற ஆசையினாலா? கட்டிலை மீண்டும் பெற உன் குருநாதர் ஆசையுற்றாரில்லை. ஆனால் நீ யோ மீண்டும் உன் குதிரை பணம் இவற்றைப் பெற விரும்பினாய். உனது குருநாதர் மனம் பரிசுத்தமானது. உன் மனம் உன்னையே ஏமாற்றியது. குருவின் செய்கையும் உன் செய்கையும் ஒன்றாகவே தோன்றுகின்றன. ஆனால் இருவர் நோக்கங்களும் ஒன்றாகா.

S. Meenakshisundaram, IV E.

... A PUBLIC LIBRARY
- JUN 1955
MADRAS

# நரைக்கு மருந்து

நரைக்கு மருந்து! நரையை ஒழிப்பதற்குத் தான் மருந்தே அன்றி நரைப்பதற்காக மருந்தல்ல! எனவே நரைப்பதை தடுக்கும் மருந்து என்று பொருள் படும். இம் மருந்து நரைக்கு முன் நரைப்பதைத் தடுப்பது. நரைத்தபின் நரையைத் தடுக்கும் ஆற்றல் இம்மருந்திற்கில்லை. இது வெள்ளம் வருமுன் அணை போடுதல் போன்று சிறப்புடையதாகும். வெள்ளிக்கம்பி போன்று நரைத்த மயிரைக் கருவண்டு போல கறுக்க வைக்கும் தன்மையுடைய தில்லை. நரை உண்டாக்காமலே தடுக்கும் ஆற்றலுள்ளது. "ஒருவனை குற்றம் செய்யவிட்டு பின் அவனைத் தண்டித்து நல்வழிப் படுத்துவதை விட அவனைக் குற்றம் செய்யவிடாமல் முதலிலிருந்து பார்த்து நல்வழிப் படுத்துவதே மேலல்லவா?" அதைப்போன்றதே இம்மருந்தும் எங்கே விற்கின்றது, இம் மருந்து? என்ன விலை? எனக்கும் கொடுப்பார்களா? என இளங் கிழவர்களும் தாத்தாக்களும் விசாரித்து அலையாதீர்கள். விலை கொடுக்கவேண்டாம். முன் விழுந்து கொண்டும் வரவேண்டாம். இதோ அம் மருந்தைப் பற்றி நானே கூறி விடுகிறேன்.

தற்கால நவீன உலகில் ஹேர் ஆயில்களும் ஸ்னோக்களும் முகப்பவுடர்களும் நிறைந்து இள மங்கையரும் இளவாலிபர்களும் பூசி சிறிது காலத்திற்குள்ளேயே தம் முகப்பொலிவிழந்து நரைப்பருவத்திற்கு உள்ளாகின்றனர். கருமணலெனவும் கருவண்டு எனவும் கவினுடன் விளங்கும் மயிர் அத்தன்மை நீங்கி வெள்ளிக்கம்பி போன்றுவளரத் தொடங்கியுள்ளது. அந்த நரையை நீக்க பல்வகை மருந்துகளைக் கையாளுகின்றனர். "24 மணி நேரத்தில் நரை நீங்கும்...உத்திரவாதம்...உலகப் புகழ் பெற்றது..." என்ற விளம்பரங்கள் பத்திரிக்கையில் பரவிக்கிடக்குப். இவைகளில் மயங்கி வீழ்ந்தும் அருமையான கூந்தல்களை அழித்துக் கொள்கின்றார்கள்.

முன்னைய நம் தமிழகத்தில் மூதறிஞர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்களில் பாண்டிநாட்டிலுள்ள, ஒழுக்கம் வாய்ந்தவரும், புலவர்களில் சிறந்தவருமான பிசிராந்தையார். இளமைக்காலந் தொட்டே இனிய குணங்கள் நிரம்பப்பெற்றவர். அக் காலத்திய சோழநாட்டு மன்னனாகிய கோப்பெருஞ்சோழனும் இவரும் உயிர் நண்பர்களாய் விளங்கினர். ஒருவரை யொருவர் தம் வாழ்நாட்களில் எப்போதும் பார்த்திலர், பழகியும் அறியார் ஆனால் நண்பர்களாயிருந்தனர். இதிலிருந்து ஆந்தையாரின் அறிவும் நட்பின் அருங்குணமும் புலப்படும்.

இத்தகைய பிசிராந்தையார், ஆண்டில் மூத்தவராயினும் ஆண்மையில் இளையவரே. இவரது தலைமயிர் கருவண்டுகளை ஒத்தது. ஒரு சமயம் ஏதோகாரியமாக சென்றுகொண்டிருந்த இவரைப் பார்த்த இரு வழிப்போக்கர் இவரைச் சந்தித்து "ஐயா, தங்கள் வயது என்னவாயிருக்கும்? என்று விசாரித்தனர். அவர்கள் குரலில் ஆச்சரியமும் வியப்பும் நிறைந்திருந்தன. ஆந்தையார், பார்த்தார். தன்னைப்பற்றி இவர்களுக்கு ஏன் இவ்வளவு அக்கரை என நினைத்தார். ஆயினும் அதைப்பற்றி கேட்கவில்லை. "அறுபது இருக்கலாம்," என்று பதிலளித்தார்.

வழிப்போக்கர்கள் ஆச்சரியம் அடைந்தனர், "ஐயா"! தாங்கள் வயதில் முதிர்ந்திருந்தாலும் தங்களின் தலைமயிர் இன்னும் நரைக்கவில்லையே? எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கின்றதே! இதன் காரணத்தை நாங்கள் அறியலாமா?" என்றனர்.

"ஐயா! என்னைப் பார்த்த ஒவ்வொருவரும் இவ்வாறுதான் ஆச்சரியப்படுகின்றனர். அதற்காக வருந்துவது கிடையாது. காரணம் யாது எனக் கேட்கின்றீர்கள், இதோ சொல்லுகின்றேன்" என்றுகூறிய காரணம்தாம் இப்பாட்டாக உருப்பெற்றது.

"யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகியர் என வினவுதி ராயின்
மாண்ட வென்மனையொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனைய ரென்னிளை யரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்றலை
ஆன்ற விந்தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும், ஊரே".

இப்பாடலின்கருத்தாவது, மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய எனது மனைவியும் புதல்வர்களும் என்னைப்போல் அறிவு நிரம்பியுள்ளனர். நான் எதனைக் கருதுகின்றேனோ அதனையே கருதி செய்வார்கள் என் பணியாட்கள். என் நாட்டு அரசனோ அநீதியின்றிச் செங்கோல் செலுத்துகின்றான். இதனினும் மேலாக நான் இருக்கின்ற ஊரில் நூல்களை நன்கு கற்று ஐம்புலன்களை அடங்கி வாழும் கொள்கையுடைய சான்றோர் பலர் இருக்கின்றனர் அவர்களுடன் நான் விடாது பழகுகின்றேன். இந்நலங்களால் கவலை என்பது கனவிலும் கிடையாது. இதனால் நரை என்னைப் பாதிக்காமலிருக்கின்றது. இதுதான் " நரைக்கு மருந்து " என்றார்.

வாழ்க்கையை நடத்தும் முறைகளாலேயே வாட்டும் நோய்களை விரட்டித்தள்ளிய தமிழ் அறிஞர் குழுவைச்சார்ந்த ஓர் மேதாவியின் மருந்து இது என்பது மட்டும் ஞாபகமிருக்கட்டும்.

" மருந்தென வொன்று வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி யுணின் " என்ற வள்ளுவர் வாக்கும் இதனை வலியுறுத்துகின்றதல்லவா ?

S. சௌந்திரபாண்டியன் VI C.

★

# அறம் செய்ய விரும்பு

இது ஔவைப் பிராட்டியாரால்பாடப்பட்ட ஓர் அடிச் செய்யுள். நாம் தருமங்கள் செய்து அதனால் வரும் இன்பத்தை அடையவேண்டும் என்பது.

பொருள் இல்லாதவருக்கு பொருள் உள்ளவர்கள் கொடுத்து அவர்களையும் ஆதரித்து இவ்வுலக வாழ்வில் அவர்களையும் ஈடுபடச் செய்ய வேண்டும்.

'செல்வத்தின் பயனே ஈதல்' என்ற முதுமொழிப்படி பொருள் உள்ளோர் இல்லாதவருக்கு கொடுக்கவேண்டும் என்பது ஔவையின் கருத்து.

'அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

நாம் பிறருக்கு தருமங்கள் செய்தால் இவ்வுலக வாழ்வில் புகழையும், மறுவுலகில் பேரின்பத்தையும் அடையலாம். இவ்வுலக வாழ்வில் தருமம் செய்யாதவர்கள் மேலுலகில் இன்பத்தை அடைவது கடினம். மேலும் ஒருவர்க்கொருவர் நாம் கொடுத்து உதவினால்தான் நாமும் நம்மைச் சேர்ந்தவர்களும் வாழலாம். தான் மட்டும் வாழ வேண்டும் என்று நினைத்தால் முடியாது. தன்னிடத்தில் உள்ள செல்வமானது தன் பெயருக்கேற்ப (செல்வோம்) அது தன்னை விட்டு சென்று விடுமேயானால் பிறகு அவனும் பிச்சை எடுக்கத்தான் நேரும். அப்பொழுது தானும் பிறரிடம் இருந்து பொருள் அடைவது கடினம். அதனால் இவ்வுலகில் புகழிருக்காது.

'இறைத்த கேணி ஊறும்', என்றபடி ஒருவன் தருமம் செய்தால் நம் செல்வம் குறையாது. ஆனால் வளரும். நம் புகழ் வளரும் அதனால் இவ்வுலகத்தில் அடையவேண்டிய புகழை அடைய ஏதுவாகும். அதனாலேயே வள்ளுவரும் புகழ் அடைவதற்கு ஏதுவாகிய அறத்தை அதற்குமுன் அதிகாரமாக அமைத்தார்.

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு'

என்று செந்நாப் புலவரும் கூறுகிறார். அதா

வது நாம் இவ்வுலகில் செய்யும் காரியங்களில் அறமும் ஒன்ருகும். புகழைத் தருவதற்கு அதை விடச் சிறந்த காரியம் வேறு ஒன்றும் இல்லை. நாம் பிறருடன் பகிர்ந்து உண்ணும் பொழுது நாம் நம்மாலியன்றதையாவது செய்யவேண்டும்.

'எட்டி பழுத்தால் என்ன? ஈயாதார் வாழ்ந் தால் என்ன?' என்ற முதுமொழிப்படி நாம் அதிக செல்வந்தராக இருந்தும் பிறருக்கு கொடுக்காமல் நாமும் உண்ணுமல், எட்டி மரமானது எவ்வாறு பழுத்து மணம் வீசினுலும் அதனிடம் ஈ, எறும்பு, பறவை முதலியன யாவும் நெருங்காதோ, அது போல் அல்லாமல் நாம் பிறருக்கு தருமம் செய்து நாமும் சாப்பிடவேண்டும். நாம் பல கஷ்டப் பட்டு பணத்தைத் தேடி ஒருவருக்கும் கொடுக் காமல் நாமும் உண்ணுமல் வைத்திருந்தால், எப்படியாகும் என ஒளவையார்

'பாடுபட்டுத் தேடிபணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டே
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்'

என்று கூறுகிருர். அதாவது நாம் பாடுபட்டு தேடிய பணம் பிறரால் பல தீய வழிகளிலும் நாம் இறந்தபின் செலவழிக்கப்படும். முன்பே நாம் நல்வழியில் செலவழித்தால் நமக்கும் அப் பணத்திற்கும் நன்மை ஏற்படும். ஆனுல் பின் தானும் பிறருக்கு ஈயாததால் தனக்கும் புகழோ, பேரின்பமோ கிட்டாது. அச்செல்வத்திற்கும் பயன் இல்லை.

ஓர் இடத்தில் வள்ளுவர் கூறுவது

'அகனமர்த்து செய்யாளுறையும் முகனமர்த்து
நல்விருந்தோம்பு வானில்.'

அதாவது ஒருவன் தன் வீட்டிற்கு வரும் விருந்தினனுக்கோ, யாசகனுக்கோ மனம் கோணுமல் முகமலர்ச்சியுடன் அதாவது உள்ள மும் செய்கையும் ஒன்றுபட்டு செய்தால் அவன் வீட்டில் செல்வம் தங்கும் என்று கூறுகிருர்.

ஒரு பெண் தான் சோறு போடவேண்டும் என்று மனம் இல்லாமல் ஒளவையாருக்கு அன்னம் இடுகிருள். இதை அறிந்த ஒளவையார் அவள் கொடுத்த அன்னம் ஒளவையின் பசியைபோக் காமல் அவர் உடம்பையே சுட்டு எரிக்கிறது என்று கூறுகிருர். ஒருவன் பிறருக்கு கொடுக்காது இருப்பவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளு பவன் ஆகிருன். அவனுக்கு இம்மை மறுமை இன்பங்கள் எட்டாது. நாம் பிறருக்கு கொடுத்து அதனுல் வரும் பயனை அடைந்து இன்பமடைவதே இன்பமாகும். அது இன்றி இருத்தல்,

'கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களமும்-பார்த்
துண்ணும் தன்மை இலார் அயலிருப்பும்
நன்மை பயத்தல் இல' [இம்மூன்றும்

என்று திரிகடுகம் கூறுகிறது. அதாவது பிறருக்கு கொடுத்து தானும் உண்ணுத உலோபிகள் அருகில் குடி இருந்தால் அவர்களால் ஒரு நன்மை யும் இல்லை என்று கூறுகிருர்.

முன் காலத்தில் நம் நாட்டில் பல வள்ளல் களும், கொடையாளிகளும் இருந்திருக்கிருர்கள். அவர்கள் தங்களுக்கு இல்லை என்ருலும் பிறருக்கு கொடுத்து உதவுவார்கள்.

உதாரணமாக குமண வள்ளல் தன் தம்பி யால் நாடு கடத்தப்பட்டு இருக்கையில் தன்னிடம் வந்த புலவருக்கு தன் தலையையே பரிசாக கொடுக்க எண்ணினுர். அதியமான் அஞ்சி தான் அரிதுபெற்ற நெல்லிக் கனியை ஒளவைக்கு கொடுத்து அவள் அதிக நாள் உயிருடன் வாழ வேண்டும் என்று நினைத்தான். சடையப்பவள்ளல் ஈழ நாட்டு மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க ஆயிரம் கப்பல் நெல்லை ஏற்றி விடுத் தான். இன்னும் பல புலவர்களும் அரசர்களும் பலரைப் பாதுகாத்தார்கள்.

அளவுக்கு மீறி தருமம் செய்தால் பிறகு தன்னுல் தருமம் செய்யமுடியாது போய்விடும். அவரவர் தகுதிக்குத் தக்கபடி அறம் செய்ய வேண்டும்.

'அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சு' என்றபடி அறம் செய்யலாகாது.

ஆகையால் நம் நாட்டின் தமிழ் மூதாட்டி யான ஒளவையின் பெருமையை எவ்வாறு உரைப் பது? ஒரு பெரிய ஆராயத்தக்க விஷயத்தை ஒரு சிறு வாக்கியத்தில் தன் நா வன்மையால் சிறுவர் கள் படித்து அறியும்படி செய்துவிட்டார். ஆகை யால் நாமும் அவரைப் பின்பற்றி அவர் கூறிய வழியில் நடப்போமாக!

வ. முருகேசன், VI E.

# அரசியலும் மாணவரும்

அரசியல் என்பது சுழல்களும், அலைகளும் மலிந்து எல்லையற்ற வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் காட்டாறு.

இதிலே; பல்கலை வல்லாரும், பொருளாதார நிபுணர்களும், ராஜ தந்திரம் என்ற பஞ்ச தந்திரங்களையும் அறிந்தவர்களும், பல துன்பங்களையும் சகிக்கும் தன்மை வாய்ந்த வீரர்களும், உயிரைத் துரும்பென மதிக்கும் துறவிகளும் இறங்கப்பயப்படுகின்றனர். இறங்கினாலும் பொறாமை என்ற அக்காட்டாற்று அலைகளாலும், பஞ்சம் என்ற ஆற்றின் நடுவில் உள்ள முட்டுக்கல்லாலும், அராஜகம் என்ற ஆற்றின் சுழற்சியாலும் அவதி பல அடைகின்றனர். ஏன்; சில சமயங்களில் நாட்டில் ஏற்படும் குழப்பம் என்ற அளவு கடந்த பிரளயத்தினால் மூழ்கடிக்கவும் படுகின்றனர்.

அவ்வாறிருக்க பசுங்குழந்தைகளாகிய நாம்; சொற்ப விஷயங்களை அறிந்துள்ள நாம், இவ்விடத்தில் அலைந்தோடும் காட்டாற்றில் விடப்பட்ட அறுகம் புல் சருகை ஒக்கிறோம். பரந்த அனுபவம் வாய்ந்த பெரியோர்களே பரிதவிக்கும் அரசியலிலே நாம் தலையிட்டு நம் அருமந்த காலத்தை வீணாக்குவது, ஓர் பசுங்கன்று பருத்த பகடு இழுக்கும் பாரத்தை இழுக்க முயல்வதாகும்.

சிறுவர்களாகிய நமக்கு நாட்டுப்பற்று வேண்டும். ஆனால் நாடாள்வோரைக் குறை கூறுதல் வேண்டாம். நம் வயது இன்பத்தை விரும்புவது, எதையும் ஆழ்ந்து ஆராயாமல் முடிவுகட்டும் தன்மையது. ஆகவே நாம் படம் எடுத்தாடும் அழகான நச்சரவத்தைக்கூட அணைத்துக்கொள்ள முயல்வோம். பின்வரும் ஆபத்தை ஆராயாமல். அதேபோல் துன்பத்தையும் கடின உழைப்பையும், வெறுப்போம். இது இளைஞர்களுக்கே உள்ள பண்பு.

எந்தவிடத்தில் கவர்ச்சியுள்ளதோ அந்த இடத்தில் உள்ள அசுத்தமோ, அருவருப்போ நமக்குப் புலப்படாது. அதேபோல் சிரிக்கச் சிரிக்கப்பேசி நம்மைத் தம் வலையில் வீழ்த்தி நாட்டில் குட்டிக் கலகங்களையும், துன்மார்க்கச் செயல்களையும் இந் நாளில் தூண்டிவிடும் பல கும்பல்கள் கிளம்பியுள்ளன.

இளைஞர் சமூகத்திற்கே ஏற்படும் எண்ணற்ற இன்னல்களைப்போக்க வேண்டுமானால் நாம் நம் கருமமே கண்ணாக வேண்டும்.

ஆனால் நீவிர் உலக விஷயம் அறியாமல் ஏட்டுக் கல்வியே கல்வி என்று நினைத்துப் புத்தகப் புழுவாக இருக்கும்படி நான் கூறவில்லை. பல விஷயங்களையும், அறிய முயல வேண்டும் என்றாலும் நல்லவற்றையே நம் மனத்திற் கொண்டு அல்லவற்றை அகற்றல் வேண்டும். இஃதே அறிவிற்கு அடுக்கும்.

பல அறிவாளிகளின் சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும். பல தரப்பட்ட சிறந்த நூல்களைப் பயிலல்வேண்டும். ஆனால் இவ்விடத்தில் நாம் பள்ளிப் பிள்ளைகளாக இருக்கவேண்டுமே ஒழியப் படை வீரர்கள் அல்ல என்பதை உணர வேண்டும்.

அஹிம்சையின் அஸ்திவாரமாகிய அண்ணல் காந்தியடிகள் கூறியதை நாம் இவ்விடத்தில் பின்பற்றவேண்டும். மாணவர்கள் கட்சி வாதங்களிலும், அரசியலிலும் கலந்து கொள்ளக்கூடாது என்றதை நாம் என்றும் நம்மாணவ வாழ்க்கையில் மறத்தல் கூடாது.

அரசியலில் ஈடுபட்டால் மட்டும் ஒருவன் தேசபக்தன் ஆகிவிடமுடியாது. அண்ணல் உபதேசப்படி தோட்டி வேலை செய்யவும் தயாராக இருப்பவனே உண்மைத் தேசபக்தன்.

சாதிச்சண்டைகளையும், மதச்சண்டைகளையும் தகர்த்தெறிய முயல்பவனே தேசபக்தன்.

சகோதரர்களே! நம் கடனை நாம் இனிது முடிப்போமே யானால் அதுவே நாட்டின் முன்னேற்றத்திற்கு வழியாகும்.

கற்கக் கசடறக், கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—(உத்தரவேதம்.)

**Palaniappan**, IV B.

# துறவி இளங்கோ

எங்கள் பள்ளி மாணவர் சங்கத்தில் அன்று "சிலப்பதிகாரமும், ஆசிரியர் இளங்கோவும்" என்பது பற்றிப் பல மாணவர்கள் பேசினர். எல்லா மாணவர்களும் ஒரேமுகமாக சிலப்பதிகாரம் என்ற அப்பழம் பெருங்காப்பியத்தையும், அதன் ஆசிரியர் இளங்கோவடிகளையும் போற்றினர். தலைவர் அந்நூலின் அரும்பெருங் கருத்துக்களையும், கண்ணகியின் கற்பையும், மாதவி தன் மாட்சியையும், கவுந்திஅடிகளின் கனிந்த அன்பையும், பாண்டியனின் நேர்மையையும், கோவலனின் குடிச்சிறப்பையும், நாம் என்றென்றும் போற்றி மகிழவேண்டும் என்று கூறி அமர்ந்தார். வந்தனோபசாரத்துடன் குழு இனிது கலைந்தது.

*　　*　　*

நான் வீட்டை அடைந்து, சிந்தனையில் திளைத்தவனாய் அன்றைய நிகழ்ச்சிகளை ஆராய்ந்துகொண்டிருந்தேன். சிந்தனை! சிந்தனை! முடிவற்ற சிந்தனை! சிந்தனை என்ற குதிரை என்னை நித்திரை என்ற சிறு திட்டில் தள்ளியது. நித்திரைத் திட்டினின்றும் உருண்டு கனவு என்ற பள்ளத்தில் வீழ்ந்தேன்.

ஏதோ ஒரு பெரு ஒளி, அதைத் தொடர்ந்து இடியோசை போன்ற பேரொலி. பயங்கரப் புயல்; ஆ என்று வாயைத் திறந்து அப்புயல் என்னை அடித்துச்சென்றது தன் வழியே. வானில் பறந்தேன், மலைகள் பலவற்றைக் கடந்தேன், சமவெளிகள் சிலவற்றைத் தாண்டினேன். இன்னும் எங்கெங்கேயோ அடித்துச் செல்லப்பட்டேன். முடிவு இறப்பா...? இல்லை இன்னும் இவ்வுலகில் சிலநாள்......? எதையும் ஏற்கத் துணிந்துவிட்டேன். புயல் வேகம் குறையப் பூமியில் இறங்கினேன். பூமியிலா? இல்லை - சுவர்க்கபூமியில்! அழகாபுரிக்கு நிகரான செல்வம் நிறைந்த "வஞ்சிமாநகரி"ல் நான் இறங்கினேன். என்றும் கண்டிராத புதுமையான இடம். பழமையான நடை, உடை பாவனை (சரித்திரப் புத்தகத்தில் நான் படித்த வர்ணனை மாதிரி) நல்ல தமிழ்ப் பேச்சு. அங்குள்ள வீரர்களின் புய வலிமை, மார்பின் பரப்பு, கை வாள், இரும்புக் கவசம் எல்லாம் சிலப்பதிகார வர்ணனையே. இம்மாதிரி நான் ஒவ்வொன்றையும் எடை போட்டுக்கொண்டிருக்கும்பொழுதே ஓர் இரும்புக்கரம் இடுக்கி போல் பற்றியது என்னை. நடுங்கினேன், நா எழவில்லை பேச! ஆனால் அதேசமயம் நான் பயப்பட்டது தப்பாய் முடிந்தது. அம்மனிதன் கரம் போல் இருக்கவில்லை அவன் பேச்சு. அன்புடன் அரண்மனைக்குள் வந்து விருந்துண்ணுமாறு அழைத்தான். அன்று இளவரசன் பிறந்த தின விழா. எனவே விலாப் புடைக்க உண்டேன். அரச உண்டி உண்டேன்.

*　　*　　*

அரசவை; மன்னர், அமைச்சர், யாவரும் அமர்ந்திருந்தனர். வீரன் செங்குட்டுவனும் தம்பி இளங்கோவும் அருகருகே அமர்ந்திருந்தனர்.

இளவரசன் இளங்கோவை பலர் வாழ்த்தினர். அனேகர் ஆசி கூறினர். வந்திருந்தோரில் சிலர் வாழ்த்துக்கள் பாடினர்.

யாரோ ஒரு நரைத்த கிழவர்; விற்போல் வளைந்த உடல்; கொக்கைப்போல் நரைத்த தலை, அருவருப்பான தோற்றம். அரசனுக்கு முன் வந்தார். ஏதோ சில வார்த்தைகளை மெல்லிய குரலில் கூறிவிட்டு, பின் சபையிலிருந்தோர் அனைவருக்கும் கேட்குமாறு உரக்கக் கூறினார் :—

"மன்னவ! காளை இளங்கோ நாளை அரசாள்வான்; அன்று மாலையே சாலை வழியே செல்வான் வீரன் செங்குட்டுவன் துறவியாய்! இது விதியின் கூற்று. இதை மாற்ற எவராலும் முடியாது. மன்னிக்கவும்!" இவ்வாறு கூறிவிட்டு அமர்ந்தார். அப்பெரியார் கூறிய வார்த்தைகள் என்னை அரசவையை விட்டுத் தூக்கி எறிந்ததுபோல் இருந்தது.

சபையில் பெருங்குழப்பம். அண்ணன் இருக்கத் தம்பிக்கு அரசு! வீரன் செங்குட்டுவன் இருக்க இளவல் இளங்கோவுக்கு அரசு! இது அரச மரபிலே புதுமை! சபையோர் அசையாப் பதுமையாக அமர்ந்திருந்தனர். பேசத்துணிவில்லை, பேசவும் முடியவில்லை.

அரசருக்கு ஓரே திகைப்பாய் விட்டது. தன் மூத்த புதல்வன் காடேக, இளையவன் நாடாள்வதா? மரபிலே இல்லாத வழக்கம்; அரச நீதிக்கே புறம்பானது. இதற்கு யாது செய்வது?

செங்குட்டுவன் கனல் தெறிக்கும் கண்களுடன் தன் தம்பியைப் பார்த்தான். அப்பார்வையில் குரோதம் கலந்திருந்தது. பழி வாங்கும் எண்ணம் எழுந்தது. அப்பொழுது அவன் மனிதன் அல்ல; மிருகம். தந்தை என்ன சொல்லப்போ

கிறார் என்று ஆவலுடன் எதிர் பார்த்தான். சற்று முன் வரை உயிரைவிட நேசித்த தம்பியின் உயிருக்கு உலைவைக்க எண்ணியது தமையனின் குரங்கு மனம். என்னே மனிதர் மனத்தின் மாறுதல்?

தந்தை எழுந்தார்; சபையை நோக்கிக் கூறினார். அவையினரே! அண்ணன் இருக்கத் தம்பி அரசாள்வது நம் இறைவனது விருப்பமானால் அவ்வாறே ஆகட்டும். அதற்கு நாம் என்ன செய்ய? யாவும் அவன் செயல்!

“அரசே இது முறையற்ற முடிவு” இஃது சபையினர் கூக்குரல். இளையோன் எழுந்தான். இளந்தென்றல் போல் வார்த்தைகளை இனிமையாகப் பேசினான்.

அருமைத் தந்தையீர்! அருந்தமிழ்ப்புலவீர்! அசகாய சூரர்காள்! பெருந்தமிழ்க் குடிகாள்! கேளீர்!

சற்று முன் ஒரு பெரியார், நான் எம்தந்தைக்குப்பின் இந்நாட்டிற்கு மன்னவன் ஆவேன் என்று கூறினார். இதை மாற்றமுடியாது! என் தமயன் காடாள்வார்; இதுவும் மாற்றமுடியாத ஊழ்வினை. இது அவர் விதிப்பயன்! விதி! இதை மாற்றமுடியாது! இது ஆற்றல் அற்ற அற்பர்கள் கூறும் அவச்சொல். விதியை மாற்றத்தான் இறைவன் மனிதனுக்கு ஆறாம் அறிவைக் கொடுத்தான். ஆதலின், இதோ என்மதி கொண்டு என் விதியை மாற்றுகிறேன். இதோ! என்றும் மாற்றமுடியாத என் விதியை இக்கணத்திலேயே மாற்றுகிறேன்.

அருமைத் தந்தையே! ஆருயிர்த் தமையனாரே! அருந்தமிழ்ப் புலவீர்! அறிவு நிறைந்த அவையீர்! கேள்மின்:—

இன்றுமுதல் நான் துறவி; அரசன் இல்லை; அரசன் மகன் இல்லை; ஒரு தமிழ்ப்பெரியாரின் மகன்; நான் ஓர் சாதாரணக் குடிமகன். பெற்ற தாய் நாடறிய பிள்ளைத்தமிழ் அறிய, இனி அரசுக்குரியவன் நானல்ல. அரசர் சபை அறிய இந்த அரியணை எனக்கில்லை. இதோ யான் அணிந்திருக்கும் அரச உடைகளும், அணிகளும் எனக்கில்லை. இந்த வாளும், இதோ இவ்வேலும், என்கையிலுள்ள வில்லும் இனி எனக்கு வேண்டாம். அதோ! தமிழ்ப் புலவர் பெருமக்கள் அமர்ந்துள்ளனரே, அந்த இடத்தில் ஓர் இடம் அளித்தால் போதும்.

எனக்கு வேண்டியவை இரண்டு காவியுடைகளே! பீதாம்பரங்கள் அல்ல. ஒரே ஒரு உத்திராட்சமாலையே, மணி மாலை அல்ல.

இனி என் தமையனாரே நம் அரசர். இவ்வாறு கூறிவிட்டுப் புலவர் திருக்கூட்டத்திற் சென்று அமர்ந்தான் இளங்கோ; இல்லை இளந்துறவி.

மன்னன் பேசவாயெடுத்தான், நாவில் பேசத் தெம்பில்லை. புலவர் புகழ்ந்தனர் இளங்கோவின் பெருந்தன்மைக்காக. கனல் தெறித்த தமையன் கண்களில் கண்ணீர் அருவியாய் வழிந்தது. சபையோர் கைத்தலங்கொண்டு முழக்கினர். நானும் கைகளைக் கொட்டினேன். எந்நேரம் பார்த்தாலும் தாளம் போடுவதுதானா? என்ற என் தந்தையின் குரல் கேட்டு விழித்தேன். அந்தோ! இந்த தமிழ் நாட்டில் நானிருந்தேனே!

R. பழனியப்பன் IV B.

# காலத்தின் அருமை

உலகத்திலே, சிலர் கல்வியறிவு உள்ளவராயும் சிலர் கல்வியறிவு இல்லாதவராயும், சிலர் பலசாலிகளாயும் சிலர் பலவீனர்களாயும், சிலர் பணக்காரர்களாயும் சிலர் ஏழைகளாயும் இருக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் காரணம், காலத்தின் அருமை பெருமைகளைத் தெரிந்து அதனைச் சரியானமுறையில் பயன்படுத்திக் கொண்டமையும் பயன்படுத்திக் கொள்ளாமையுமே ஆகும்.

காலத்தின் அருமையை அறியாதவன் உலகில் ஒரு பயனையும் அடையான். அவனைக் கொலைஞன் என்றும் கூசாமல் கூறலாம். ஏன்; அவன் விலை மதிக்க முடியாத காலத்தை வீணாகக் கழித்துக் கொலை செய்கிறானன்றோ? எந்தப் பொருளை அழித்தாலும் அதனை மீண்டும் பெறலாம். ஆனால் உயிரை அழித்து விட்டால் மீண்டும் பெற இயலாது. உயிர்போன்றதே காலமும். நாம் வீணாகக்கழித்த காலத்தை மறுபடியும் பெறமுடியாது. காலத்தின் அருமையை அறியாமல் சோம்பி இருப்பவன் அறிவுபெருகாது. அவன் ஒரு காரியத்தைச் செய்யத்தொடங்கிவிட்டு, அதைச் செய்து முடிக்க இயலாதபோது, 'நேரம் இல்லையே' என்று வருந்துவான். இது எவ்வளவு அறியாமை! இஃது விதைக்கவேண்டிய நாட்களில் வீட்டில் உறங்கிவிட்டு, அறுக்கவேண்டிய காலத்தில் அரிவாள் கொண்டு போகிறவன் செயலுக்குச் சமம் அன்றோ? இன்றைக்குச் செய்யவேண்டிய வேலையை நாளைக்குச் செய்வோம் என்று விட்டு வைத்தல் கூடாது. நாளை, நாளை என்றால் அது நம்முடைய நாளாக இருக்குமோ, அன்றி சாவினுடைய நாளாக இருக்குமோ, நாம் அறியோம். மேலும் நாள்வாரமாகவும், வாரம் மாதமாகவும், மாதம் வருடமாகவும் பெருகிக் கழியும். இதனால் தொடங்கிய காரியமும் முற்றுப் பெறாமல் போகும். இம்மட்டோ! காலத்தின் அருமையை அறியாதவன் மனம் பலவித தீய எண்ணங்கள் புகுதற்கும் இடமாகும்.

ஆங்கிலத்தில் காலத்தின் அருமையைக் குறித்து ஒரு பழமொழி வழங்கிவருகிறது. அது 'Time is gold' என்பது பொன் செய்யும் மருந்து காலம்! என்பது இப்பழமொழியின் கருத்தாம். காலத்தின் அருமையை அறிந்து அதனைப்போற்றுபவனே பொருள் சம்பாதிப்பதற்கு உரிய மார்க்கத்தை கண்டவன் ஆவான்; தனக்கும் பிறர்க்கும் நன்மைதேடுபவன் ஆவான்; கற்றவன் என்றும், அறிஞன் என்றும் கருதப்படுவான். அவன் எப்போதும் சுறுசுறுப்புள்ளவனும், எந்தவேலை செய்வதற்கும் பின்னடையாதவனும் விளங்குவான்.

இங்ஙனம் காலத்தின் அருமையை அறிவதால் அளவிலா நன்மைகள் உண்டாவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோமாகையால், காலம் என்பது நம்மைநாமே உயர்த்திக்கொள்ள கடவுளால் கொடுக்கப்பட்ட ஓர் கருவி என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து அதனை நன்கு பயன்படுத்திக்கொள்ளக்கடவர்.

வணக்கம்.

**P. Jeyaraman**, VI A.

★

# விளையாட்டா? வினையா?

**தோற்றுவாய்**

உங்கள் உள்ளம் உடனே இவ்வினாவிற்கு விடையளித்து விடுகிறதல்லவா? விடையளிப்பது மட்டுமா. இதுவும் ஒரு சிறந்த வினாவா என எதிர் வினாவும் போடுகின்றது உங்கள் உள்ளம். ஆம் அதை நான் உணர்வேன். எவர்க்கும் வினாவுவது எளிது விடையளிப்பது தான் அரிது. அப்படியாயின் எங்கள் மனதில் தோன்றிய விடை தவறா? என்று மேலும் மேலும் வினவாதீர்கள். சற்றே பொறுமையுடன் இக்கட்டுரையைப் படியுங்கள். பின் நீங்களே உணர்வீர்கள்.

**முன்னுரை**

விளையாட்டென்றால் என்ன? வினை யென்றால் என்ன? விளையாட்டிற்கும் வினைக்கு முள்ள தொடர்பு யாது? அவற்றால் நாம் அறிந்து கொள்ளக் கிடப்பன யாவை? என்பனவற்றை விளக்கவே இக்கட்டுரை எழுந்ததேயன்றி உங்களது விடையைப்பற்றி குறை கூறுவதற்கோ எனது விடையைப் பற்றி நானே புகழ்ந்து கொள்வதற்கோ அல்லது எந்த விளையாட்டு ஆசிரியரது தூண்டுதலினாலோ எழுந்ததல்ல.

**பொருள்**

**விளையாட்டு**

"விளையாட்டு" விளை யென்றால் விளைந்த, விளைகின்ற, விளையும் என இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற முக்காலத்திற்கு மேற்ப பொருள்படும். ஆட்டு என்றால் அசைவு அதாவது தொழில் என்பதாம். ஆகவே விளையாட்டு என்ற சொற்றொடர் வினைத் தொகையாய் நின்று பழங்கால முதல் பயன் விளைத்து வந்த ஆடல் தற்காலத்தும் பயன் விளைக்கின்ற ஆடல் வருங் காலத்தும் பயன் விளைக்கும்படியான ஆடல் என்ற கருத்தினை விளக்குவதாகும்.

**வினை**

"வினை" வினையென்றால் தொழில். ஒன்றினது தொழில் தான் அப்பொருளினது மேம்பட்ட சக்தியை வெளியிடும் சாதனம். எங்ஙனமெனில் நாம் ஒன்றைச் செய்வதற்கு முன் அதைப்பற்றிய செய்திகளை நினைக்கிறோம். பிறகு அதைப்பற்றி சொல்லுகிறோம். பின் செய்கிறோம். இவ்வாறு நிகழும் தன்மையைத்தான் திரிகரணச் செயல் (மனம், வாக்கு, காயம்) என்கிறோம். உதாரணமாக எளியவனொருவனை நாம் காண்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவன் ஏழ்மை காரணமாக வாடி நிற்கும் நிலைமையினை நம் மனதில் எண்ணுகிறோம். பின் அவனைப் பற்றி. சில வினவுகிறோம். அதன்பின்னே நம்மாலான உதவியைச் செய்கிறோம். எனவே நம் மனதில் தோன்றிய எண்ணமாகிய கரு சொல்லாக உருப் பெற்று செயலாகப் பிறக்கிறது. அதனால்தான் அதனை உண்மையென்றும் வாய்மையென்றும் மெய்ம்மை என்றும் சொல்லுகிறோம். இதனால் தொழிலின் உண்மை நிலை புலனாகின்றதல்லவா?

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற வள்ளுவர் வாக்கும் செயலின் உயர்வை விளக்க எழுந்ததே.

**விளையாட்டிற்கும் வினைக்குமுள்ள தொடர்பு**

இதுவரையில் விளையாட்டென்றால் என்ன என்பதைப் பற்றியும், வினையென்றால் என்ன என்பதைப் பற்றியும் பார்த்தோம். இனி விளையாட்டிற்கும் வினைக்குமுள்ள தொடர்பு என்ன என்பதை சற்றே நோக்குவோம். விளையாட்டு தான் பிறகு வினையாக (உண்மைச்செயலாக) மாறுகிறது. எவ்வாறெனில் சில பிராணிகளும் விலங்குகளும் குழந்தைகளும் சிறு வயதில் விளையாடுகின்றன. அதனைப் பார்த்தால் அவ்விளையாட்டுக்கள் அவைகளின் பிற்கால வாழ்க்கையின் பிரதிபிம்பங்கள் என்றோ அல்லது அவைகளின் பிற்கால வாழ்க்கையென்னும் நாடகத்திற்கு முன்னேற்பாடாக செய்துபார்க்கும் ஒத்திகை என்றோ நாம் கருதவேண்டியிருக்கிறது.

பூனைக்குட்டி பாய்ந்து பாய்ந்து விளையாடுகிறது. நாய்க்குட்டி ஓடியும் ஆடியும் கந்தல் துணி கிடைத்தால் கடித்துக் கிழித்தும் விளையாடுகிறது. குழந்தைகள் ஆணாயிருந்தால் கடை-

விற்பது, குதிரைச் சவாரி விடுவது, வண்டி ஓட்டுவது போன்ற விளையாடல்களையும், பெண்ணுயிருந்தால் மணலைக் கோலி வீடாகக் கொண்டும், கொட்டாங்கச்சி, தண்ணீர், மணல், சிறு செடிகளின் காய் முதலியவற்றைக் கொண்டு சோறு சமைப்பது, மரப்பாச்சிகளை வைத்து தாலாட்டுதல், குளிப்பாட்டுதல் போன்ற விளையாடல்களையும் மேற்கொள்ளுகின்றன. இவ்வித விளையாடல்களுக்கும் அவைகளின் பிற்கால வாழ்க்கைக்கும் என்ன மாறுதல் இருக்கிறது? மேலும் அவைகளுக்கு வயதாக ஆக அவைகளின் விளையாட்டும் சிறிது சிறிதாகக் குறைகிறது. அது ஏன்? அது தான் விளையாட்டு வினையாக (வாழ்க்கையின் உண்மைச் செயலாக) மாறிவிடுகிறது என்பதை உணர்த்துவதாகும். இதனுல் விளையாட்டிற்கும் வினைக்குமுள்ள தொடர்பு வெள்ளிடை மலையென விளங்குகிறதல்லவா?

### விளையாடலின் இன்றியமையாமை

வருங்கால வாழ்க்கைத்திட்டத்தை உருவாக்க வல்லது விளையாட்டு என்பது மட்டுமல்ல. வாழ்க்கையென்னும் பாதையில் நடக்கும்போது இன்ப துன்பமென்னும் மேடு பள்ளங்கள் தோன்றுங்கால் அவற்றைக்கடத்தற்குரிய உள உரமும் உடலுரமும் அடையச் செய்து வாழ்க்கை இன்பங்களை அநுபவிக்கச் செய்வதும் விளையாட்டே, என்று கூறினுல் அது மிகையாகாது.

ஆகவே நமது வாழ்க்கையை இனிதாக ஏற்று நடத்த உடலை ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டியது, நமது இன்றியமையாத கடமையல்லவா?

"சுவற்றை வைத்தே சித்திரம் எழுதுக" என்னும் பழமொழியை அறியாதார் யார்?

### விளையாட்டின் வகைகள்

விளையாட்டானது மகிழ்ச்சி, உரம், அறிவு, வீரம் இவற்றைப்பயப்பதா யிருப்பதால் பயன் நோக்கி அது பலவகைப்படும். விளையாட்டுகள் மேற் கூறப்பட்டவற்றைப் பயப்பனவாயிருப்பதோடு வருங்கால வாழ்க்கைத் திட்டத்தையும் தன்னகத்துக் கொண்டிலங்குகின்றன.

காகிதமாடல், காய்தெறித்தல் முதலியன போன்று மகிழ்ச்சிக்காகவும் அறிவிற்காகவுமே ஆடும் ஆடல்களைவிட

"கம்புக்கும் களை வெட்டியதுமாயிற்று
தம்பிக்குப் பெண் பார்த்ததுமாயிற்று"

என்பது போல விளையாடும் போதே பயனுக மாறும் படியான காடுமேடு திருத்தல், நீரிறைத்தல், தோட்டப்பயிர்செய்தல் போன்ற விளையாடல்களே மிகவும் சிறந்தவை. இவ்வாறு ஒரு காரியம் செய்கையில் அதினின்றும் மற்ெருரு பயனும் உண்டாகும்படி செய்துகொள்வதை

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையார்த் தற்று"

என்று புகழ்கிறுர் பொய்யா மொழியார்.

இவ்வாருன விளையாட்டுக்கள் (நீரிறைத்தல்-தோட்டப் பயிர்செய்தல்) நல்லன என்று நமக்குத் தோன்றினுலும் அவை போன்றவைகளைச் செய்வதற்குரிய வாய்ப்புக்கள் கிராமப் பிள்ளைகளுக்குத் தான் கிடைக்குமேயன்றி, நம் போன்று பட்டணங்களில் வாழும் பிள்ளைகளுக்கு வாய்ப்பதரிது. அதிலும் தூங்கினுலும் பின்னுல் விழாமல் தடுக்கும் முதுகமைந்த விசுப்பலகையும், முன்னுல் விழாமல் தடுக்கும் உயர்ந்த விசுப்பலகையும் இரு புறங்களிலும் விழாமல் தடுக்கும் மாணவர்களாலும் சூழப்பட்டு சோம்பி உட்கார்ந்திருக்கும் மாணவ நிலையிலுள்ளார்க்குக் கிடைப்பது அரிதினும் அரிதே.

ஆகவே மாணவர்கள் தங்கள் மகிழ்ச்சியையும் அறிவையும் வாழ்க்கையையும் வளம்படுத்திக் கொள்ள முடிந்த அளவில் பயன் தரத்தக்க விளையாட்டுக்களை (கால் பந்து - கைப் பந்து) முதலியவைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

### முற்கால விளையாட்டும், தற்கால விளையாட்டும்

பழங்கால விளையாட்டுக்கள், அக்கால மக்களின் வாழ்க்கை நிலைக்கேற்பவே அமைந்திருந்தன. ஒருவனே தனித்திருந்தும் ஆடலாம். (வில்வித்தை யோகாப்பியாசம்) இருவர் கூடி ஆடலாம். (குத்துச்சண்டை-சிலம்பம்) பலர் கூடி ஆடலாம். (உப்புக்கோடு-பலிக்கோடு) அவ்விளையாட்டுக்களை நோக்குமிடத்து அவை தற்காப்பை உண்டு பண்ணுவதாகவும், பெருமிதந் தருவதாகவும், உடலுரம் பயப்பதாகவும், வீர உணர்ச்சியை ஊட்டுவதாகவும் அமைந்து அன்னுரின் வாழ்க்கைக்கு உறுதுணையாயின. மேலும் விளையாடுவதற்குரிய கருவிகளுக்கு முதலிடம் அளிக்காமல் விளையாட்டுக்களே முதலிடத்தைப் பெற்று விளங்கின.

தற்கால விளையாட்டுக்களோவெனின் "ஆள் பாதி ஆடம்பரம் பாதி" அதாவது "சரக்குக் குறைவாக இருந்தாலும் செட்டியார் மிடுக்காக இருக்கவேண்டும்" என்பதை விளக்கிக் காட்டுவனபோல் அமைந்துள்ளன. உதாரணமாக தட்டுப் பந்தாட்டத்தை எடுத்துக்கொள்வோம். அவ்வாட்டத்திற்கு தட்டு, பந்து, ஏற்ற இடம், வரையறைக்கோடுகள், நீதிபதி, ஊதுகுழல், வலை, வாளி, சுண்ணும்புத்தூள், கயிறு, எலுமிச்சம் பழம், தண்ணீர், மற்றும் மாணவரின் மதிப்புக்குரிய பலவும் தேவைப்படுகின்றன.

முற்கால விளையாட்டுகளில் வெற்றி பெற்றோரை மதிப்பிடுவதற்குரிய வெற்றிச் சின்னங்கள் விளையாடிய அவர்களாலேயே பெரும்பாலும் உண்டாக்கிக் கொள்ளப்பட்டன. அதாவது விளையாடும்போது தம் எதிரியினாலேற்பட்ட காயங்களும் வடுக்களுமே அவர்களது வீரப் பொற்பதக்கங்களாகத் திகழ்ந்தன.

தற்கால விளையாட்டுகளில் வெற்றியுற்றோர்க்கு நன்மதிப்பிதழ்களும் வெள்ளிக் கோப்பைகளும் பொற் பதக்கங்களும் அளிக்கப்படுகின்றன. இவற்றை இதற்குரியவரான வெற்றி பெற்றோரேயன்றி ஏனையோரும் தமதாகக் காட்டிக்கொள்ள முடியுமன்றோ? பழங்கால வெற்றிச் சின்னங்களை அதற்குரியாரன்றி ஏனையோர் தமதாக்கிக் கொள்ள இடமில்லை,

பல நன்மைகள் காணப்படினும் பண்டைக் கால விளையாட்டுகளில் சில தீமைகளும் இல்லாமலில்லை. அவையாவன தோல்வியுற்றோர் வெற்றி பெற்றோரைப் பொறுமையால் வேறு வகையில் துன்புறுத்துவது கை கால் முறிவு முதலியன.

### விளையாட்டே விளையாகிறது

யாவரும் சிறு வயதில் நன்றாக விளையாடுகிறார்கள், வயது ஏற ஏற அவர்களது விளையாட்டு குறைகிறது. அதற்குக் காரணம் விளையாட்டை அவர்கள் வாழ்க்கையின் உண்மைச் செயல்களாக ஆக்கிக்கொள்வதே, என்பது முன்னரே விளக்கப்பட்டுள்ளது. ஆகவே வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களனைத்தும் விளையாட்டில் அமைந்து கிடைக்கின்றன என்பது போதரும்.

ஆகவே ஒருவன் தனது வாழ்க்கையை இன்பமாக ஆக்க நல்லுடல் வாய்க்கப் பெறல்வேண்டும். நல்லுடலைப் பெறுதற்குக் காரணமாயுள்ள உடலுறுப்புக்கள் வேலை செய்து உறுதியடைய, உண்ட உணவு சீரணித்து உதிரமாக, நல்ல காற்றை நிறைய சுவாசித்து இரத்தம் சுத்தமடைய, குருதியோட்டம் தடைப்படாது ஓடி, கழிவுப் பொருள்களை வெளியேற்ற, நரம்புகள் முறுக்கேற, தசைகள் கெட்டிப்பட்டு சருமம், மழமழப்படைய, விளையாட்டு இன்றியமையாததாக இருக்கிறது. மேலும் அதுவே வாழ்க்கையாகவும் மாறுகிறது.

"வாழ்க்கைதான் விளையாட்டு விளையாட்டுத்தான் வாழ்க்கை" என்பதை ஒருதாரணத்தின் வாயிலாக விளக்கி முடிப்போம்.

கைப்பந்தாட்டம் என்றொரு விளையாட்டு உண்டல்லவா? அவ்வாட்டத்திற்கு வேண்டுவனவும் அவ்வாடலில் நிகழ்வனவும் யாவை? அவைகளாவன :—

1. பண்பட்ட இடம்
2. வரையறைக் கோடுகள்
3. பந்து
4. வலை
5. இரு கட்சியினர்
6. ஒவ்வொரு கட்சியினரும் பந்தைப்பரிசோதித்தல்
7. இரு கட்சியினரும் கணக்கின்றி சிறிது நேரம் பந்தைத்தட்டுதல்
8. நடுவரை நியமித்தல்
9. ஆடலில் எதிர்கட்சியின் எண்ணையும், தம் எண்ணையும் சேர்த்து கணக்கிடல்
10. நடுவர் கூற்றை ஏற்றல்
11. ஒரு கட்சியினர் தம்கட்சிக்குள் இடம் மாறுதல்
12. இரு கட்சியினரும் இடப் பரிவர்த்தனை செய்துகொள்ளுதல்
13. மும்முறை ஆடுதல்
14. கைகுலுக்குதல்

இவைகள் வாழ்க்கைச் செயலாக எங்ஙனம் மாறுகின்றதென்பதைக் காண்போம்.

பண்பட்ட இடம் : வாழ்க்கையில் ஒருவன் எதைச் செய்ய விரும்பினாலும் அது செய்வதற்கு ஏற்ற இடத்தை முதலில் நன்கு ஆராய்ந்து கொள்ளல் வேண்டும் என்பதை விளக்குகிறது,

வரையறைக் கோடுகள் : ஒருவன் எக்காரியத்தைச் செய்ய முயன்றாலும் அது தொடங்கும் காலம் முடிக்கும்காலம் அதற்கான இன்றியமையாதகருவிகள், பொருள் முதலியவைகளை வரையறை செய்துகொண்ட பின்பே தொடங்குதல் வேண்டும் "ஆழமறியாமல் காலைவிடலாகாது" என்பதைப் போதிக்கிறது.

பந்து : வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு செயலைத் தேர்ந்தெடுத்து அதன் வாயிலாக சிறப்புற்று விள்ங்க வேண்டும், என்பதை அறிவிக்கின்றது.

வலை : நாம் ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது அதற்குப் பல இடையூறுகள் குறுக்கிடலாம். அவ்விடை யூறுகளுக்குள் நாம் அகப்பட்டுக் கொள்ளாமலும், அவ்விடையூறுக்குப் பயந்து பணிந்துவிடாமலும் காரியத்தைச் செய்து முன்னேறுக என்ற கருத்தை வெளியிடுகின்றது.

இரு கட்சியினர் : வாழ்க்கையே போட்டிதான். ஒருவரைப் பார்த்து ஒருவர் முன்னேற வேண்டும்என்ற தத்துவத்தை மிளிரச்செய்கிறது.

மேலும் பலர்கூடி சாதிமத வித்தியாசங்களைப் பாராது ஒரு கொள்கைக்காக ஒற்றுமையாய் நின்று தொண்டாற்றவேண்டும் என்ற நீதியையும் நிலைக்கச்செய்கிறது.

ஒவ்வொரு கட்சியினரும் பந்தைப்பரிசோதித்தல் :- நாம் செய்ய எண்ணும் ஒவ்வொரு செயலையும் பலர் முன்னிலையில் செய்யத் தொடங்குவதற்குமுன் நாமே அதனை நன்ருக ஆராய்ந்தறிதல்வேண்டும் என்ற அறவுரையை அறிவுறுத்துகின்றது.

இரு கட்சியினரும் கணக்கின்றிபந்தைத்தட்டுதல் :- தமக்கு நல்லதெனத் துணிந்ததொரு செயலானாலும் அது பிறருக்கும் நன்மையளிப்பதாக இருக்குமா என்று தம்போன்ற பலருடன் கூடி ஆராய்ந்தறிதலே சாலச்சிறப்புடைத்து என்ற உத்தமகுணத்தை உயர்ந்தோங்கச் செய்கிறது.

நடுவரை நியமித்தல் :- உலகில் எவர்க்கும் தத்தம் குற்றம் தங்களுக்குத் தோன்ருது. ஆகையால் தத்தம் கூற்றையே வலியுறுத்த முற்பட்டு ஒருவருக்கொருவர் மாறுபாடு கொள்வர். எனவே பொதுவாகவுள்ள மனிதர் ஒருவரை நமக்குத் தலைவராகக் கொண்டு அவர் கூறுவதை ஏற்று நடப்பதே ஒழுங்காகும் என்ற சீரிய கருத்தைத் தெளிவுறச் செய்கிறது.

ஆடலில் எதிர்க்கட்சியினரின் எண்ணையும் சேர்த்துமதிப்பிடல்:- நம்மைமட்டும் நாம் எண்ணுதலாகாது அதாவது பிறர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிருேமோ அதுபோலவே நாமும் பிறரிடம் எவ்வெவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் சேர்த்து எண்ணிப்பார்க்கவேண்டுமென்ற புனிதமான கருத்தைப் புகட்டுகிறது.

நடுவர் கூற்றை ஏற்றல் : நமக்குள் பல காரணங்களால் ஒற்றுமைச் சிதைவு ஏற்பட்டாலும் நமக்குத் தலைவராக உள்ளவரது கட்டளையை நிறைவேற்றுவதில் நாம் அனைவரும் ஒன்றுபடுதல் வேண்டும் என்ற உன்னத நோக்கத்தை வளம்பெற வகுத்துணர்த்துகிறது.

தம் கட்சிக்குள் இடம் மாறுதல் : குடும்பத்திற்கோ அல்லது ஒரு கூட்டத்தாருக்கோ நாம் தலைவனுக இருந்தாலும் நமது பிறப்புரிமையாகவே அதனைக் கருதாமல் மற்றையோரை நமது நிலையிலும், நாம் மற்றவர் நிலையிலும் இருந்து சிற்சில காலம் தொண்டு செய்வதே மனித இனத்திற்குரிய மாண்புறு செயலாகும் என்பதை அறிவிக்கிறது.

இருகட்சியினரும் இடப்பரிவர்த்தனை புரிதல்: ஒருவனது உயர்வு தாழ்வு அவனது தன்மையை மட்டும் பொறுத்ததல்ல. அவனது சூழ்நிலையையும் பொறுத்திருக்கிறது என்பதை வலியுறுத்துகிறது. மேலும் யுத்த களத்தில் நிராயுதபாணியாய் நின்ற இராவணனைப் பார்த்து இராமன் "இன்றுபோய் நாளைவா வென்ருன்" என்ற யுத்த தருமத்தையும் மனிதத் தன்மையையும் எடுத்துக்காட்டுவதாகவுமுள்ளது.

மும்முறை ஆடல் : நாம் ஒன்றை ஒருமுறையல்ல இரு முறையல்ல மும்முறை ஆராய்ந்து அறிந்த பின்னரே உறுதிப்படுத்தவேண்டும் என்ற "காய்தலுவத்தலற்ற பண்பினை" வளர்ப்பதாகவுள்ளது.

கை குலுக்கல் : "யானைக்கும் அடி சறுக்கும்" வாழ்வில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும் இயற்கையுடைத்து. ஆதலால் வெற்றியுற்ற காலை அதற்காகப் பெரிதும் மகிழ்தலும், தோல்வியுற்றகாலை அதற்காக மிகவும் வருந்துதலுமாகாது.

" இன்பத்துள் இன்பம் விழையாதான்
துன்பம் உறுதல் இலன் " [துன்பத்துள்

என்ற வள்ளுவர் வாக்கினை வலியுறுத்துகின்றது.

**முடிவுரை**

இதுகாறும் கூறியவற்ருல் விளையாட்டென்பது முற்காலத்தும் தற்காலத்தும் பயன் கருதியே ஏற்பட்டுள்ளது என்பதும், விளையாட்டு தற்காப்பு சக்தியையும் மகிழ்ச்சியையும், உடலுரத்தையும் ஊட்டுவதோடு அறிவு, குணம், செய்கை, இவைகளின் வளர்ச்சிக்கும் துணை செய்கிறதென்பதும், பிராணிகளும் விலங்குகளும் குழந்தைகளும் விளையாடும் விளையாட்டுகள் அவ்வவற்றின் பிற்கால வாழ்வை வளம்படுத்துவனவாக இருக்கிறதென்பதும் விளையாட்டை விரும்பி ஆடும் பிள்ளைகள் வயது ஆக ஆக அவ்விளையாட்டுச் செய்கைகளை வாழ்க்கைச் செயல்களாக மாற்றிக் கொள்ளுகின்றனரென்பதும் விளையாட்டே வாழ்க்கையை வளம்படுத்திக்கொள்ள இன்றியமையாத சாதனம் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

எதிர்கால வீரர்களாகிய மாணவர்களே பிற்கால வாழ்க்கைக்கு முன்னேற்பாடாக அமைந்துள்ள விளையாட்டை வாழ்க்கையின் அடிப்படையான ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ளுகிருேம் என்ற நோக்கத்துடன் ஆடுக உங்கள் வாழ்வு வளமுற்று ஓங்குக.

வித்துவான், க. கு. முத்தையா.
(தமிழாசிரியர்)

# நமது கடமை

தமிழ் நாட்டில் தோன்றிய மாணவர்களாகிய நமக்குக் கடமைகள் நிறைய இருக்கின்றன. அக் கடமைகளைச் செவ்வனே செய்து பழக மாணவப்பருவமே இன்றியமையாதது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய கடமைகளை ஒழுங்காகக நிகழ்த்துவிக்க பயிற்சி பெறவேண்டும்.

நாம் தக்கபருவத்தில் நமது அன்புமிக்க தாய், தந்தையர்களால் பள்ளிக்கு அனுப்பப்படுகிறோம். நாம் பள்ளியில் நான்கு திட்டங்களைக் கையாள வேண்டும். ஒன்று கடவுள் பக்தி, இரண்டு ஒழுக்கம், மூன்று குருபக்தி, நான்கு கல்வி. இத்திட்டங்களைக் கல்லின் மேல் எழுதப்பட்ட எழுத்தைப் போல் மனதில் வைத்துக்கொண்டு நடந்தால் நமது வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் ஒழுங்காக நிகழும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் — படும்"

என்று ஒழுக்கத்தை உயர்வாகக்கூறியுள்ளார் வள்ளுவர். இவ்வொழுக்கத்தை நாம் கருத்திற் கொண்டு எக்காரியத்தையும் செய்யவேண்டும். இச்சீரிய ஒழுக்கத்தை மேற்கொள்ளின் நமது பள்ளிகளும், நாடும் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை. மேற்கூறப்பட்ட ஒழுக்கங்களை நாம் பள்ளியிலேயே அடையுங்கால் பிற்காலத்தில் நாம் நமது கடமைகளை நிறைவேற்றுபவராக விளங்குவோம்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்னும் மூதுரைப்படி ஆசிரியரை நன்கு மதித்து அவர்கள் பணியை முகமலர்ச்சியுடன் செய்யவேண்டும்.

முன்னொரு காலத்தில் ஒரு மாணவன் ஆசிரியர் வீட்டிலேயே கல்வி கற்றுவந்தான். ஒரு நாள் அதிக மழை பெய்தது. ஆசிரியர் மாணவனைப் போய் தனது வயலைப்பார்த்து விட்டு வரும்படி சொன்னார். மாணவன் ஆசிரியர் வார்த்தைக்கு மறுப்பு எதுவுமின்றி வயலை அடைந்தான். அப்போது வயலின் மேற்புறமிருந்த குளம் நிரம்பி ஓரிடத்தில் தண்ணீர் கொஞ்சம்வந்து ஆசிரியர் வயலில் விழுந்து கொண்டிருந்தது. மாணவன் தண்ணீர் விழும் இடத்தில் தன் உடம்பைத் தரையோடு சேர்த்துப்படுத்துக் கொண்டான். ஆசிரியர் வயலும் தீங்கின்றி இருந்தது. ஆசிரியர் மாணவனைக்காணாது வயலுக்கு வந்து மாணவனைக் கண்டு அன்புடன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். இவ்வாறாக ஒரு மாணவன் ஆசிரியருக்காக உயிரையும் கொடுக்கத்தயாராயிருந்தான். இது அம்மாணவனின் குருபக்தியை எடுத்துக்காட்டுகிறதல்லவா?

நமது வாழ்விற்கு கல்வி அவசியம் என்பது திண்ணம்.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல; நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு".

என்று கூறியுள்ளார் ஒருவர். கண்ணையொத்த கல்வியைக் கற்றால் மட்டும் போதாது. அதன்படி நடக்கச் சித்தமாயிருக்க வேண்டும். அத்துடன் நாம் ஒவ்வொருவரும் நாட்டுப்பற்றும், தெய்வப்பற்றும், மொழிப்பற்றும் உடையராய்த்திகழ்தல்வேண்டும். இவ்வாறு நாம் நடப்போமேயானால் நம் நாட்டிற்குப் பெரிதும் பயன்பட்டவர்களாவோம்.

மேற்கூறிய நான்கு திட்டங்களையும் கடைப்பிடித்து நடப்போமேயானால் வருங்காலத்தில் நம் நாடு நன்னிலை அடையும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்ற பழமொழிப்படி நாம் மாணவப்பருவத்தில் எப்படியோ அப்படியே பிற்காலத்திலும் செய்வோம். ஆகவே நமது கடமைகளைச் செய்து நாட்டின் நன்மகனாக விளங்கி, முடிவில் கடவுளின் பாதாரவிந்தத்தை அடைவோமாக.

**P. N. Kandasamy, IV D.**

★

# ஆசையை அடக்கத் துன்பம் குறையும்

★

நாராயணன் தபாலாபீஸில் ஒரு குமாஸ்தா. அவனுடைய மனைவி லக்ஷ்மியும் அவனும் திருவல்லிக்கேணியில் தங்கள் வருமானத்திற்கு ஏற்றவாறு வாழ்க்கையைச் சந்தோஷமாக நடத்தினார்கள்.

தபாலாபீஸ் சூபரின்டெண்ட் மகள் கல்யாணிக்கு விவாகம் நிச்சயமாய் இருந்தது. அதற்குத் தம்பதிகள் லக்ஷ்மியையும் நாராயணனையும் அழைத்திருந்தனர்.

கலியாணத்திற்கு கழுத்தில் ஒரு நகையும் இல்லாமல் போக லக்ஷ்மிக்குப் பிடிக்கவில்லை. அவள் நாராயணனை யாரிடமாவது ஒரு முத்தாரம் வாங்கி வரும்படி கேட்டாள். முதலில் நாராயணனுக்கு இரவல் வாங்குவது பிடிக்கவில்லை. கடைசியில், லக்ஷ்மியின் விருப்பத்திற்கு இணங்கி, தன் சிநேகிதன் கோபாலனிடம் சென்று ஒரு முத்தாரம் வாங்கி லக்ஷ்மிக்குக் கொடுத்தான்.

கல்யாணத்தன்று லக்ஷ்மி முத்தாரத்தை அணிந்துகொண்டு கண்ணாடி முன் நின்று பூரித்தாள். நாராயணனும் அவளைப்பார்த்து உனக்கு மிகவும் நன்றாய் இருக்கிறது என்று சொன்னான். கல்யாண வீட்டில் லக்ஷ்மி மிகவும் சந்தோஷமாய் இருந்தாள். அன்றிரவு கச்சேரி முடிந்தவுடன் ஒரு ஜட்காவில் வீடு திரும்பினர்.

வீட்டிற்கு வந்தவுடன் கல்யாண வீட்டுச் சமாச்சாரத்தைப் பட படவென்று உரைத்தாள் நாராயணனிடம்! அதன்பின் நகையைக் கழற்ற கையை கழுத்தில் வைத்தாள். கழுத்தில் முத்தாரத்தைக் காணோம். லக்ஷ்மி திடுக்கிட்டு, "ஐயோ! முத்தாரத்தைக் காணோமே! என்ன செய்வது" என்று கதறினாள். நாராயணனுக்கு ஒரு நிமிஷம் ஒன்றும் தோன்றவில்லை. ஜட்கா வண்டிக்கு ஓடினான், அங்கும் கிடைக்கவில்லை.

கோபாலனுக்கு இரண்டு தினங்கள் கழித்து வேறொரு முத்தாரம் ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்தான். ஆயிரம் ரூபாய் கடன் அடைப்பது இந்நாளில் எளிதா? லக்ஷ்மியும் நாராயணனும் குடும்பத்தை எவ்வளவு சிக்கனமாக நடத்த முடியுமோ அவ்வளவு சிக்கனமாக நடத்தினார்கள். லக்ஷ்மி உருக்குலைந்துவிட்டாள். கடன் அடைய நான்கு வருடங்களாயின.

நான்கு வருடங்களுக்குப் பிறகு லக்ஷ்மி பீச்சுக்குச் சென்றிருந்தாள். அங்கு வந்திருந்த சாரதா இவளைக் கண்டாள். சாரதா லக்ஷ்மியை நோக்கி, நீதானா லக்ஷ்மி? ஏன் இப்படி இளைத்துப் போய் இருக்கிறாய்? அடையாளம்கூடத் தெரியவில்லையே? என்று கேட்டாள். உடம்புக்கேதாவது சௌக்கியமில்லையா?

உடம்புக்கு ஒன்றுமில்லை. நான் செய்த தவறுக்கு அடைந்த பலன் இது என்று நடந்ததைக் கூறினாள். சாரதாவுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. தன்னால்தான் லக்ஷ்மிக்கு இவ்வளவு கஷ்டம் நேர்ந்தது என்று நினைத்துக் கண்கலங்கினாள்.

லக்ஷ்மியை அணைத்துக்கொண்டு, நான்தான் உன்னுடைய கஷ்டத்திற்கெல்லாம் காரணம் என்று கூறினாள். லக்ஷ்மிக்கு ஒன்றுமே புரியவில்லை. சில நிமிடம் கழித்து சாரதா, நான் கொடுத்த ஆரத்திலிருந்த முத்து நல்லதல்ல என்றும், அது இமிடேஷன் முத்து என்றும் கூறினாள். லக்ஷ்மிக்கு சாரதா சொன்னதை நம்ப முடியவில்லை.

அன்று வீட்டிற்கு சென்றதும் சாரதா முத்தாரத்தைக் கொடுத்தனுப்பினாள்.

"போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து"

C. E. ஹரிகிருஷ்ணன், III. E.

# தமிழ் நாடும் தமிழும்

**வ**டக்கே திருவேங்கடமலை முதல், தெற்கே கன்னியாகுமரிமுனை வரை முன்காலத்தில் தமிழ் நாடாக இருந்தது. அது சேர, சோழ, பாண்டிய அரசர்களால் நல்லாட்சி நிலவி நீதி, பொருள், கலை, வாணிபம் முதலியவற்றில் சிறந்திருந்தது. கப்பலோட்டிய தமிழன் சிதம்பரம் பிள்ளையும் பாட்டுக்கொரு புலவனும் பாரதியும், கற்பிற் சிறந்த கண்ணகியும், அறச்செல்வி மணிமேகலையும் உதித்த பொன்னாடாக விளங்கியது. தேனொழுகும் சோலையும், வற்றாதஜீவநதிகளும் தமிழ் நாட்டை வளமாக்கின. இதைக்குறித்துப் பாரதியார் "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுதுகாதினிலே" என்று பாடியுள்ளார். கப்பலோட்டி கடாரத்தை வென்றது தமிழ் நாடு. உரோமாபுரிக்கு முத்தும், பவளமும் அனுப்பியது தமிழ் நாடு. இத்தகைய தமிழ் நாட்டில் இன்னிசைக்கருவிகள் பல இருந்தன. ஆனால் தமிழரின் கவனக்குறைவால் எத்தனையோ பொருள் மறைந்து போயின. தமிழ் நாட்டின் பரதநாட்டியத்தைப்போல் உலகில் வேறெங்கும் கிடையாது என்று உறுதிமொழி கூறுகிறார் பரத நாட்டியக்கலைச் செல்வர் உதயசங்கர். வீரவிளையாட்டுக்களெல்லாம் தமிழ் நாட்டில்தான் முதன் முதலில் நடைபெற்றன. தமிழ் நாட்டின் காடுகளில் ஏராளமான வேட்டை மிருகங்களும், பல பொருள்களும் இருக்கின்றன. வேறு எந்த நாடும் அடையமுடியாத கலைச்செல்வத்தை தமிழ் நாடு பெற்றிருக்கிறது


இத்தகைய வீரத் தமிழ் நாட்டில் உதித்தவர்கள் தமிழர்கள் "தமிழ் பேசுபவர்களெல்லாரும் தமிழர்கள்தான் இவர்கள் பழங்காலத்தில் ஆழமான கடல்களில் மரக்கலன்களைச்செலுத்தி இலங்கை, பர்மா, ஜாவா, இந்தோசீனா முதலிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தார்கள். சிற்பவேலைகளிலும் சிறந்திருந்தார்கள். பெரிய மலையைக் கண்டவுடன் சிலை செதுக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

இவர்கள் பேசி வந்த மொழியே தமிழ். தமிழ் என்றால் இனிமை என்று பொருள்படும். இது பழங்காலத்திலிருந்து இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளாக வழங்கிவருகிறது. முற்காலத்தில் மூவேந்தர்களால் முச்சங்கங்களை நிறுவி கண்ணை இமைகாப்பது போல் காத்து வளர்த்தார்கள். தமிழின் பெருமையை உலகினுக்கு முரசு கொட்டி அறிவிக்க ஐம்பெருங்காப்பியங்களும், பாரதியின் பாடல்களும், குறளும் போதுமானதாகும். தமிழ்மொழியிலிருந்துதான் மற்ற மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் தோன்றின. அந்நியர்களான ஆங்கிலேயர் ஆளுகையில் மிகவும் அவல நிலையிலிருந்தது. தமிழ் நாட்டிலுள்ள மக்கள் அந்நிய நாட்டு மொழியில்தான் கலைகளிருக்கின்றனவென்றும், பிழைப்புக்கு வழியாயுள்ளது என்றும் தமிழ்மொழியில் காவியக்கலைகள் நிரம்பியிருந்தும் விஞ்ஞானக்கலைகளில்லையே என்றும் தமிழ்மொழியைக் குறை கூறிவந்தனர். இவர்கள் தமிழ்மொழியின் பெருமையை நன்கு உணராததே காரணம். தமிழ் நாட்டைச் சிறப்பிக்க தமிழ்மொழியை வளர்க்க தமிழர்கள் பல கடமைகளைச் செய்தல்வேண்டும்.

ஒவ்வொரு தமிழனும் தமிழ் நாடெங்கும் அன்புபெருக்கி, அறம் வளர்த்து, இன்பவாழ்வு சிறந்தோங்குவதற்குரிய கடமையைச் செய்தல் வேண்டும். தமிழ் நாடு புத்துயிரும், புதுவாழ்வும் பெறுமாறுமனம், மெய்களால் தொண்டுபுரிதல் வேண்டும். தமிழ் நாடு ஒற்றுமைப்படுவதற்குரியநெறியில் உழைக்கவேண்டும் இதற்காக கூட்டுறவு முறையை தமிழ் நாட்டில் உண்டாக்க வேண்டும். தமிழ்மொழியினைவளர்க்க மேனாட்டு மொழிகளை யறிந்த மாணவர்கள் அன்னியநாட்டு மொழிகளை தமிழில்மொழி பெயர்க்கவேண்டும். பழங்காலத்தில் டாக்டர் சாமிநாதஐயர் என்பவர், கால் நடையாக ஊர், ஊராகச் சென்று, ஒவ்வொரு வீட்டின் மூலைமுடுக்குகளிலும் கறையானால் கறிக்கப்பட்டுகிடந்த ஏடுகளை அச்சிட்டு வெளியிட்டார். அதுபோல நாமும் அச்சிடவேண்டும். இதற்கு அரசாங்கமும் பல உதவிகளைச் செய்தல் வேண்டும். பல, கலைக்கழகங்களை நிறுவ வேண்டும். இவ்வாறு அரசாங்கமும், நாமும் தொண்டாற்றினால், நாடும், மொழியும் முன்னேறும். நாட்டில் நல்லாட்சி நடைபெறும் நீதியும் நிலைக்கும்.

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய செந்தமிழ் மணித்திருநாடு.

**சு. ரா. சேதுராம், IV D.**






In Birla Garden, New Delhi.

*Photos : S. Sankaran*

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS





A plane at Meenambakam


*Photo : S. Soundarapandian*

CONNEMARA PUBLIC LIBRARY
25 AUG 1955
MADRAS



Madras Medical College





Choolay, Mosque

*Photo : B. S. Mohamed Ali*

*Photos : S. Soundarapandian*

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS

# நாட்டின் செல்வம்

ஒரு நாட்டின் செல்வம் அங்கிருக்கும் மக்களே, அங்கிருக்கும் பொருள்கள் அல்ல; மக்களின் பெருமையும் புகழுமே அந்நாட்டின் செல்வம் ஆகையினால் அந்நாட்டு மக்கள் உயர்நிலையை அடைந்து பெருமையுடன் திகழவேண்டும்.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்று கூறியுள்ளார் ஔவையார். ஆகவே ஒரு நாடு மேன்மையுற அந்நாட்டு மக்களே காரணம் என்பதை விளக்குகிறதல்லவா? அதனால் நாட்டின் செல்வம் மக்களே. அவர்களே நாட்டைப் புகழுறச்செய்கின்றனர். அவர்களே நாட்டின் பெருமைக்குக்காரணம். ஆகையால் நாட்டு மக்கள் யாவரும் கல்வி கேள்விகளில் சிறந்து திகழ்தல் வேண்டும். அதுவே நமக்குச் செல்வமாகும். இது நோக்கியே வள்ளுவரும்

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந்தலை"

என்று செப்பினார். ஆகையினால் மக்கள் ஒற்றுமை, தியாகம், விடாமுயற்சி, வீரம், தன்னலமற்ற சேவை ஆகிய நற்குணங்கள் அமைந்திருக்க வேண்டும். இக்குணங்கள் இளமையிலேயே ஏற்படவேண்டும். இக்குணங்கள் நிறைந்திருந்தால் தான் நாட்டை உயர்நிலைக்குக் கொணரலாம்.

இளமையிலேயே மாணவர்கள் நல்லொழுக்கங்களிலும் அறிவிலும் சிறந்து விளங்கவேண்டும். மாணவர்களின் முன்னேற்றம் சமூகத்தின் நடைப்பழக்கத்திலே தான் ஏற்படுகிறது. அதனால் பெற்றோர்கள் முயற்சி எடுத்தால் தான் மாணவர்களை அறிவாளிகளாக்க முடியும். மாணவர்களைக் கொண்டே நாட்டை மேன்மையுறச் செய்யலாம். மாணவர்களினால் பல நாடுகள் மேன்மை அடைந்துள்ளன. இதற்கு ஜப்பானை உதாரணமாகக் கூறலாம். அந்நாடு முதலில் மிகவும் கீழான நிலையில் இருந்தது. பின்னர் அந்நாட்டின் அறிவாளிகள் சிலர் நாட்டை மேன்மையுறச் செய்தனர். மாணவர்களினால் பல நாடுகள் உயர்நிலைக்குக் கொண்டுவரப்படுகின்றன. பிறகு ஜப்பான்நாட்டு மாணவர்களை அமெரிக்கா இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு தொழிற் கல்வி கற்க அனுப்பினர். அவர்கள் பலவகைத் தொழில்களைக் கற்று தம் தாய்நாட்டைச் சீரும்சிறப்பும் அடையச்செய்தனர். இப்பொழுது ஜப்பான் உலகிலுள்ள வல்லரசுநாடுகளில் ஒன்றாகத்திகழ்கிறது. குண்டூசி முதல் கப்பல் வரை சகல தொழில்களும் செய்கின்றது அந்நாடு. ஏன்? நம் நாட்டையும் மேன்மையுறச் செய்ய முடியாதா? முடியும். மாணவர்கள் சகலகலைகளையும் கற்று நாட்டை உயர்நிலைக்குக் கொண்டு வரலாம்.

நம் நாட்டின் பழைய பெருமையை அடைய முயற்சிக்க வேண்டும். பாடுபட்டு உழைக்க வேண்டும். நம் நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தவேண்டும். மாணவர்களும் அதிக ஆவலுடன் பல கலைகளைக்கற்று நம்நாடு சீரும் சிறப்பும் அடையச் செய்தல் வேண்டும். நம் குடியரசு நாட்டை, பலப்படுத்தி உயர்நிலைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

நம் நாடு மேன்மையுற்றால் தான் பிறநாடுகளும் நம்மை மதிக்கும். நம் நாடு அக்காலத்திலேயே உயர்நிலையை அடைந்திருக்கிறது. இதற்குப்பல ஆதாரங்கள் உள்ளன. அவைகளில் சிலவற்றை இப்பொழுதும் நாம் காணலாம். முற்காலத்தில் கப்பலோட்டிக் கடாரத்தை வென்றதும் தமிழ்நாடு, உரோமாபுரிக்கு முத்தும் பவளமும் அனுப்பியதும் தமிழ்நாடு, சாவகத்திலும் காம்போஜத்திலும் தமிழ் மணமும் கமழுமாறு செய்ததும் நம்நாடு. இதிலிருந்து அக்காலத்தில் நம் நாட்டு மக்கள் சீரும் சிறப்பும் எய்திஇருந்ததாகத் தெரிகிறது. இன்னும் பல அத்தாட்சிகள் உள்ளன. மொகஞ்சதாரோ, ஹாரப்பா புதைந்து கிடந்த இடத்தில் தோண்டிப்பார்க்கும் பொழுது அங்குள்ள ஆயுதங்களும் செங்கற்களும் வடிநீர் வாய்க்கால்களும் மிக வேலைப்பாட்டுடன் செய்யப்பட்டுள்ளன. இதிலிருந்து நம் நாட்டின் நாகரீகத்தின் மேன்மையை அறியமுடிகிறது. அக்காலத்தில் மதுரை, ராமேஸ்வரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் கட்டப்பட்டுள்ள கோயில்களில் பல அபூர்வமான சிற்பங்களைக் கல்வெட்டுக்களின் மூலமாகக் காணலாம். நம் திண்டுக்கல்லின் மலைக் கோட்டையைப் பாருங்கள். இதிலும் விசித்திரமான குகைகள் இருக்கிறதல்

லவா? நவீனயுத்தக் கருவியாகிய பீரங்கியும் காட்சி அளிக்கின்றன. இவைகள் எல்லாம் நம் நாட்டின் பெருமைக்கு எடுத்துக்காட்டுக்களே யாகும்.

அதனால் ஒரு நாட்டின் செல்வம் மக்களே! அவர்கள் அடையும்புகழும், கீர்த்தியுமே அந்நாட்டின் செல்வம். நம் நாட்டின் செல்வங்களாகத் திகழ்பவர்கள் பலர். அவர்களில் பண்டித ஜவஹர்லால் நேருவும் காலம் சென்ற மோகனதாஸ் கரம்சந்த் காந்தியுமே யாவர். இவர்களை உலகம் புகழ்கிறதல்லவா? வல்லரசு நாடுகளும் மதிக்கிற தல்லவா?

நம் நாடு நீர்வளமும் நிலவளமும் மிக்கநாடு என்று கேள்விப்பட்டனர் மேல் நாட்டினர் நம் நாட்டுடன் வியாபாரத்தொடர்பு கொண்டனர். பவளமும், முத்தும், மிளகும் நம் நாட்டிலிருந்து கொண்டு சென்றனர். நாளடைவில் ஆங்கிலேயர் சிநேகித மனப்பான்மை காட்டுவதுபோல் தோற்றம் அளித்தனர். பின்னர் நம் நாட்டையே பிடித்துக் கொண்டனர். எதனால்? நம் நாடு செல்வத்தில் சிறந்து இருந்ததால் தான். நாட்டுமக்களே அதற்குக் காரணம். அதனால், நாம் இழந்தபெருமையை மீண்டும் அடைய முயற்சிப்போமாக!

S. வெள்ளிமலை, VI D.

★

# பொங்கற் புது நாள்

### அல்லது

## உழவர் விழா

பொங்கற் புதுநாள், தமிழரின் தனிப்பெருந் திருநாள். அன்று தமிழர் விழாக்கொண்டாடுவது மட்டும் அல்ல, தமிழகத்தின் நிலைமை பற்றியும் கூடிப்பேசி, மகிழ்ச்சியும், எழுச்சியும் கொண்டாட வேண்டிய நாள்.

பாடுபட்டால் பலன் உண்டு, உழைத்தால் வாழ்வு உண்டு, என்ற மூலக் கொள்கைக்கு இடமளிக்கும் நாள். காட்டைத்திருத்தி நிலமாக்கி நெற்றிவியர்வை நிலத்தில் விழ உழைத்தால் காடுகளை வயல்களாக்கி, வரம்பிட்டுத்தொகுத்து, உழுது நீர்ப்பாய்ச்சி, களை எடுத்துக் காப்பாற்றி, முற்றிய கதிரை அறுத்தெடுத்து முற்றத்தில் கொட்டி, அளந்து பார்த்து ஆனந்திக்கும் நாள். உழைப்பின் பயன் இதுவென உணர்ந்து மகிழ்ந்து பொங்கும் மகிழ்ச்சியை எடுத்துக் கூறுவதுபோல, பொங்கலோ பொங்கல், என்று தீந்தமிழ் புகன்று, தித்திக்கும் பண்டமுண்டு, திருநாள் கொண்டாடுகின்றனர்.

**உழவர் விழா :—**

"பொங்கல், உழவர் விழா. களத்திலே காணப்பட்ட பலன், வீட்டிலே புதுப்பானையிலே பொங்கி வழியும் நாள், பொங்கல் விழா.

செந்நெல்லும் செங்கரும்பும், பச்சைக்காய் கறியும் பசும் பொன்னிறப் பண்டகங்களும், மனை தோறும் குவிந்து, மக்கள் மனதிலே மகிழ்ச்சியூட்டும் நன்னாள். மார்பிலே சந்தனம் மணக்கும் நன்னாள்! கூந்தலிலே மலர்கள் மொய்க்கும் நன்னாள்! ஆடல் பாடல், கொட்டுமுழக்கு, குதூகலம் கூத்தாடும் நன்னாள், பொங்கல் விழா! பாடுபட்ட உழவன் உழைத்த அலுப்புத்தோன்றாது உள்ளம் மகிழ்ந்திடும் நன்னாள்.

கதிர் கண்டு ஓர் பூரிப்பு; அறுவடையின் போது ஓர் மகிழ்ச்சி! இவ்வளவுமான பிறகுதான் இன்பம் தரும் புது நாளைக்காண முடிகிறது.

எங்கும் பொலிந்திடுக எங்கள் தமிழ்த்திரு நாள்.

அ. சீனிவாசன், VI C.

# கிராமச் சீர்திருத்தம்

காலை வேளை. சூரியன் தன் பொற் கிரணங்களை வீசிக்கொண்டு அன்றைய அலுவலைச் செய்ய கிழக்கு திசையினின்றும் கிளம்பிவந்தான். பட்சி இனங்கள் பலதிறப்பட்ட கானங்களுடன் இரை தேடப் புறப்பட்டன. துயிலெழுந்த மக்கள் புத்துணர்ச்சியுடன் தோன்றினர். உலகங் காக்கும் உழவர்கள் தோள்களில் கலப்பைகளுடன் நிலங்களுக்குச் சென்றுகொண்டிருந்தனர். பச்சைப் பசேலென்று பார்ப்பவர் கண்களுக்கு இன்பமூட்டும் பசுமை நிறங்கொண்ட செடி கொடிகளின் மேல் முதல் நாளிரவில் பெய்த பனி விழுந்திருந்ததால் அத்துளிகளின்மேல் சூரிய ஒளி பட்டதும் முத்துக்களைப்போன்று அவை பிரகாசித்தன. சூரியனின் இளங்கதிர்களால் இருள் அகற்றப்பட்டு புத்தொளியுடன் விளங்கிய பூதலம் போன்று இளங்கோவனின் மனமும் அறியாமையாகிய இருள் அகற்றப்பட்டு புத்தொளியுடன் விளங்கியது.

இளங்கோவன் ஒரு பள்ளி மாணவன். திண்டுக்கல்லில் பள்ளி விடுதியில் இருந்துகொண்டு வாசித்துவந்தான். அவனுடைய பெற்றோர்கள் புதுப்பட்டி கிராமத்தில் இருந்தனர். இளங்கோவன் கோடை விடுமுறையின்போது தன் கிராமத்திற்கு வந்திருந்தான். அப்பொழுதுதான் அவனுடைய மனதில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது.

இளங்கோவன் நகரத்தில் வசிக்கும் ஒரு நாகரீக இளைஞன். சிறு வயதிலேயே பள்ளிப் படிப்பிற்கு நகரம் வந்துவிட்டபடியால் புதுப்பட்டியைப்பற்றி நன்றாக அறியாதவன். சிறு வயது முதல் பட்டண வாழ்க்கையையே பெரிதும் அறிந்தவனாதலால் இதுநாள் வரையிலும் இயற்கையுடன் இரண்டறக் கலந்து, இயற்கை எழிலை இன்பமுடன் பருக அறியாதவனாயிருந்தான். ஆனால், இன்றோ அவனுடைய மனதில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது; அதன் பயனாக இளங்கோவின் போக்கே வெகுவாய் மாறிவிட்டது. பூதங்கள் போன்று உருமிக்கொண்டோடும் மோட்டார்கள் செல்வதினால் ஏற்படும் புழுதி நிறைந்த தெருக்களையும், ஜனங்களின் ஆரவாரம் நிறைந்த வீதிகளையும், பார்த்துப்பார்த்து சலித்துப் போன அவன் கண்கள், புதுப்பட்டியில் சிந்து பாடும் சிற்றாறுகளையும், பறவை இனங்களின் பாட்டுக்களையும், வானமளாவிய மலைத்தொடர்களையும், பசுமையான சோலைக் காட்சிகளையும் கண்டதும், அவன் கண்கள் ஒரு புதிய ஒளி பெற்று விளங்கின. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்றவாறு அவனுடைய உள மாறுதலைத் தெள்ளென அவனது முகம் பிரதிபலித்தது. அவனுடைய விடுமுறைக் காலமும் முடிவடைந்தது. பள்ளி திறப்பதற்கு இரண்டு நாட்கள் முன்பே, இளங்கோவன் திண்டுக்கல்லிற்குப் பயணமானான்.

ஆயினும் அவனுடைய உள்ளம் மட்டும் புதுப்பட்டியின் அழகிய காட்சிகளையும், தெள்ளிய நீரைக் கொண்ட சிற்றாறுகளையும், பசுமையான சோலைகளையும், விட்டு அகலவில்லை. புதுப்பட்டியைக் கண்டுவந்தது முதல் அவனுக்கு ஒருநாள் கழிவது ஒரு யுகமாயிற்று. இப்படியாக காலமும் ஓராண்டு ஓடி மறைந்துவிட்டது. இளங்கோவனும் S. S. L. C. பரீட்சையில் தேறிவிட்டான். பிறகு தன் கிராமமாகிய புதுப்பட்டிக்குத் திரும்பினான்.

அதிலிருந்து எண்ணங்களும், திட்டங்களும் அவனுடைய மனதில் உலாவ ஆரம்பித்தன. மனம் வெகு துரிதமாக வேலை செய்ய ஆரம்பித்தது. அவன் பள்ளியில் படித்துக்கொண்டு இருக்கும்பொழுது, "கிராமப் புனருத்தாரணம்" (Rural Reconstruction) எனும் பொருள்பற்றி அவனுடைய உபாத்தியாயர் அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார். அதில் அவர் இந்திய தேசத்திற்கு கிராமங்களே ஜீவநாடி போன்றவை என்றும், கிராமங்களை எவ்வெவ்வழிகளில் சீர்திருத்தவேண்டும் என்பது பற்றியும், விளக்கிக் கூறினார். அவர் கூறிய வார்த்தைகள் அனைத்தும் அவனுடைய மனதில் அப்படியே பதிந்து இருந்தன. அவர் கூறியபடியே கிராமங்களைச் சீர்திருத்தும் புனிதத் தொண்டை தான் மேற்கொள்ளவேண்டுமெனக் கங்கணம் கட்டிக்கொண்டு அத்திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்ற யோசனையில் ஆழ்ந்தான்.

'மனமுள்ள இடத்தில், இடமுண்டு'. (Where there is a will, there is a way) அதன்படி இளங்கோவன் தன்னைப்போன்று கிராமச் சீர்

திருத்தப் பணியில் ஆர்வமுள்ள நண்பர்கள் பலரை ஒருங்குசேர்த்து அதற்கென நிதி திரட்ட ஆரம்பித்தான். எல்லோரும் தாராளமாக தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி புரிந்தார்கள். சிறிது காலத்தில், அந்நிதியின் உதவி கொண்டு புதுப்பட்டிக் கிராமத்தில் ஒரு சோலையின் நடுவே 'கிராமப் புனருத்தாரண நிலையமொன்று' எழுப்பப்பட்டது. அங்கு முதியோர்களுக்கும், சிறுவர்களுக்கும் இலவசக்கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கிராமத்தினரும் தங்களால் முடிந்த வரை இளங்கோவனுக்கும், அவனுடைய நண்பர்களுக்கும் பண உதவியும், மற்றைய உதவியும் அளித்துவந்தனர். அவர்கள் அளித்த ஊக்கத்தினால் இளங்கோவனும், அவனுடைய நட்பாளரும் முன்னைவிட பன்மடங்கு முயற்சியுடன் வேலை செய்தனர். அவர்களுடைய சேவை எல்லோராலும் பாராட்டப்பட்டு, போற்றற்குரியதாய் விளங்கியது.

காலம் கனவேகமாய்ச் சென்றது. பழைய புதுப்பட்டிக் கிராமம் புதிய ஒளி பெற்று, எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்து, கிராமங்களுக்குள்ளே திலகம்போலப் பொலிவுற்று விளங்கியது. இதைக்கண்டு அப்பணியில் ஈடுபட்டோருடைய மனம் பூரிப்படைந்தது. எண்ணிய எண்ணமாகிய மனக்கோட்டை ஈடேறியதைக் கண்ட இளங்கோவன் மிக்க உற்சாகத்துடன் காணப்பட்டான்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்பது வள்ளுவர் வாக்கன்றோ!

அதோ தெரிவதுதான், "புதுப்பட்டி கிராமச் சீர்திருத்த நிலையம்". வரிசையாக நிற்பவர்களுள் நடுநாயகமாய் தோன்றுபவன்தான் இளங்கோவன். அப்பக்கமிருந்து இனிய கானம் காற்றில் மெல்ல மிதந்து வருகிறதே, அதைச் சற்று கேட்போம்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே."

ஆம் தமிழ் நாட்டிற்கும், தேனினும் இனிய தமிழ் மொழிக்கும் புத்துயிரும், விழிப் புணர்ச்சியும் தந்து, தமிழரைத் தட்டியெழுப்பி வாழ வழிவகுத்துக் கொடுத்த கவிச் சிங்கம் அமரர் சுப்பிரமணிய பாரதியாரின் வீரமும், உணர்ச்சியும் பொங்கும் பொன் மொழிகள்தான் அவை! ஒவ்வொரு கிராமத்திலுள்ள மாணவர்களும் புதுப்பட்டி இளங்கோவனைப்போல தத்தம் கிராமத்தை முன்னேற்ற முற்படுவார்களாக.

**அ. சீனுவாசன், VI. C.**

★

# விஞ்ஞானம்

இன்றைய உலகநிலை என்ன? பல கலைகளைக் கற்று முன்னேறிக்கொண்டிருக்கிறது. அவற்றுள் விஞ்ஞானக் கலை முதன்மையானதெனலாம். முற்காலத்தைக் கற்காலம், உலோக காலம் என்றழைத்தோம் தற்காலத்தை **விஞ்ஞான காலம்** என்று துணிந்து கூறலாம்.

விஞ்ஞானம் என்றால் என்ன? இயற்கையின் ரகசியங்களை பல அறிவாளிகள் தங்கள் திறமையாலும், முயற்சியாலும் அறிந்து அவைகளை, மக்களின் வாழ்வுக்கு நன்மை பயப்பனவாய் அமைத்திருக்கின்றனர். இவ்வாறு ஆராய்வதைத் தான் விஞ்ஞானம் என்கிறோம்.

இக்காலத்தை நாம் விஞ்ஞான காலம் என்றழைக்கக் காரணமென்ன? தற்காலத்தில் நமது வாழ்க்கைக்குத் துணை புரிவது விஞ்ஞானமே. பல நோய்கள் தடுக்கப்படுகின்றன. மனிதன் பல துறைகளிலும் பயணம் செய்கிறான். உலகமெங்கும் குறுகிய காலத்தில் செய்திகள் அனுப்

பப்படுகின்றன. உலகம் ஒரு தேர் ஆகுமெனவைத்துக்கொண்டால், அதன் இருசு விஞ்ஞானம் என்று சொல்லவும் வேண்டுமா?

இனிச் சில விஞ்ஞானிகளேயும், அவர்கள் சாதித்த செயல்களேயும் ஆராய்வோம்.

வைசூரி, என்பது ஓர் கொடிய நோய். இதனுல் பீடிக்கப்பட்டவர்கள் பல இன்னல்களுக்குள்ளாயினர். ஒருவருடைய அம்மைக் கொப்புள நீரை மற்றொருவர் ரத்தத்தில் செலுத்தினுல், அந்நோய் குணமாகும் என்ற முறையை, சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் **எட்வர்ட் ஜன்னர்** என்பவர் கண்டறிந்தார்.

இன்றுள்ள பல வழிகள் மூலம் கொடிய தொத்து நோய்கள் உண்டாகின்றன. இந்த நோய்களுக்குக் காரணமாயுள்ள பூச்சிகளினின்றும் தயாரிக்கப்பட்ட மருந்து இரத்தத்தில் ஊசி மூலம் (innoculation) புகுத்தப்படுவதால், அந்நோய் குணமடையும். 1895-ம் ஆண்டு உயிர் நீத்த **லூயி பாஸ்டர்**, மேற்கூறிய ஆராய்ச்சிக்குக் காரணம்!

புற்று நோய் ஒருவருக்கு உண்டானுல், அவர் உயிர் தரிப்பது அரிது! ஏனெனில் இந்நோய்க்கு ஒருபுறம் சிகிட்சை செய்தால், மற்றொரு புறம் உடம்பில் ஏற்படும். இப்புற்று நோய் "**ரேடியம்**" என்ற பொருளில் இருந்துவரும் ஒளிக் கதிர்களால் குணமாக்கப்படுகிறது. இம்முறையைக் **கியூரி அம்மையார்** என்பவர் கண்டு பிடித்தார்.

**ராண்ட்ஜன்** என்னும் ஜெர்மானியர் எக்ஸ்ரே என்ற ஓர் சாதனத்தை விளக்கினுர். இதனுல் நம் உடலினுள் வியாதி ஏற்படின் அவைகளேக் கண்டு பிடித்து குணப்படுத்துகிருர்கள்.

இன்று உலகம் நாகரீகமடைய முக்கிய சாதனங்கள், புகைவண்டி, வானெலி, மின்சார சக்தி.

ஜேம்ஸ்வாட், என்பவர் நீராவிக்கு அமுத்தும் திறன் அதிகம் எனக் கண்டறிந்தார். இத்தத்துவமே, தற்காலப் புகைவண்டிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. புகைவண்டிகளில் என்ன நன்மைகள் ஏற்படுகின்றன வென்பதை நாம் அறிந்ததே.

வெகுதூரத்தில் இசைக்கப்படும் இசையோ, பேசப்படும் பிரசங்கமோ நாம் எளிதில் கேட்க உதவுவது வானெலிப்பெட்டி. ஒலி பரப்புமிடத்தில் ஒலி அலேகள் மின்காந்த அலேகளாக மாற்றப்பட்டு, கேட்குமிடத்தில் மீண்டும் ஒளி அலேகளாக மாற்றப்படுவதால், நாம் இசையினேக் கேட்கிறோம். மேற்கூறிய பணியைச் செய்யும் பொருள், வானெலிப் பெட்டியில் பொருத்தப்பட்டுள்ள **காலியம்** ஆகும். இது பொன்னிலும் அரிய பொருள்.

ஆதியில், மின்சாரம் என்பது ஒரு வித சக்தியாகும் என்பதை **வால்டா** என்பவர் கண்டறிந்தார். அதன் பின் பல மின்சார ஆராய்ச்சிகளே நடத்தியவர், **தாமஸ் ஆல்வாய் எடிஸன்** என்பவர். மின்சாரத்தால் ஏற்பட்டுள்ள நன்மைகள் அளவற்றன!

மனிதன் இப்போது, ஆகாயத்திலும் பறக்கக் கற்றுக்கொண்டான். இவைகள் எல்லாம் விஞ்ஞானத்தின் விளேவுகளே. விஞ்ஞானத்தினுல் சில அபாயகரமான பொருள்களும் கண்டறியப்பட்டுள்ளன. அவைகளே நாம் தீயவழியில் பயன்படுத்தினுல், உலகம் அழிவுறும் என்பதில் ஐயமில்லே.

அவற்றுள் உள்ள முக்கிய சாதனம் அணுக்குண்டாகும். இதனுல் அதிக சேதம் விளேயலாம். ஆனுல் இது நல்வழியில் பயன்படுத்தப்படலாம்; உலகமும் நாகரீக ஏணியின் மேற்படியை அடையலாம்; "ஒரு கோப்பையில் குறிப்பிட்ட அளவு அணுசக்தி நிரப்பப்பட்டால், அதிலிருந்து உலக முழுமைக்கும் மூன்றுண்டுகளுக்கு வேண்டிய மின் சக்தி கிடைக்கும்" என ஒரு அமெரிக்க விஞ்ஞானி கூறுகிருர். மேலும் அணுசக்தியினுல் கப்பல் முதலியவைகளேயும் இயக்கலாம்.

விஞ்ஞானத்தைப் பற்றியும், பல விஞ்ஞானிகளின் திறமையுள்ள செயல்களும், மற்றும் விஞ்ஞானத்தால் ஏற்படும் நன்மைகளும் கூறப்பட்டன. "கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகஅளவு" என்றபடி, விஞ்ஞானத்தால் நாம் விடாமுயற்சியுடன் விஞ்ஞானக் கலேயை நல்வழியில் பயன்படுத்துவோமானுல், உலகம் கலேயுலகாகக் களித்துத் தழைக்குமன்றே!

**D. S. ராசசேகரன், VI C.**

# வாசகசாலை

உலகில் உள்ள மக்களுள் ஒவ்வொருவரும் எப்பாடுபட்டேனும் கல்வியைக் கற்றுக்கொள்ள வேண்டும். கல்வியறிவைப் பெருதவர்க்கும் விலங்குக்கும் ஒருபேதமும் இல்லை. கற்றவனையே உலகம் விரும்பும் அரசனும் கற்றவன் வழி நடப்பான். இதனாலன்றோ, கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு என்றும் கற்கை நன்றே, கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே என்னும் அருமைத் திருவாக்குகள் எழுந்தன. இத்தகைய பெருமை வாய்ந்த கல்வியைப் பலரும் கற்றுப் பயனடைய வேண்டுமென்ற நன்னோக்கம் கொண்டே துரைத்தனத்தார் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளார். அவற்றுள் வாசகசாலையும் ஒன்று.

வாசகசாலைக்குச் சென்றால் அங்கு பலவகையான பத்திரிகைகளைக் காணலாம். ஒருவன் எல்லா தினசரிப்பத்திரிகைகளையும் வாரப் பத்திரிகைகளையும் விலைக்குவாங்கிப் படிப்பது முடியாத காரியம். அக்குறையை அவன் வாசகசாலை வாயிலாகப் போக்கிக் கொள்ளலாம். பத்திரிகைகளைப் படிப்பதனால் உலகிலுள்ள பலநாட்டுச் செய்திகளை அறியலாம். ஒருவன் இரயில் வண்டி எப்பொழுது வரும் எப்பொழுது புறப்படும் என்பதை அறிய வேண்டுமானால் அதற்குப்பத்திரிகை துணை செய்யும். உத்தியோகம் பெறவேண்டிய ஒருவர் தேவையுள்ள இடத்தைப் பத்திரிகை மூலம் தெரிந்து கொள்ளலாம். இப்படியே ஒவ்வொன்றையும் அறியலாம். வாரப் பத்திரிகைகளிலும், மாதப் பத்திரிகைகளிலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தொடர்கதைகளையும், ஹாஸ்யப் பகுதிகளையும் படிக்கலாம். ஒருவன் ஒரு நூலைப் படித்திருக்கலாம். அதற்குப் பொருள் சொல்லலாம்; ஆனால் அந்நூலின் உட்பொருளை அறியச் சக்தியில்லாதவனாக இருக்கலாம். அத்தகைய நூல்களின் உட்பொருளை அவன் இத்தகைய வார மாதப் பத்திரிகைகளைப் படித்து அறியலாம். சுருங்கக்கூறின் வாசகசாலைக்குச் சென்று வாசிப்பது மக்களுக்கு உலக முன்னேற்ற வழிகளையும் பலநாட்டு மக்களின் பழக்க ஒழுக்கங்களையும் அறிவதற்கு அநுகூலமாகின்றது.

வாசகசாலை எங்கெங்கு இருக்கவேண்டும் எனில் ஒவ்வொரு வீதியிலும் இருக்கவேண்டும். அதற்காக நகராண்மைக் கழகத்தார் அதிக ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். பொது மக்களும் நகரக்காப்பாளரையே எதிர்நோக்கி இராமல் பல தனவந்தர்களை அடுத்து உதவிபெற்று வாசகசாலைகளை நிறுவிச்சீர்பெற நடத்தவேண்டும். ஒரு பெரிய நகரத்தில் ஒன்றிரண்டு வாசகசாலைகளே இருக்குமானால் அங்கு எத்தனைபேர் சென்று படிக்க இயலும்? அன்றியும், பகல் முழுவதும் உழைத்துவிட்டு வீட்டுக்கு வந்தவர்கள் பத்திரிகைகளைப்படிக்க விருப்பமிருப்பினும் அலுப்பினால் அவ்வளவு தூரம் செல்ல விரும்பமாட்டார்களன்றோ? ஆதலின் வாசகசாலை வீடுதோறும் அமையவேண்டும். அங்ஙனம் தங்கள் வீட்டுக்கு அருகிலேயே வாசகசாலை அமைந்திருந்தால், மக்கள் அங்குசென்று படிக்க மனம் கொள்வார்கள். அதனைத் தங்கள் பொழுதுபோக்காகக் கொள்வார்கள். அதனால் படிக்கும் பழக்கத்தையும் பெறுவார்கள்.

ஆயினும், மக்கள் வாசகசாலை எங்கள் தெருவில் ஏற்படட்டும் அப்பொழுது சென்று படிப்போம் என்று காலத்தை வீணாக்குதல் கூடாது. இது அலை ஓய்ந்தபிறகு சமுத்திரத்தில் நீராடுவோம் என்று காத்திருப்பதற்குச் சமமாகும். காற்றுஉள்ளபோதே தூற்றிக்கொள் என்னும் முதுமொழிப்படி தங்களுக்கு ஓய்வு கிடைக்கும் நேரங்களிலெல்லாம் வாசகசாலைக்குச் சென்று வாசிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளவேண்டும். அதனால் ஏற்படும் நன்மைகள் அளவிறந்தன என்பதைப் பின்பு அவர்களே அறிவார்கள்.

வணக்கம்.

பி. சுந்தரராஜன், VI C.

# கிராம எழில்

இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறத் தக்க இடம் கிராமமே. "பணம், பணம்" என பணத்தாசை கொண்ட நகரமக்களுக்கு, கிராமத்தில் திகழும் இயற்கைக் காட்சிகளைக் காண, கண்டு ரசிக்க ஆசை ஏது? அதிர்ஷ்டம் தான் ஏது? அன்றி நேரந்தான் ஏது? மாண்புமிக்க கிராமத்தார் இயற்கையின் எழிலைக் கண்டு ஆனந்தத்தில் அமிழ்ந்து விடுகின்றனர். ஆற்றங்கரையோரங்களில் அழகுடன் தலைதூக்கி விண்ணோக்கிச் செல்லும் தெங்கு மரங்களின் தெவிட்டாத காட்சிதான் என்னே! அவ்விருட்சத்தின் மட்டைகள் செய்யும் ஒலியோ, தேவருலகத்தில் தெள்ளிய பெண்டிர் வீணைகளை மீட்கின்றனரோ? என நம்மையும் அறியாது நம் செவி முதலாய ஐம்புலன்களும் மேனோக்குகின்றன.

காடுகளில் வளரும் மூங்கில்களில் வண்டுகள் துளையிட, அத்துளைகளின் வழியே காற்றுப்புக, அக்காற்றால் ஏற்படும் ஒலியைக் கேட்ட நம் முன்னோர் குழலை அமைத்தனர் - என நகரத்தார் படித்து ஆச்சரியத்தில் அமிழ்ந்து விடுகின்றனர். ஆனால் எம்போன்ற கிராமத்தார் அவ்வொலியை நேரிலேயே கேட்டு இன்புறுகின்றனர்.

ஓங்கி வளர்ந்து, நெடுங்கிளைகளோடு, பச்சைப் பசேலென்ற இலைகளோடு பாமரர் இளைப்பாற, இருப்பிடமாக, இயற்கையாக அமைந்துள்ள மரங்களின் மாட்சி வியக்கத்தக்கது அம் மரங்களினூடே பசுங்கிளிகள் பழங்கிள்ளி பந்தாட, அக்கிளிகளினிடம், "அக்கா, அக்கா, ஓர் பழம் போடு" எனக் கூவி, கனிகளின் உருசி பார்க்கப் பதறிடும் மக்கள் தான் எத்தனை பேர். கொண்டு வந்த உணவைக் கூடுகளில் இருக்கும் குஞ்சுகளுக்கு ஊட்டி, மீதி உணவைத் தானே உண்ணாது, மற்றக் காக்கைகளுக்கும் பகிர்ந்து கொடுத்து ஆனந்தம் எய்துவதைக் கண்ணுறும் நாம் வெட்கித் தலைகுனியவேண்டியதாகின்றது.

கவிதைகளும், கட்டுரைகளும், சிற்பங்களும் கிராம இயற்கை எழிலைக் கொண்டுதான் முடிவடைந்தது; முடிவடைகிறது; முடிவடையும். இயற்கை நுழையாது இயற்றப்படும் பாட்டில்லை. இவ்வித இயற்கை எங்கு காணப்படுகின்றது? கிராமத்திலேயேதான்.

செழிப்பாக ஓங்கி வளர்ந்து, பசேலென்ற தாள்களோடு கூடிய நெல்வயல்களின் காட்சியைக் கண்ணுறும் பொழுது பிரமித்து நிற்கவேண்டியதாகின்றது. இவற்றினூடே பகல் ஒளியன் பிரகாசித்துக் கொண்டிருப்பான். அப்போது மேகம் அவனைக் கவர்ந்து, கடக்கும். அப்படிக் கடக்கும் பொழுது திடீரென்று நிழலொன்று நம்மைச் சூழ்ந்துபிரியும். அந்நிழல் ஏகும் வேகத்தைக் காணும்பொழுது, விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட விமானத்தின் வேகம் இவ்வேகத்திற்கு எம்மட்டும் என்றுதான் தோன்றும்.

பகலெல்லாம் பிரகாசித்து மக்களின் மாண்பையும், மகிழ்ச்சிகளையும் கண்டு, இன்புற்று தன் வெயிற்கதிர் மயங்கியவனாய் மேற்றிசையில் தினமும் சாய்வான். இவ்வேளை, வீடுவிட்டேகிய மாந்தர் மகழ்ச்சியுடன் அவரவர் மாடங்களுக்குத் திரும்புவர். பச்சையை நோக்கிப் பலவிடம் சென்ற ஆக்கள், அன்புடன் தன் கன்றுகளைத் தேடி கொட்டிலுக்கு ஓடிவந்தடையும். மாலையில் மலரும் பூக்கள் மலரும், கோவில்களில் அந்திவிளக்கேற்றி, அந்தி மணியடிப்பர். பெண்டிர் பேராசையுடன் வீட்டு விளக்கேற்றி, சமயலறைக்குள் நுழைவர். ஆந்தைகள் அலறி இரைதேட ஆரம்பிக்கும். பைங்கிளிகள், குயில்கள், காகங்கள் இவைபோன்ற பிறவும் பகலெல்லாம் பசியாற உண்டு, உண்ட மயக்கத்தால் இன்புற்று, தம் தம் இல்லந்தேடி ஏகும். அப்படிச் செல்லுங்கால் தம் முழுத்திறனையும் இசையின்கண் செலுத்தி வானம்பாடி ஏகும். அக்கானங்களெல்லாம் ஒன்று சேர்ந்து தாளம், மேளம், குழல், வீணை, ஸ்வரம் இவைபோன்ற பல வாத்தியக்கருவிகள் முழங்குவன போன்றிருக்கும். இவையெல்லாம் அடங்கி அமைதியுற்றவுடன், குளத்தின்கண் திகழும் மதகுகளினின்றும் பிரியும் நீரின் இரைச்சல் இனிமையான வீணையின் ஒலிபோன்று இன்புறச்செய்யும். இவற்றினூடே மாலையில் மலர்ந்த பூக்கள் நாறும்.

இவ்வித இயற்கைக் காட்சிகளினூடே அமைந்திருக்கும் கிராமத்தின் அழகு இதனினும் மிக்கழகு வாய்ந்ததாகும். பொழுதுபோக்க இயற்கையில் முளைத்த பூங்காக்கள் தான் எத்தனை! "உலகம் என்பது நம் நகர்தான்" என பெருமிதம் கொள்ளும் நகரத்தார் பார்க்கவேண்டும். இவ்வியற்கைக் காட்சிகளை. 'பட்டிக்காடு' என மமதையாகக்கூறும் 'நகரத்தார்' இவ்வியற்கைக் காட்சிகளைக் கண்ணுற்றாராகில் 'பட்டி மக்களிடம்' சாஷ்டாங்க மன்னிப்புக்கோருவர் என்பதற்கு ஐயமுண்டோ?

**மக்கள்**


இயற்கையோடியைந்த இன்பவாழ்வை இனிதுடன் ஏந்தி இகமீதினிலே இன்புற்று வாழ்பவர் கிராமத்தார். நகரத்தார் போன்று வேலை செய்துவிட்டு வெங்கதிரோனின் கதிர்களினின்றும் மறைந்து இளைப்பாற ஆயிரம் ரூபாயால் அமைந்த மாடம் ஒன்றும் வேண்டியதில்லை; இயற்கையில் முளைத்த மரங்களின் மாட்சிமிக்க நிழலொன்றே போதுமானது. விலைபோட்டு விசிறிவாங்கி – காற்றை விலைக்கு வாங்கவேண்டியதில்லை; மெல்லென்று வீசும் தென்றலே போதுமானது. விலைபோட்டு விறகு வாங்கவேண்டியதில்லை. நூற்றுக்கணக்கில் சிலவுசெய்து ஒரு மருத்துவர் (Doctor) வேண்டியதில்லை; இயற்கையில் முளைத்த சஞ்சிவிகளின் வேர், இலை, பட்டை—இவைகள் அச்சமின்றி அவ்வியாதிகளை அகற்றும். இருநூறு ரூபாய்க்கோர் ரேடியோ (Radio) வாங்கவேண்டியதில்லை; இயற்கையில் இன்பமாக விளையும் பாக்களே போதுமானது. நான்கணுவுக்கோர் அடுப்பு வாங்கவேண்டியதில்லை; அழகியதொன்றை அவர்களே பண்ணிக்கொள்வர். வேஷ்டி இன்றி வீதியில் வரிசையாக நிற்கவேண்டியதில்லை; தாமே நூல் இழைத்திரித்து, தாமே தமக்கு வேண்டியதொன்றைப் பண்ணிக்கொள்வர். எண்ணெயின்றி கடையில் ஏந்திநிற்கவேண்டியதில்லை; தமக்கு வேண்டிய எல்லாவித எண்ணெயையும் தாமே தயாரித்துக்கொள்வர். சுருங்கச் சொல்லின் நகரத்தார்போன்று எந்தப் பொருளுக்கும், எவரையும் எதிர் நோக்கார் கிராமத்தார். தமக்கு எதுவேண்டுமோ அதனைத்தாமே தயாரித்துக்கொள்வர் கிராமத்தார். இவற்றினின்றும் விலகிய அதிமுக்கியமானதொன்று—நகரத்தார் ஆயிரம், ஆயிரமாகப் பொருளை ஈட்டினாலும், தன் வயிற்றுக்கு—சாண் வயிற்றுக்கு பிறரிடம் கையேந்தவேண்டியதாகின்றது. ஆனால் கிராமத்தார் தானே அரும்பாடுபட்டு, விளையச்செய்து, அதனால் எவரையும் எதிர்நோக்காது உண்டு, உண்ட மீதியை நகரத்தார்க்குப் பகிர்ந்து கொடுத்து, அளவிலா ஆனந்தம் எய்துவர்.

கிராமத்தார்க்கு ஒருமுழத்துண்டும், நான்கு முழவேஷ்டியும் போதுமானது. இயற்கையோடியைந்து, இயற்கைவாழ்வை ஏந்தி நடாத்தும் அவர்க்கு வேறென்னவேண்டும். நகரத்தார் நாழிகைக்கணக்கில் நன்கு வேலைசெய்யவேண்டும். தவறினால் தண்டிக்கப்படுவர். ஆனால் கிராமத்தார் தமதிஷ்டம்போல் தமது நிலத்தில் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபடுவர். அதேசமயத்தில் அவரது இஷ்டம்போல் ஓய்வெடுத்துக்கொள்வர். யாதெனக் கேட்க எவர்க்கும் உரிமையில்லை. பசுக்களை நன்கு பேணி வளர்ப்பர். வந்தவர் எவராயினும் 'வாருங்கள்' என இனிமையுடன் வரவேற்று, மகிழ்வடையச் செய்வர் கிராமத்தார். விருந்தோம்பல் குணம் ஒருங்கே அமையப்பெற்று அமைதியுடன் வாழ்வர். யாவரிடத்தும் அன்புடன் பழகுவர். வீரத்துடன் விளங்குவர்; எழிலுடன் துலங்குவர். வேற்றுமையின்றி விழிப்பர்; வெறுப்பின்றி நோக்குவர். எதற்கும் அஞ்சார்; எதனையும் அழகுடன் முடிப்பர். டாம்பீகம் என்னும் பேயினை ஓட்டி, தந்தை மகாத்மாகாந்தி போல் திகழ்வர். 'பொறாமை' என்பதைப் பாதாளப்படுகுழியில் புதைத்து 'பொறுமை' யுடன் வாழ்வர். ஆண், பெண் என்னும் வேற்றுமை அற்றவர் கிராமத்தார்.


அண்டை வீட்டார் அவதியுற்றால் தாமும் அதில் பங்கெடுத்து, பாங்குடன் அவ்வவதியை அகற்றுவர். தேனீக்களின் கூட்டம் போல் திகழ்ந்தாலும், ஒற்றுமையின் உயர்வை உணர்ந்தவர். தம்முள் அஞ்சாப் பழி இருப்பினும் அடுத்தார்க்கு இடங்கொடார். சுவாமி திருவிழாக்கள் நடக்கும் போழ்து இவர்களின் ஒற்றுமைபுலப்படும். எவரையும் ஏங்கவிடமாட்டார்கள். தம்மிடம் வேலை செய்யும் எளியார்க்கு தானியத்தையே கூலியாகக் கொடுப்பர். அதனால் 'பஞ்சம்' என்பதைப் பார்க்க முடியாது பட்டிகளில். மின்னுவதைக் கண்டு மயங்கிவிடார். அமாவாசையை அறிய அறிவுள்ளோர் இயற்றிய நூல்கள் ஏதும் வேண்டார். நிலாவைக் கண்ணுற்றே, என்று என்பதை எக்களிப்புடன் சொல்லிவிடுவர். மழை உண்டு, இல்லை என்பதை வானத்தை நோக்கிக் கூறிவிடுவர். அனாவசிய சிலவில் அமிழ்ந்துவிடாது எதனினும் கருத்துடன் விளங்குவர். தற்காலத்தில் உபகாரச் சம்பளம் பெற்று நீங்கிய நகரத்தார் கிராமம் வந்து வாழ்வதை ஏக களிப்புடன் கிராமத்தார் வரவேற்கின்றனரென்பது, அவர்களின் அன்புமிக்க மனதை அலாதியாக எடுத்துக் காட்டுவதாகும்.

வாழ்க கிராமம்! ஓங்குக கிராம எழில்!

M. P. ராமசாமி,
V Eng'g. Class.




Christian Medical College Church, Vellore.
*Photo : B. S. Mohamed Ali*



Birla Temple, New Delhi.
*Photo : S. Sankaran*

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS




Jain Temple, Calcutta.



Egmore Railway Station Photo: S. S. Pandian


CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUN 1955
MADRAS



Crocodiles Photo: V. Sadasivam



Arabic College, Vellore
Photo: B. S. M. Ali



Khaz Mahal, Red Fort, Delhi
Photo: S. Sankaran

# எமது விடுதி வாழ்க்கை

மதுரை மாவட்டத்திலே திண்டுக்கல் என்ற நகரிலுள்ள எம் விடுதியானது காற்றில் பரவும் கீதம் போல் புகழ் மணத்தை எங்கும் நினைவூட்டு கிறது. இது புனித மரியன்னையின் உயர்தரப் பள்ளிக்கு எதிரில் அமைந்துள்ளது. அதன்பெயர் "புனித மரியன்னையின் விடுதி" என்பதாகும்.

எமது விடுதியில் சுமார் 300 மாணவர்கள் வசிக்கின்றார்கள். அவர்களில் பலர் 100 மைல் களுக்கப்பாலிருந்தும் வந்திருக்கிறார்கள். வருட ஆரம்பத்தில் எம் விடுதிக்கு மாணவர்கள் பூவை நாடிவரும் தேனீக்களைப்போல திரள்திரளாக வந்து சேர்வார்கள். எங்களுக்கு எங்கள் விடுதி கரும்பு. அதைச் சுற்றித்திரியும் எறும்பு. நாங்கள். அதற்குக் காரணம் எம் விடுதியின் மேற்பார்வை யாளரின் திறமையும், சட்டதிட்டங்களும், கல்வி கற்றற்குரிய சூழ்நிலைகளும், நல்லுணவும் அடிப் படைகளாகும். எங்கள் விடுதியில் ஜாதி, மதம் முத லிய வேற்றுமைகள் கிடையா. எங்களுக்கு இட வசதிநலமாக அமைந்திருப்பதோடு படிப்பதற்கு ஒரு தனியான அறையும் அமைந்து இருக்கிறது. அதில் எல்லா மாணவர்களும் உட்கார்ந்து அமைதி யாகப் படிப்போம். மாலையில் சுமார் 2 மணி வரையிலும் படித்துவிட்டு 7½ மணிக்கு சாப்பிடு வோம். எங்கள் பிளேட்டை நாங்களே கழுவி சுத்தம் செய்வோம். சாப்பிடும்போது எல்லோ ரும் வரிசையாக உட்கார்ந்து சாப்பிடுவோம். 7½ மணிக்கு நாங்கள் காலை உணவு அருந்துவோம். சாப்பாடு சுகாதார முறைப்படி கலப்புணவாக கொடுக்கின்றார்கள். இரவில் 8½ மணி முதல் 9½ மணி வரையிலும் படித்துவிட்டு பின் தூங்கச் செல்வோம். பின் காலை 5 மணிக்கு எழுந்து பல் துலக்கி எங்கள் பாடங்களைப் படிப்போம். படுக்கை வைத்திருக்கும் அறை, உறங்கும் அறை, பெட்டி வைத்திருக்கும் அறை, வியாதியாளர் அறை, படிக்கும் அறை முதலியன தனித்தனியாக உள்ளன. மாணவர் வீட்டிலிருந்து வருபவர் தங்குவதற்காகத் தனி அறைகளும் அமைக்கப்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் 10 நிமிஷம் வரையிலும் கடவுளைத் தியானிப்போம். நாங்கள் சுறுசுறுப்பாக இருப் பதற்கு மாலையில் 2 மணி வரையிலும் வியர்வை விழ, சூரிய ஒளி உடலில் விழும்படியாக விளை யாடுவோம். புட்பால், ஹாக்கி, டென்னிஸ், வாலி பால் முதலிய விளையாட்டுக்களை விளையாடு வோம். மாணவர்கள் இன்பத்திற்காக ரேடியோ வும் அமைக்கப்பட்டிருக்கின்றது. எங்களுக்கு வேண்டிய மருந்து வகைகளும்; கார்டு, கவர், நோட்டு, புத்தகம், மை, பேனா, பென்சில் முதலி யவை எல்லாம் இங்கேயே வாங்கிக்கொள்ள வசதி உண்டு. உத்தரவின்றி வெளியில் போகக் கூடாது என்பது எம் விடுதியின் முக்கிய ஒழுங் காகும். மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது இரு முறையோ வெளியில் சுமார் 4 மணி நேரம் சென்றுவரலாம். எம் விடுதி இரண்டு மாடிகளா லானது. பார்ப்பவர்கள் மனதைக் கவரும்படி யாக அமைந்ததுள்ளது. எம் விடுதியின் முன் பூச்செடிகளும், கொடிகளும், நிழல்களும், மரங் களும் நிறைந்து எம் விடுதியை அலங்கரிக்கின்றன. எங்கள் புத்தகம், சட்டை எல்லாவற்றையும் மேஜையில் வைத்துக்கொள்வோம். சுமார் வரு டத்திற்கு ஒருமுறை விடுதியின் ஆண்டுவிழா நடத்துவோம். அன்று நீதியை ஊட்டும் நாடக மும் நடத்தப்படும். மாணவர்கள் எப்பொழுதும் குதூகலமாகவும், நேச மனப்பான்மை உடையவர் களாகவும் இருப்பார்கள். எங்கள் விடுதியிலே எங்களை மகிழ்விப்பதற்கும் விடுதியை அழகு படுத்துவதற்கும் மலையில் வாழும் மான் ஒன்று இருக்கிறது. திண்டுக்கல் என்றாலே தண்ணீர் நெருக்கடி என்ற எண்ணம் உங்கள் மனதிலே உடனே தோன்றுகிறதல்லவா? அது எங்களைப் பொறுத்த வரையில் விதிவிலக்கு. தண்ணீர் வசதி எங்களுக்கு மிகவும் உண்டு. தினமும் காலை யில் குளிப்போம். வாரத்திற்கு ஒருமுறை எண் ணெய் ஸ்நானம் உண்டு. இவ்வளவு சௌகரிய முள்ள எம் விடுதியை விட்டு விடுமுறை நாட்களில் வீட்டிற்குப் போகக்கூட மனம் வராது. சுமார் முதல் பாரம் முதல் ஆறும் பாரம் வரையில் படிக்கும் சிறிய மாணவர்களும், பெரிய மாணவர் களும் இருக்கிறார்கள். எம் விடுதிக்கு தலைவராக உள்ளவரும், உப தலைவராக உள்ளவரும் சுவாமிமார்களே. அவர்கள் எங்களைத் தீய செய்கைகளில் பழகவிடாமல் தங்கள் பிள்ளைகளைப் போல பாதுகாத்து வருகிறார்கள். அவர்களின் தயாள குணமும், பெருந்தன்மையும், இரக்கமும், தன்னலமற்ற சேவையும் என்போன்றவர்களால் எடுத்துச்சொல்லமுடியாது. அவர்களை ஆண்ட வன் காப்பாற்றி அவர்கள் மேலும், மேலும் எம் போன்ற நன் மாணவர்களை நாட்டில் பெருக்க, நோயற்று வாழவேணுமாய் நாங்கள் எல்லாம் வல்ல கடவுளை வணங்குகின்றோம். எங்கள் விடுதியில் இன்னும் சிறிதுநாளைக்குள் "டெலி போன்" அமைக்கவேண்டுமென்று நினைக்கின் றோம். அமைந்தும்விடும். விடுதியின் உயர்வே எங்கள் உயர்வு; எங்களது உயர்வே விடுதியின் உயர்வு. எங்கள் விடுதியும் நாங்களும் ஒன்றே! நாங்கள் விடுதியைவிட்டுப் பிரிந்த காலத்தும், விடுதி மட்டும் எங்கள் மனத்தைவிட்டுப் பிரியாது.

வாழ்க! நம் தோழர் வாழ்க! நம் விடுதி.

**N. L. வீரண்ணா, IV D.**

# யானை

உலகில் காணப்படும் விலங்குகளில் உருவத்தால் மிகப்பெரியது யானையே. அது ஏழு முதல் பத்தடி உயரம் வரையில் வளரும். சில இடங்களில் பதினுன்கு அடி உயரமுள்ள யானைகளும் உண்டு. "யானை படுத்தால் ஆள் உயரம்" என்ற பழமொழியே அதன் பெருந் தோற்றத்தை விளக்கும். அதன் தலை மிகவும் பெரியது. கழுத்து மிகக்குறுகியிருப்பதால், தன் விருப்பப்படி நாற்புறமும் திரும்பிப்பார்க்க, அது தன் உடல் முழுவதையும் திருப்பி ஆகவேண்டும். அதற்கு முன்பக்கத்தில் மற்றைய விலங்குகளைப்போலன்றி புதுமையாகத் துதிக்கை என்று வழங்கும் ஓர் உறுப்பு அமைந்திருக்கிறது. அவ்வுறுப்பே அதற்குக் கையாகவும், மூக்காகவும் பயன்படுகிறது. அதன் நுனியில் விரல்போல் வளையக் கூடியதாய் அமைந்த ஒரு சிறிய உறுப்பு ஊசி போன்ற மிகச்சிறுபொருளையும் நிலத்திலிருந்து எடுக்கவல்லதாக அமைந்துள்ளது. யானை முறம் போன்ற பெரிய தன் காதுகளை, ஈ, எறும்பு முதலியன உட்புகாதிருக்க எப்போதும் அசைத்துக் கொண்டேயிருக்கும். அதன் கண்கள் அதன் பெரிய உருவத்தை நோக்குமிடத்து மிகமிகச் சிறியனவே. அதன் கால்கள் தூண்களைப்போல் திரண்டு பருத்து, அதன் பளுவான உடலைத் தாங்குதற்கேற்றபடி உள்ளன. அதற்கு வால் தடித்துகுறுகி நுனியில் உறுதியான மயிர்க்கற்றை உடையதாய் இருக்கும். ஆண் யானைக்கு வாயிலிருந்து வெளியில் நீண்டுவளைந்த இரு பற்களை, தந்தம் என மக்கள் வழங்குகின்றனர். மிகப் பெரிய மரக்கிளைகளை அவற்றிற்கும் துதிக்கைக்கும் இடையில் வைத்து முறித்துத்தள்ளும். பெரிய மரங்களையும் வேருடன் பிடுங்கி எறியும். யானையின் உடல் கருமை நிறம் வாய்ந்ததாயுள்ளது.

நமது நாட்டில் மைசூர், திருவாங்கூர் முதலிய காடுகளில் அவை மிகுதி. மூங்கிற் காடுகளில் பெரும்பாலும் யானைகள் திரிவதைக் காணலாம். யானை மரத்தின் சிறு கிளைகளையும், மட்டைகளையும், தழைகளையும், புல்பூண்டுகளையும், செடிகொடிகளையும் தின்னும் அது கரும்பு, வெல்லம், அரிசி முதலியவற்றை விரும்பியுண்ணும். மாமிசத்தைத் தொடாது.

யானை அறிவு நுணுக்கம் வாய்ந்தது, சுறுசுறுப்பு உடையது. எளிதில் பழகி அடங்கி நடக்கும் தன்மையுடையது. பிறர் நன்றியை மறவாது. பழிக்குப் பழி வாங்கும் தன்மை அதற்கு உண்டு.

"சிதைவிடத்தொல்கார் உரவோர்; புதை
பட்டுப்பா டூன்றுங் களிறு" [யம்பிற்

என்பதிலிருந்து யானையானது போரின்கண் பல அம்புகளால் அடிபட்டு புண்பட்டவிடத்தும் தளராது நின்று தன் பெருமையை நிலைநிறுத்துவதிலிருந்து அதனுடைய ஊக்கத்தை வலியுறுத்துகிறது.

யானை பழிக்குப் பழி வாங்கும் என்பதை துதிக்கையில் ஊசியால் குத்திய தையற்காரன் மேல் சேற்றைவாரி அடித்த கதை நமக்கு நினைவூட்டுகிறது. யானைகளுக்கு, நீர் நிறைந்த தடாகங்களிலும், ஆற்றின் மடுவிலும், இறங்கி நீர் விளையாடலில் மகிழ்ச்சி அதிகம். நீர் விளையாட்டில் யானை துதிக்கையில் நீரை இழுத்துக்கொண்டு விசையுடன் பல பக்கங்களில் சிதறும்படி வீசிக் களிக்கும். அது இரண்டு மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை குட்டிபோடும். ஒருமுறையில் ஒரு குட்டிக்குமேல் போடாது. அது நீண்ட ஆயுளுடையது. இருநூறாண்டுகள் வாழும் யானைகளும் உண்டு. மக்களிடம் அகப்பட்ட யானை ஏறக்குறைய் நூறாண்டுகள் உயிர்வாழும்.

யானை பிடிப்பதில் பழகிய பலர் ஒன்றுகூடிக் காட்டுக்குச் செல்வர். அங்கு யானைகள் கூட்டங் கூட்டமாய்ச் செல்லும் வழியில், பல பெரிய பள்ளங்களை வெட்டி, அவற்றைத் தழைகளாலும், மெல்லிய மூங்கில்களாலும் மூடிவைப்பார்கள். அவ்வழி வரும் யானைகள் அப்பள்ளங்களில் விழுந்துவிடும். அப்படி விழுந்த யானைகளைப் பழகிய யானைகளின் உதவியால் வெளியே கொண்டுவந்து பழக்கிக்கொள்ளுவார்கள்.

யானை வலிமையுடையதால் மக்களால் செய்ய முடியாத பெரிய வேலைகளையெல்லாம் செய்ய உதவுகிறது. காடுகளை அழிக்கவும், அக்காட்டு மரங்களைக் குறிப்பிட்ட இடத்துக்குக் கொண்டு வந்து அடுக்கவும் அது பயன்படுகிறது. புலி வேட்டையாடவும் யானை பழக்கப்படுகின்றன. சர்க்கஸ் நடத்துவோர் யானைகளைக் கொண்டு பல அரிய வேலைகள் செய்துகாட்டி மக்களை வியப்படையச் செய்கின்றனர். பெரிய கோயில்களில் யானையை வளர்க்கின்றனர். போரில் கோட்டைக் கதவுகளையுடைத்தும், எதிரிகளைத் தொலைத்தும் வெற்றி தந்த யானைகளின் வீரச்செயல்களைக் கதைகள் மூலமாக அறிகிறோம். அதன் தந்தங்களும், எலும்புகளும் விலைமதிப்புடையவை. அவைகளைக் கொண்டு வேலைப்பாடுள்ள பல பொருள்கள் செய்கின்றனர். இவ்வாறு இறந்தும் பயன்படுவதாலன்றோ யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்! என்ற பழமொழி வழங்கி வருகின்றது.

இரா. ரெத்தினசபாபதி, VI E

# உயர்நிலைப்பள்ளியில் தொழிற்கல்வி

தற்போது நம்நாட்டில் ஒரு வேடிக்கையான நிலை நிலவுகிறது. எஸ். எஸ். எல். சி. முடித்தவர்களும், பி. ஏ. முடித்தவர்களுமாக நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் வேலை கிடைக்கவில்லை, வேலை கிடைக்கவில்லை என்று திரிகிறார்கள். அவ்வாறு பலர்திரிவது தெரிந்தபோதிலும், கல்லூரிகளில் இடநெருக்கடி என்னவோ உயர்ந்த வண்ணமாகவே இருக்கிறது; படித்துவிட்டு வெறும் பட்டத்தை மட்டும் பெற்றுக்கொண்டு வெளியேறுவோர் தொகையும் அதிகமதிகமாக ஆகிவருகின்றது இதனால், ஓர் வேலைக்கு இண்டர் மீடியட் படித்தவர்கள் தேவை என அறிவிப்பு வந்தால், அந்த வேலைக்கு மூன்றாம் வகுப்பில் தேறிய B. A. முதற்கொண்டு, முதல் வகுப்பில் தேறிய பி. ஏ. வரை மனுப்போடுகிறார்கள். இவ்வாறு ஓர் பக்கம் வேலை கிடைக்காத் திண்டாட்டம் நிலவுகிறது.

ஆனால் அரசாங்கம் கூறுகிறது வேலைக்கு ஆள் கிடைக்கவில்லை, வேலைக்கு ஆள்கிடைக்காத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும் என்று. டெக்னீஷியன்கள் அதாவது இயந்திர நுட்பம் தெரிந்த மாணவர்கள் ஏராளமாகத் தற்போது இந்தியாவிற்குத் தேவையென அரசாங்கம் அறை கூவுகின்றது. மக்களைச் சிறப்பாக மாணவர்களை நோக்கி, ஆனால் டெக்னீஷியன்கள் தொகை ஆமை வேகத்தில் தான் பெருகுகிறது. ஒரு பக்கம் பட்டக் கல்வியை மட்டும் படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லை என வீணே திரிவோர் தொகை விஷம்போல ஏறுவதும், மறுபக்கம் தொழிற்கல்வி கற்றவர்கள் தேவை தேவையென அரசாங்கம் அறிவித்தும் அத்தகையோர் தொகை ஆமை வேகத்தில் முன்னேறுவதுமான இந்த வேடிக்கை நிலை நாட்டில் நிலவுவது ஏன்? இந்த நிலை மாற வேண்டாமா?

இந்தநிலை மாறவேண்டும்; மாறித்தான் ஆக வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசாங்கம் செய்திருக்கிறது; செய்து வருகிறது. அந்த முயற்சிகளில் ஒன்றுதான் உயர்நிலைப் பள்ளிகளிலேயே தொழிற்கல்வி போதிப்பது என்பது. அவ்வாறு தொழிற்கல்வி போதிக்கத் தகுதி என அரசினரால் அனுமதியளிக்கப்பட்டுத் தற்போது தொழிற்கல்வி பரப்பிவரும் பள்ளிகளுள் நமது பள்ளியும் ஒன்று.

நமது பள்ளியில் உயர்தர வகுப்புகளில் மட்டும் சுமார் 800 மாணவர்கள் படிக்கின்றனர். இவ்வளவுபேர் படித்தும் தொழிற்கல்வி கற்றுவருபவர்கள் தொகை மாத்திரம் நூறுக்குள் தானிருக்கிறது. இவ்வாறு நூறுக்கும் குறைந்தபேர்கள் கற்கும் இந்த இயந்திரவியற் பிரிவுக்காக (Engineering Section), ஆயிரக்கணக்கில் ரூபாய்களைச் செலவிட்டுப் பல கருவிகளை (Tools) வாங்கி வைத்திருக்கின்றனர், நாட்டில் தொழிற்கல்வி பெருக வேண்டும் என்ற நன்னோக்குடன்.

தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் பாடம் சம்பந்தப்பட்ட விஷயத்தில், தங்களுக்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்கள் பயிலும் பாடங்களை, முன்னதாகவே, மேல் வகுப்பு மாணவர் படிப்பதைவிட விரிவான முறையில் படித்துப் பயன் பெறுகிறார்கள். இவ்வகுப்பில் நாலாம் படிவத்தில் படிக்கும் மாணவன் படிப்பதைத்தான்—இன்றைய ஐந்தாம் ஆறாம் படிவ மாணவர்களும், சர்வகலாசாலை முதல் வகுப்பு மாணவர்களும் படிக்கிறார்கள்.

தொழிற்கல்வி சம்பந்தப்பட்ட விஷயத்தில், எஞ்சினீரிங் செக்சனில் என்னென்ன கருவிகள் இருக்கின்றன. அவற்றின் பெயர்கள் என்ன என்று மற்ற மாணவர்கள் தெரிந்து கொள்ளாத நிலையில் இருக்கவும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் அங்குள்ள ஒவ்வொரு கருவியையும், அதன் உபயோகத்தையும் நன்கு அறிந்திருக்கின்றனர், அவற்றை உபயோகித்ததின் மூலமாக.

இவ்வாறு பலருக்குக் கிடைக்காத இந்த வாய்ப்பு, ஒரு சிலருக்குக் கிடைத்திருக்கிறது. இதன்மூலம் பாடப்படிப்புடன் நில்லாது, மாணவர்கள் தொழிற் கல்வியையும் கற்றுக்கொண்டு, அதன்மூலம், தங்கள் எதிர்கால வாழ்விற்கோர் வழிவகுத்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இப்படிப்பட்ட மாணவர்தொகை பெருகுவதன் மூலம், நாட்டில் தொழிற் கல்வியறிவு பெருகும்; தொழிற்சாலைகள் பெருகும்; மக்களின் வாழ்க்கையில் வளம்பெருகும்.

இங்ஙனம் பயன்பல பயக்கும் இந்தத்திட்டத்தை வகுத்து செயற்படுத்திவரும் நமது அரசினருக்கு நமது நன்றி உரித்தாகுக.

**K. Kamachi,**
V Eng'g. Class.

# கிராமத்துப் பாடசாலை

நமக்கு சிறிது காலத்திற்கு முன் கிடைத்திருந்த 'கிறிஸ்துமஸ்' விடுமுறைக்கு பழனிக்கு அருகிலுள்ள 'ஒபுளாபுரம்' என்ற கிராமத்திற்குச் சென்றிருந்தேன். ஒரு நாள் சூரியன் உதித்து சிறிதுநேரம் சென்றபின் வீட்டைவிட்டு வெளியில் புலங்களைச் சுற்றிப் பார்க்கும் எண்ணத்தோடு சென்றேன். புலன்களைச் சுற்றி ஓடி வயல்களில் பாயும் தண்ணீரையும், அவற்றில் அங்கும் இங்கும் ஓடித்திரியும் கயல் மீன்களையும், தத்திக்குதிக்கும் தவளைகளையும், மேனியை வாட்டும் வாடைக் காற்றினால் பச்சைப்பசேலென்றிருக்கும் பயிர்கள் அசைந்து ஆடுவதையும் உற்று நோக்கிக்கொண்டு சிறிது தூரந்தான் சென்றேன். அப்பொழுது நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்கு மண்வெட்டியைத் தோளில் வைத்துக்கொண்டு வந்த முருகன் என் முன்வந்து, "யாரு, சின்ன ஐயாவா! எப்போ சாமி வந்தீங்க? என்றான். நானும், 'நேற்றுத் தானப்பா வந்தேன்" என்றேன். பிறகு அவனிடம் வேளாண்மையை விசாரிக்க எண்ணி, "நமது ஊரில் இந்த வருடம் மழை எப்படி? விளைவு எப்படி?" என்று கேட்டேன்.

முருகன் :—எப்படியோ இருக்கு கடவுள் புண்ணியத்திலே! போன வருடம் இருந்த இருப்புக்கு இந்த வருடம் பரவாயில்லை. மேலும் ஆடிப் பட்டத்திலே வெதச்சது பாருங்க, அதுக்கு மோசமில்லை, ஏன் இன்னும் இரண்டு மூணு வாரத்திலே அறுக்கலாம்.

நான் :—" உனக்கு எப்படி"?

முருகன் :—" பரவாயில்லே சாமி. அந்தா கிழக்கே பாருங்க. அந்த நாத்தங்காலு, அதுதான் கொஞ்சம் மோசமாப்போச்சு. இந்த வருடம் கடவுள் கண்ணைத் திறந்து ஏதோ கொஞ்சங் குடுத்தாரு. இந்த வருடம் எங்க குடும்பம் பட்டினியில்லாமே சாப்பிடும்".

நான் :—" கோடிவீட்டுக் கோவிந்தன் தோட்டம்" என்று சொல்லும்பொழுது ஊரின் வடபுறத்திலிருந்து, "ஓரெண்டுரெண்டு, ஈரெண்டு நாலு" என்று பிள்ளைகளின் வாய்ப்பாடு சத்தங் கேட்டு, "ஏது! என்னமோ புதுசாயிருக்கே? நம்ம கிராமத்திலே, பள்ளிக்கூடம் ஏதும் ஏற்பட்டு இருக்கோ?

முருகன் :—" ஆமாங்க! என்னமோ 'வள்ளுவர் பாடசாலையாம். ஆரம்பிச்சு இரண்டு மாசமாகுது. அதுவேறே வந்து ரொம்ப சங்கடமாய் இருக்கு சாமி".

நான் :—" என்னமோ பெரிய மலைபோல் சொல்லுறாயே. என்னப்பா அவ்வளவு சங்கடம்"?

முருகன் :—" அது வந்த பிறகு வீட்டுக் காட்டிலே திரிஞ்ச புள்ளே குட்டிகளெல்லாம் ஓங்களப்போல "—என்று அவன் முடிக்கு முன் பாடசாலையைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலால் தூண்டப்பட்டவனாகி, "சரி முருகா அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சென்றேன். வீட்டில் காலைச் சிற்றுண்டி தயாராய் இருந்தது. அதைச் சாப்பிட்டு விட்டு பள்ளிக்குப் புறப்பட்டேன். வீட்டைவிட்டு சிறிது தூரந்தான் சென்றிருப்பேன். அப்பொழுது 5½ அடி உயரத்தில், ஒரு கையில் குடையும், மற்றொரு கையில் ஒரு கெடிகாரத்தையும் பிடித்துக் கொண்டு வீதியில் வந்துகொண்டு இருந்தார் ஒருவர். அவர் தான் கிராமத்துப் பாடசாலையின் உபாத்தியாயராய் இருக்கவேண்டுமென யூகித்துக்கொண்டு வேகமாய் நடந்து அவரைச்சந்தித்தேன். உடனே "Good Morning Sir" என்றேன். அவரும் மறுமொழியாக "Good Morning" என்றார்.

நான் :—" நீங்கள்தானா இந்த ஊர் ஸ்கூல் டீச்சர்? நீங்கள் வந்து எவ்வளவு காலமாச்சு சார்?"

உபாத்தியாயர் :—ஆமாம். நான்தான் இந்த ஊர் ஸ்கூல் டீச்சர். வந்து இரண்டு மாத காலமாகிறது. நீங்கள் யார்? புதிதாய் இருக்கிறதே? இந்த ஊர்தானா உங்களுக்கு?" என்று வினவினார்.

நான் :—" இல்லை சார், நான் திண்டுக்கல்லில் படித்துக்கொண்டு இருக்கிறேன். விடுமுறையானதால் இங்கு வந்தேன்".

உபாத்தியாயர் :—" உங்களுக்கு இப்ப லீவா ?"

நான்:—" ஆமாம். கிறிஸ்துமஸ் வெகேஷன் ".

உபாத்தியாயர் :—" எங்கள் ஸ்கூலுக்குக் கூடத்தான் இந்த மாதம் 21-ம் தேதியிலிருந்து லீவு துவங்குகிறது " என்று சொல்லி முடிப்பதற்குள் " திருவள்ளுவர் பாடசாலை "யை அடைந்து விட்டோம். சட்டாம் பிள்ளையும் பள்ளிக்கூடம் துவக்குவதற்காக மணி அடித்தான். உபாத்தியாயர் என் பக்கம் திரும்பி " வாங்க சார், நமது ஸ்கூலை பார்த்துவிட்டுப் போகலாம் " என்று அழைத்துக்கொண்டே பாடசாலையை அடைந்தார். அவர் நுழைந்த வுடன் பையன்கள் எழுந்திருந்து " குட்மார்னிங் சார் " என்றார்கள். உபாத்தியாயர் ஒரு பையனைக் கூப்பிட்டு, " டே அந்த பெஞ்சை இப்படி எடுத்துப் போடு. சார் உட்காரட்டும் " என்றார். நானும் " த்தேங்ஸ் சார் " என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தேன். அழகிரி என்னும் பையன் எழுந்திருந்து, "சார் சார், ராஜை பள்ளிக்கூடத்திற்குக் கூப்பிட்டேன். அவன் வர மாட்டேன்னு சொல்லிக்கிட்டே அவுங்க வீட்டிற்குள் ஓடிட்டாஞ் சார் " என்று சொன்னான்.

உபாத்தியாயர் :—" ஏன் வரமாட்டானும்?"

அழகிரி :—" அது, அவுங்க அப்பா திருச்சிக்குப் போயிருக்கிறாராம். அவன் ஆட்டுக்குட்டி மேய்க்கணுமாஞ் சார் ".

உபாத்தியாயர் :—" அடே சுந்தரம் நீயும் ரத்னமும் போய் அந்தப் பயலை இங்கு இழுத்துக் கொண்டு வாருங்கள் " என்று சொல்லவும் அவ்விரண்டு பெரிய பையன்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே போய் ஐந்து நிமிஷத்திற்குள் ராஜை இழுத்துக்கொண்டு வந்தார்கள். ராஜுவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டு இருந்தது. உபாத்தியாயர் பிரம்புடன் வெளியே நின்றுகொண்டு " (f)வ்பூல், என்ன, என் சங்கதி தெரியவில்லையோ? முதுகுத் தோலை உரிச்சுடுவேன் " என்று பிரம்பை ஓங்கினார்.

ராஜு :—" இல்லே சார், இல்லே சார், இனிமே ஒழுங்கா வந்திடுறேஞ்சார். உங்களைக் கும்பிடுறேஞ்சார். வந்திடுறேஞ்சார் " என்று அழவும் அவரும் விட்டுவிட்டார்.

உபாத்தியாயர் :—" சரி, நேற்றுக் கொடுத்த வீட்டுக் கணக்கை எடு " என்றார்.

ராஜு :—" சார், ந...நான் எழுதிக்கிட்டு இருக்கும்பொழுது யெ...யெ... யெந்தம்பி கிழிச்சுப் புட்டாஞ் சார் " என்று அழுது கொண்டே சொன்னான்.

உபாத்தியாயர் :—" போனால் போகிறது. நாளைக்கு காண்பிக்காவிட்டால் வட்டியும் முதலுமாக உதை விழும். ஜாக்கிரதை " என்று சொல்லி, பிள்ளைகளைப் பார்த்து " அடே, எல்லோரும் வெளியே போய்விட்டுச் சீக்கிரம் வாங்க " என்று சொல்லவும் ஒரே கும்பலாக வெளியே ஓடினார்கள். அப்பொழுது எனக்கும் உபாத்தியாயருக்கும் கீழ்க்கண்ட சம்பாஷணை நடந்தது.

நான் :—" இந்த ஸ்கூல் எப்ப சார் துவக்கினது? நான் செப்டம்பரில் வந்தபொழுது ஒன்று மில்லையே!" என்று கேட்க, அவர் ரிக்கார்டுகளைப் புரட்டி ஒரு சீட்டை எடுத்து, என் கையில் கொடுத்து, " அக்டோபர் மாதம் 15-ம் தேதியிலிருந்து சார் " என்றார்.

நான் :—" இதற்கு முன் நீங்கள் எங்கு இருந்தீர்கள்? "

உபாத்தியாயர் :—" மதுரையில் இருந்தேன் சார் " என்று சொல்லிக்கொண்டே Attendance எடுக்க ஆரம்பித்தார்.

உபாத்தியாயர் :—" கிருஷ்ணன் "

கிருஷ்ணன் :—" 63. கிருஷ்ணன் பிரஷென் சார் ".

உபாத்தியாயர் :—" முருகேசன் "

முருகேசன் :—" 64 முருகேசன் பிரஷென் சார் "

உபாத்தியாயர் :—" நாகராஜன் "

நாகராஜன் :—" 65 நாகராஜன் பிரஷென் சார் " இப்படியாக Attendance எடுத்து முடிந்ததும் உபாத்தியாயர் பாடம் நடத்த ஆரம்பித்தார்.

உபாத்தியாயர் :—" முதல் வகுப்பு பாடம் படி. இரண்டாங்கிளாஸ் பாடம் எழுது தேர்ட்டு ஸ்டாண்டர்டு இந்த கணக்கைப்போடு. நான்காவதும் ஐந்தாவதும் செய்யுள்படி " என்று சொல்லிக்கொண்டே முதல் கிளாஸ் பக்கமாகப் போய் செல்வன் என்பவனை பாடம் படிக்கச் சொன்னார்.

செல்வன் :—ஒரு கிழிந்த நோட்டை திறந்து, ப-ட-ம், படம். ம-ர-ம், மரம். ப-ட்-ட-ம்

பட்டம். யா–னை, ஆனை. உபாத்தியாயர் பையன் மண்டையில் ஒரு குட்டுக்குட்டி யானை என்று சொல்லச் சொல்ல அவனும் சரியாகச் சொல்லி முடித்தான்.

உபாத்தியாயர் :—" த்தேர்டு ஸ்டாண்டர்ட் சிலேட்டை எடு ; அடே இந்தக் கணக்கைப்போடு என்று சொல்லி ஒரு புத்தகத்தைத் திறந்து ஒரு கணக்கைக் காண்பித்தார் "

துரை :—ஒரு வியாபாரி - (இ) "

நடராஜன் :—" ஒரு வியாபாரி (இ) "

துரை :—" சார், சார் திரும்பத்திரும்பஞ் சொல்ருஞ்சார் ".

உபாத்தியாயர் :—" அடே சொல்லாதே ".

துரை :—" நான்கு மாடு வாங்கி......லாபமா நஷ்டமா என்று போட்டு முடித்தான். அதற்குள் ராஜு எழுந்திருந்து " சார், சார் இன்னும் அந்த கணக்கை ஆரம்பிக்கலே சார் ".

உபாத்தியாயர் :—எல்லாம் நேற்று ஆரம்பித்தாகிவிட்டது. நீ தான் வரவில்லை. சரி கூடிய வரையில் போடு. முடியாவிட்டால் சொல்லித் தருகிறேன். அடே நான்காம் வகுப்பு செய்யுள் சொல்லு " என்று சொல்லவும்.

வேலன் :—" அறஞ்செய விரும்பு ; ஆறுவது சினம் " என்று சொல்லுமுன் முனிசாமி, " சார் இதெல்லாம் நேற்றே ஒப்பிச்சாச்சு சார். இன்றைக்கு ' உடையது கருமம் ' என்ற பாட்டிலிருந்து சார் ".

உபாத்தியாயர் :—" அடே வேலா ' உடையது கருமம் ' என்ற பாட்டிலிருந்து சொல் " என்று சொல்லி " அடே முனிசாமி இராத்திரி பாடம் படிக்கவில்லையோ ? உம் அடே பயல்களா யார், யார் பாடம் படிக்கவில்லை " என்று கேட்டார்.

வேலன் :—" நான் படித்தேஞ்சார். முனிசாமி தாஞ்சார் படிக்கலே "

உபாத்தியாயர் :—" அடே முனிசாமி ஏண்டா படிக்கலே " ?

முனிசாமி :—" அவன் வேணுமென்றுசொல்ருஞ்சார். உங்களுக்கிட்டே காட்டிக்கொடுத்து உதை வாங்கிக் கொடுக்கணும் என்று 'கருவம்' வச்சிருக்காஞ்சார். அதெல்லாம் சும்மாச்சுக்கும் தூக்கிப்போடுறாஞ்சார் ". என்று சொல்லவும் உபாத்தியாயர் என்னைநோக்கி, " பார்த்தீங்களா சார், எங்கள் பையன்களுடைய பேச்சை " என்று கூறவும் " சிறு பிள்ளைகள் தானே, அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள் " என்றேன்.

அதன் பிறகு நானும் பள்ளிக்கூடம், தோட்டம் முதலியவற்றைச் சுற்றிப் பார்த்துவிட்டு உபாத்தியாயரிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தேன். போகும் வழியில் நாமும் சிறு பிள்ளையாய் இருக்கும்பொழுது இப்படித்தானே பேசியிருப்போம் என்று நினைத்துக்கொண்டே சென்றேன்.

அ. சீனுவாசன், VIC

CONNEMARA PUBLIC LIBRARY
1955
MADRAS

# இணைகர விதி (Parallelogram law of forces)

BY
K. ETHIRAJULU. L. M. E.

**பொது விஞ்ஞானம் பயிலும் மாணவன்** (General Science Student):—*[மாலை மணி 5] ஏனப்பா, என்ஜினியரிங்! பெரிய படிப்பு படிப்பதாக நினைத்துக்கொண்டு என்னை அன்றொருநாள் முக்கோண விதி, இணைகர விதி என்றெல்லாம் தமிழிலும் ஆங்கிலத்திலும் கேட்டுத் திக்குமுக்காடச் செய்தாயே, எங்களுக்கு போன வாரமே எங்கள் ஸயன்ஸ் கிளாஸில் பரிசோதனைகளோடு நடந்தது.*

**தொழிற்கல்வி பயிலும் மாணவன்** (Engineering Student) :— *ஓஹோ! அப்படியா, உங்களுக்கு இப்போதுதான் நடக்கிறதோ. அதுசரி, அந்த இணைகர விதியைக் கொஞ்சம் சொல்லேன் பார்ப்போம்.*

**ஸ. மா.** (Science Student) :—*என்னப்பா இது, நடந்தது போன வாரம், இப்ப கேக்கிறாயே! கொஞ்சம் ஒருதரம், நோட்டை ஒரு திருப்பு திருப்பினேன்னா உடனே அப்படியே உருட்டிடுவேன்.*

**எ. மா.** (Engineering Student) :—*அடடா, இதுதான் உன்னோடு ஒரு பெரிய தொல்லை. நீ படிக்கிறதெல்லாம் பரீக்ஷைக்காகத்தான் போலிருக்கிறது. உனக்காகத் தெரிந்துகொள்ள வேண்டுமே என்ற அக்கறை வேணுமப்பனே. சரி, தொலையட்டும். அப்படி ஒப்பிக்காவிட்டாலும் உனக்குத் தெரிந்ததைத்தான் சொல்லேன்.*

**ஸ. மா.** :—*ஏது விடமாட்டாய் போலிருக்கிறதே. சரி சொல்லுகிறேன். தப்பாயிருந்தால் உடனே சொல்லிவிடு.*

**எ. மா.** :—*சரி... சொல்லு.*

**ஸ. மா.** :—*ஒரு வஸ்துவின் மேல் இரண்டு விசைகள் தாக்கி...... அவ்வஸ்து சமநிலையிலிருந்தால் அவ்விரு விசைகளையும்......ஒரு இணைகரத்தின் அண்டைப் பக்கங்களால் அளவிலும்...திசையிலும் காட்டலாம். சரிதானா?*

**எ. மா.** :—*ஏதோ பரவாயில்லை. திக்கித் திணறியாவது சொல்லிட்டாயே, அந்தமட்டுக்கும் சந்தோஷம். ஆமா! இதை எதுக்கப்பா நாம் படிக்கணும்? இதனால் நமக்கென்ன உபயோகம்? நமக்கில்லாவிட்டாலும் போகிறது, பிறருக்காவது உபயோகமாகிறதா—இதைப் படிப்பதன் அடிப்படையான நோக்கம்தானென்ன? சொல்லு பார்ப்போம்.*

**ஸ. மா.** :—*இந்தாப்பா, போதும், நிறுத்து. அன்று கேட்டாயென்று இன்று சொன்னால், எதுக்கு, ஏன், எப்படி, எப்போ என்றெல்லாம் கேக்கிறாயே. பாடத்திட்டத்தில்* (Syllabus *ல்*) *இருக்கு, வாத்தியார் சொல்லிக் கொடுத்தார். பரீக்ஷையில் கேட்டா எழுதுவேன். இல்லாவிட்டால் பேசாமலிருக்கவேண்டியதுதானே. இந்த மாதிரி எனக்கொண்ணும் சந்தேகம் வர்ரதில்லையே.*

**எ. மா.** :—*சந்தேகம் வந்தால்தான் உடனே பக்கத்து பையன்கிட்ட சொல்லி வாத்தியாரைக் கேக்கச் சொல்லியிருப்பாயே.*

**ஸ. மா.** :—*ஏன், நான் கேக்கமாட்டேனோ?*

**எ. மா.** :—*அவ்வளவு தைரியம் உனக்கிருக்கா?*

**ஸ. மா.** :—*சரி சரி. நாளைக்கே நான் கேட்டு உனக்குச் சொல்றேனோ இல்லையான்னு பார்.*

எ. மா. :—அடேடே கோவிச்சுக்கிறயே, இதெல்லாம் அவரைக் கேட்டுத் தொந்தரவு பண்ணவேண்டாம். எங்க வாத்தியார் சொன்னதை நான் சொல்லித்தருகிறேன். என் வீட்டுக்கு இன்றிரவு வருகிறாயா ?

ஸ. மா. :—இப்ப என்ன பண்ணப்போறே? இப்பவே சொல்லேன்.

எ. மா. :—உனக்கென்னப்பா ! பாடங்களோ கம்மி. அதுவும் பரீக்ஷைக்கு முன்னாலேயே முடிந்துவிட்டது. பரீக்ஷை சமயத்திலெல்லாம் படிக்க சாகவாசம் கிடைக்கிறது. எங்களைச் சொல் ! இப்போ போய் கணக்கெல்லாம் போடணும். காலையிலெழுந்து பேட்டரியில் நடக்கும் ரசாயன கிரியைகளைப் படித்து கிளாஸில் ஒப்பிக்கத் தயார் செய்யணும்.

ஸ. மா. :—நான்தான் சொன்னேனே அப்பவே கேட்டயா, எழவெடுத்த என்ஜினியரிங் எடுக்கவேண்டாம், வேண்டாம்னு. இப்ப எடுக்காம இருந்திருந்தா, நீயும் நானும், இப்ப, அப்படியே, ரவுண் ரோடு பக்கம் வாக்கிங் போயிட்டு அப்படியே ரயில்வே ஸ்டேஷன் பக்கம் வந்து ரோட்டோடே வீட்டிற்கு வரலாமல்லவா.

எ. மா. :—நீ, ஸயன்ஸ்லே, இருதயம், நுரையீரல் முதலியனவெல்லாம் படிச்சிருப்பயே. அதெல்லாம் படித்தபின்னுமா, அந்தப் புழுதியெழும்பும் ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் வாக்கிங் போகலாமென்று சொல்றே? நானெல்லாம் அதிலே ரன்னிங் கூட போகமாட்டேன். விஷயத்தை மறந்துட்டேனே. உனக்கு பொழுது போகமாட்டேங்கிறது, ஏன்னா, வேலையோ கிடையாது. அப்படியிருந்தாலும் நீ சும்மா யிருக்கக் கூடாது. இன்னும் பல ஸயன்ஸ் புத்தகங்களை புரட்டிப் படிக்கணும். உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கட்டாயம் கிட்டும். நான் என்ஜினியரிங் எடுக்கவில்லையானால் உன் சந்தேகம் நிவர்த்தியாகுமா, யோசித்துப்பார். நான் இன்னமும் ஏதாவது கேள்விகள் கேட்பேனென்று இருந்துவிடாதே. கட்டாயம் $7\frac{1}{2}$ மணிக்குள் வந்துவிடு.

ஸ. மா. :—சரி, வரட்டுமா,

[ஸயன்ஸ் மாணவன் வீட்டிற்குச் சென்று புத்தகங்களை வைத்துவிட்டு சாப்பிட்டபின் சுமார் $7\frac{1}{4}$ மணிக்கு வீட்டை விட்டு சிநேகிதன் வீட்டிற்குப் புறப்பட்டான். சிநேகிதன் வீட்டில் மின்சார விளக்குகள் அணைந்துகிடந்தன. ஒரு தாழ்வாரத்தின் ஓரம் யாரோ ஒருவர் சின்ன சிமெண்ணை விளக்கு வைத்துக்கொண்டு, ஏதோ வேலை செய்வதாகத் தெரிந்தது.] உடனே ஒரு பாட்டு ஞாபகம் வந்து மெதுவான குரலில் பாடுகிறான்...... குத்தாலத்திலே இடியிடிச்சா கோயமுத்தூர் விளக்கணையும்......

எ. மா. :—வந்துட்டயா ? கொஞ்சம் வெளியில்தான் இரு. லைட் போட்டவுடனே உள்ளே போகலாம்.

ஸ. மா. :...ஆமா ! நீ யென்ன பண்றே ? நானும் என்ஜினியரிங் படிக்கிறேனு, உன் கை வேலையைக் காட்றயா ?

எ. மா. :—உனக்கு கேலி பண்ணத்தான் தெரியும். Fuse போயிடுத்து, அதைப் போடறேன்.

ஸ. மா :-அட பரவாயில்லையே! போனமாதம் வீட்டிலே fuse போயி, என்னைப் போடச்சொன்னாங்க, நான் நமக்கொண்ணும் தெரியாதுன்னு சொல்லிப் பிட்டு பக்கத்திலிருந்த வயர்மேனை கூப்பிட்டு பார்க்கச்சொன்னேன். அவனும் உன்னைப் போலத்தான் சின்னஸ்குரூடிரைவரைச் வச்சிக் கிட்டு என்னமோ ஒரு கம்பியைப் போட்டுட்டு, நின்னுக்கிட்டே யிருந்தான். எங்கப்பா என்னைக் கூப்பிட்டு இந்தா இதை அவங்கிட்டே குடுத்து போகச் சொல் என்று கொடுத்தார். கொடுக்கும் போது பாத்தா,...எட்டணு ! அடேடே இந்த சின்ன வேலைக்கா இவ்வளவு பணம்...நமக்கும் தெரிஞ்சா இந்த எட்டணுவிலே ஒரு சினிமா பார்த்திருக்கலாமே...உம்...அவன் அதிர்ஷ்டம் அப்படி என்று மனசுக்குள்ளே நினைச்சுக்கிட்டேன்.

எ. மா :—சரி: fuse போட்டாச்சு, இனிவா நம் ரூமிற்குப்போகலாம்.

ஸ. மா :—என்ன, ரூமிற்குள் இப்படியும் அப்படியும் வயரும் கம்பியுமா போட்டிருக்கே.

எ. மா :— இது ! புதுசா ஒரு வயரிங் சொல்லிக்கொடுத்தார் வாத்தியார். அதைப் போட்டுப் பார்க்கிறேன். சரி அப்படி நாற்காலியில் உட்கார். பேப்பர் பென்ஸிலோடு வருகிறேன்.

ஸ. மா :—ஆமா ! இந்த மின்சாரம் எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது, அதைக் கொஞ்சம் சொல்லேன்.

எ. மா :—அதுவா, பலவிதங்களில் நமக்குக் கிடைக்கிறது. 1. எரிபொருள்களை (fuels) க் கொண்டு யந்திரங்களை இயங்கச்செய்து, மின்சார ஜனனிகளை (Electric Generators) ஓட்டுவது. 2. ஹாலண்டு போன்ற நாட்டில்

ஸ. மா :—wind மில்தானே அது தெரியும்...

எ. மா :—ஆறு, ஏரி முதலிய விடங்களில் உள்ள தண்ணீரைத் தேக்கி, அந்நீர குழாய்களின் மூலம் எடுத்துச்சென்று அந்நீரால் சுழலும் சக்கரங்களுடன் (water wheels) மின்சார ஜனனியை இணைத்து மின் உற்பத்தி செய்கிறார்கள்.

ஸ. மா :—நீரைத்தேக்கி, பாசனவசதியல்லவா செய்கிறார்கள்! இம்மாதிரியொன்றும் நான் கேள்விப்படவில்லையே.

எ. மா :—இச்சக்கரங்களைச் சுழலச் செய்த பின்தான் அந்நீரை பாசனவசதிக்கு அனுப்புகிறார்கள். நீரைத் தேக்குவதற்கு ஓர் அணை போடுகிறார்கள் (masonry dam).

ஸ. மா :—அணையென்றால் நம் குளத்தங்கரை மாதிரியிருக்குமா?


எ. மா :—அதுவும் ஓர் அணைதான் ஆனால் அது மண்ணாலானது, இப்போது நான் சொல்லுவது சிமெண்டும், கருங்கல்லாலும் கட்டப்படுவது ஏனென்றால் தண்ணீர் அதிக உயரத்திற்குத் தேக்கப்பட்டால் மண் அணையொன்றும் போதாது. இம்மாதிரி நீரைத்தேக்கி அதிலிருந்து உண்டாக்கப்படும் மின்சக்திக்கு Hydro-Electric-Power என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்.

ஸ. மா :—சாதாரணமாக இம்மாதிரி அணையெல்லாம் எவ்வாறிருக்கும்?

எ. மா :—டிரபீஸியம் போன்று (Trapezium) இருக்கும்.

ஸ. மா :—அணைக்கட்டு, எவ்வளவு உயரம், எவ்வளவு நீளம், அகலம் இவைகளெல்லாம் எவ்வாறு நிச்சயிப்பார்கள்?

எ. மா :—அவ்வணையால் தேக்கப்படும் தண்ணீரின் மொத்த அளவு, அதனால் உண்டாகும், அழுத்தம் முதலியவைகளைக் கொண்டு தான், அணை, மிகவும் நீளமானதாய் இருக்கலாம்; ஆனால் கணக்கெடுப்பதற்கு சௌகரியமாய் நாம் இப்போது ஒரு அடி நீளமுள்ள அணையொன்றை எடுத்துக்கொள்வோம்.




நீர் அணையின்மேல் மட்டம் வரை இருப்பதாகக் கொள்ளுவோம். இவ்வாறிருக்கையில், அணைக்கட்டு கம்பீரமாய் நிற்கிறது. ஆனால் தண்ணீரோ, பார், உன்னைத்தள்ளிவிடுகிறேன், என்கிறது. இப்போது யார் ஜம்பம் பலிக்கிறதென்று பார்ப்போம்.

ஸ. மா :—அப்படியென்றால் அணைக்கட்டின் எடையோடு, தண்ணீரின் அழுத்தம் போட்டியிடுகிறது இல்லையா?

எ. மா :—அடே! பலே, கண்டுபிடித்துவிட்டாயே; அணைக்கட்டின் எடை கண்டுபிடிக்கத்தெரியுமா?

ஸ. மா :—அதெப்படியப்பா வேணுமென்றால் அணைக்கட்டின் குறுக்குவெட்டுப் பரப்பை... ..............ஏன், கனபரிமாணத்தையே சொல்லுகிறேன்.

எ. மா :—சரி, கனபரிமாணத்தை அணையின் அடர்த்தியால் பெருக்கி..................

ஸ. மா :—சரி, சரி, அணை எப்பொருளால் கட்டப்பட்டதோ அப்பொருளின் அடர்த்தி தெரிந்தால் எடை நான் போட்டுச் சொல்லுகிறேன்.

எ, மா :—அப்படியானால் அடர்த்தி 200 lbs./cu. ft. என வைத்துக் கொள்.

ஸ. மா :—அணையின் எடை $= h\left(\frac{a+b}{2}\right) \times 200$ lbs.

எ. மா :—Very good! இந்த எடை எதனால் ஏற்பட்டது?


ஸ. மா :—இது கூடத்தெரியாதென்று நினைத்தாயா? பூமியின் ஆகர்ஷணச் சக்தியால்.

எ. மா :—அப்படியானால் அணையின் எடை, அணையின் புவியீர்ப்புத்தானத்தில் (Centre of Gravity) தாக்குவதாகக் கொள்ளலாமல்லவா.

ஸ. மா. :—புவியீர்ப்புத்தானம் எவ்வாறு கண்டுபிடிப்பது?

எ. மா. :—அது தெரியாதா?

ஸ. மா. :—அட! முக்கோணம், வட்டம், சதுரம், இணைகரம் இப்படியிருந்தா சொல்லி விடலாம். Trapezium மறந்துபோச்சு.




எ. மா. :—ABயை Eக்கு நீட்டி BE=DC ஆகச்செய். பின் CDயை Fக்கு நீட்டி DF=AB ஆகச்செய். ABயின் மத்திப்புள்ளி Hஐயும் CDயின் மத்திப்புள்ளி Jயையும் சேர்.

EF என்னும் கோடு HJயை G என்னுமிடத்தில் சந்திக்கும். அதுதான் புவியீர்ப்புத்தானம்.

ஸ. மா. :—ஆகையால் பூமியின் ஆகர்ஷணச் சக்தி G யிலிருந்து CDக்கு செங்குத்தாய் தாக்கும்.

எ. மா. :—அதனால் G யிலிருந்து CDக்கு வரும் செங்குத்தான கோட்டைப் போட்டு அடிப் பக்கத்தில் நீட்டிவிடு. பின்னர் தண்ணீருடைய அழுத்தத்தைக் கணக்கிடுவோம்.

ஸ. மா. :—அதுதான் தண்ணீர் அணையில் மேல்பாகம் வரைக்கும் இருப்பதாகச் சொன்னயே.

எ. மா. :—தண்ணீர் மேல் மட்டத்தில் அழுத்தம் என்ன?


ஸ. மா. :—Zero.

எ. மா. :—கீழ்பாகத்தில்?

ஸ. மா. :—அதிகம்.

area of triangle

$$= w\frac{h}{2}$$




எ. மா. :—அப்படியானல் தண்ணீரின் சராசரி அழுத்தம் கணக்கிடவேண்டியதுதானே?

ஸ. மா. :—ஆம்.

எ. மா. :—அப்படியானல்

சராசரி அழுத்தம் $= \frac{wh}{2}$

$w$ = நீரின் அடர்த்தி 62·4 lbs/cuft.

$h$ = நீர்மட்ட உயரம் = அணையின் உயரம்.

நீரால் நனைக்கப்பட்ட பாகத்தின் பரப்பின் மேல் இவ்வழுத்தம் ஏற்படுகிறது ஆகையால் அணைக்கட்டை எதிர்க்கும் நீரின் அழுத்தம்


$$= \frac{wh}{2} \times h' \times 1' = \frac{wh^2}{2} \text{ lbs.}$$

ஸ. மா. :—இவ்வழுத்தம் அணைக்கட்டின் எத்தானத்தில் தாக்குகிறது?

எ. மா. :—சரியான கேள்விதான், கவனி.

எ. மா. :—நீரின் அழுத்தம் மேல் மட்டத்தில்

pressure triangle




பூஜ்யமாயும், கீழ்பாகத்தில் அதிகமாயும் இருப்ப


தால் அதன் அழுத்தத்தை ஒரு முக்கோணத்தால் காட்டலாம். உனக்குத்தான் முக்கோணத்தின் புவியீர்ப்புத்தானம் அடிப்பாகத்திலிருந்து $\frac{1}{3}$ $h$'ல் உள்ளதென்று.

ஸ. மா. :—ஆமா ஆமா ஞாபகமிருக்கிறது. அதாவது பக்கங்களின் மத்திப்புள்ளியை கோணங்களோடு சேர்த்தால் medianகள் வெட்டுமிடம் Centroid.

எ. மா. :—Excellent! நன்ருய் ஞாபகம் வைத்திருக்கிருயே, இவ்வளவு கெட்டிக்காரனுய் இருந்தும், என்ஜினியரிங் பாடத்தை எடுக்க பயந்துவிட்டாயே. அதுதான் எனக்கும் ஆச்சரியமாய் இருக்கிறது.

ஸ. மா. :—சரி, இப்போது பேசி பயன், வீணுக ஏமாந்தேன். மேலே சொல்லிமுடி நேரமாகிறது வீட்டிற்குப் போகவேண்டும்.

எ. மா. :—இப்போது நீ சொன்ன இணேகர விதிக்கே வருவோம். நீ சொன்ன வஸ்துவை அணையாகக் கொண்டால் அணையின் எடையும், நீரின் அழுத்தமும் இரு விசைகளாகும். நீரின்




விசையை நீட்டிவிட்டு அணையின் எடையைக் குறிக்கும் கோட்டை O என்னுமிடத்தில் வெட்டச் செய்.

இப்போது O என்னும் தானத்தின் மேல் இரு விசைகள் தாக்குவதாகவும், அத்தானம் சமநிலையிலிருப்பதாகவும் வைத்துக்கொண்டு ஓர் இணேகரம் வரையலாமல்லவா?

ஸ. மா. :—அதெப்படி? எந்த அளவைக் கொண்டு வரைவது?

எ. மா. :—முன்னர் நாம் கணக்கெடுத்தோமல்லவா? அணையின் எடை, நீரின் அழுத்தம், அவைகளைத்தான் இரு விசைகளென்று சொன்னேன். a-ம் b-யுமாய் இருக்கிறதே என்று யோசிக்கிருயா, நீயாகவே ஒரு மதிப்பிட்டு கணக்கைப் போட்டுப்பார்த்து நாளை சொன்னுல் போதும்

ஸ. மா :—சரி, இவ்வளவு தூரம் சொன்ன பிறகு போடுவதற்கென்ன, நான் போட்டுப் பார்த்துக் கொள்ளுகிறேன். மேலே சொல்லவேண்டியதைச்சொல்.

எ. மா :—இணேகரம் O S T M வரை. இதில் O S என்பது நீரின் அழுத்தத்தை அளவிலும் திசையிலும் குறிக்கும். அதேபோல் O M என்பது அணையின் எடையைக் குறிக்கும்.

ஸ. மா :—மூலேவிட்டத்தை ஏன் போடுகிருய்?

எ மா :—அதுவா, மூலேவிட்டம் எதைக்குறிக்கும்? சொல் யோசித்து.

ஸ. மா :—இருவிசைகளின் தொகுபயனே (Resultant) க் குறிக்கும்.

எ. மா :—சபாஷ்! அத்தொகுபயன் O T என்னும் கோடு அடித்தளத்தை C D யை எங்கு சந்திக்கிறது என்பதைக் கவனி.

ஸ. மா :—ஏன்?

எ. மா :—முதலில் அடித்தளம் C D-யை மூன்று சமபாகங்களாகப்பிரி. அதாவது C X = XY = YD. இதில் XY என்பது மத்திய மூன்ருவது பாகம் ஆகும். (middle third of the base).

ஸ. மா :—இதன் அவசியம்.........?

எ. மா :—நீ வரைந்த O T என்னும் தொகுபயனேக்கொடுக்கும் கோடானது நான் சொன்ன X Y என்ற பிரிவிற்குள் சென்ருல் அணை நிலேத்து நிற்கும், இல்லேயேல் நீரின் அழுத்தம் அணையின் எடையை தூக்கியடித்து பீட்செய்துவிடும்.

ஸ. மா :—அப்படியா! இப்போதல்லவா விளங்குகிறது. இணேகரவிதியின் உபயோகம். நேரம் போனதே தெரியவில்லே, அடேடே! 9-45 ஆகிவிட்டதா! சரி மிகவும் நன்றி, நீ இன்று சொன்னதை நான் மறக்கவே மாட்டேன்.

எ. மா :—இதுதான் அணேக்கட்டுகள் கட்ட உபயோகப்படும் கணக்கீடுகள். இதில் தவறிஞல் அணேக்கட்டும் தவறும். ஆகையால் நாம் கீழ் வகுப்புகளில் படிக்கும் இணேகரவிதி போன்ற சிறிய விஷயங்களே நாம் உதாசீனம் செய்யலாகாது.

ஸ. மா :—சரி நான் போய் வருகிறேன், மீண்டும் நாளே கணக்கோடு சந்திக்கிறேன்.

# SCHOOL ASSOCIATIONS

## 1. ATHLETIC ASSOCIATION

The Annual Sports Meet was held on 23—8—1951 at 3 P. M. presided over by Sri R. V. Rudrappaswami, D. E. O., Madurai. The impressive parade and the March Past of the competitors in their House colours was a grand sight. Sri C. Kandappa Pillai, our Municipal Commissioner, hoisted the flag.

Throughout the Sports Meet applause and loud cheers were heard, the different Houses cheering their victorious competitors. The distinguished guests and spectators were 'treated' to fine and interesting items of the villagers taking part in the running races and in Musical Chair competition. These events have become a permanent featnre on our sports programme as they are not only exhilirating in their own way but also as they afford lessons to the young alumni. The unlettered and unsophisticated villagers exhibit man's innate ambition to win in the race of life. Amidst continued cheers, the President distributed the prizes to the individual village athletes that came out successful in the events meant for them. In his concluding speech, he congratulated the school on its great strides in outdoor activities and wished the school sportsmen bright success in life.

Besides the school tournaments. other tournaments and sports were conducted in the Boarding Home and in the Hostel. They were well conducted and all items were fought to a finish. Students seem to have realized the importance of outdoor games and they are at their best in the play fields.

In the District Sports our young competitors did fairly well. Our athletes were qualified for the finals in all the track items. Our Basket Ball team went up to the finals. The Staff Badminton team came out successful once again this year and secured the Shield. Messrs. Francis Cruz, S. Arulsamy, T. P. Augustine, M. Manickam and K. Sivan combined well as a team and encountered able teams this year. With Mr. K. Sivan at the helm, the earnestness and efficiency of our team was well demonstrated and they won all the matches with but two games played in each. Mr. Augustine, our Sports Secretary, outstripped all in the District in the Walking Race for teachers.

Thanks are due to Messrs. Augustine, Ignaci and Mariasoosai for their unflagging enthusiasm and untiring regularity in training our athletes to keep up the fair reputation of the school.

**T. S. Paul.**

## 2. THE VOLUNTEER CORPS

### OFFICIALS—1951—52

| | | | |
|---|---|---|---|
| I. | Platoon Commander | .. | A. Mariasoosai |
| II. | ,, ,, | .. | Y. Ignaci |
| III. | ,, ,, | .. | M. I. Antony |
| | Commander General | .. | R. Joseph Leo |
| | Commander General | .. | Y. Ignaci. |
| | Officer in charge of Materials and Records | .. | V. M. Manickam |
| | Member in charge of the Volunteer corps | .. | K. Sivan |

The Volunteer corps was organised with the sole object of training students in doing social service and in such training emphasis is laid on strict discipline and implicit obedience. This year the Volunteer corps consisted of 252 members. Messrs. Ignaci, Mariasoosai and Antony our military trained staff members were in charge of the three platoons into which the members were divided. The platoons were divided into different sections each with its own elected leader.

Aware as we all were of the hardships and privations of many of our students, it was felt that any real service by the volunteers must be towards the welfare of such poor and deserving boys. Father Headmaster gave us the brilliant suggestion of collecting food grains from the public for the starving boys of St. Mary's who went without their mid-day meal on account of their grinding poverty. In all humility we thank him for his practical suggestion and this clearly reveals how keen an interest he evinces in the welfare of such boys in the midst of his multifarious activities. On the day previous to the collection of food grains about 2000 leaflets were distributed among the boys to be shown to their parents. The leaflet explained the sufferings of the boys and requested them to contribute their mite towards their welfare. On 19—7—51 the members of the Volunteer corps along with the members of the Social Service League marched from the school compound in different directions with caps on, bags in hand and placards in front. They begged from door to door for the sake of their fellow students in spite of the blazing sun for about 3 hours. No doubt, this was a novel experience for the boys but better training for the future than this they cannot have. Tired but happy they were when they returned. Some of them seemed to be surprised at their own ability to collect so much! We had our doubts about the success of such a venture in view of the difficult food situation in the town but thanks to the generosity of the public and the wonderful, enthusiasm of our boys the collections were strikingly remarkable.

About 50 poor and deserving boys who starve in the afternoon were regularly served the mid-day meal. The serving was done by the volunteers themselves. The I & II platoons were incharge of it for the first two terms and for the third term it is

entrusted to the III platoon. The collections were, of course, insufficient for the whole year but Father Headmaster, out of his unbounded sympathy for these poor boys, *has enabled us by supplying the necessary foodgrains to continue the feeding throughout the year.* The cooking was done by the cooks of the St. Mary's Hostel and hence we thank Brother Arulanandam and his cooks for this service. Our thanks are due to Fr. Antonysamy, the warden of the hostel, for being gracious enough to allow the cooks to do this bit of service.

Besides this noble service, the services of the volunteers at the School Sports and the School Day celebration are worthy of mention As usual, they have been very helpful in maintaining order at these functions. When the excursion party of about 50 students from Board High School, Nagamam, came to Dindigul on their way to Tanjore a group of volunteers met them at the station and took them round the town. Special mention must be made of the services of the volunteers on the polling day (12—1—52) at the different polling booth within the school premises. They were very useful in guiding the voters. Thus, in their own humble way, they performed their little bit of service to the nation.

The mere fact that the volunteer corps consisted of such a large number of students this year bears ample testimony to the growing interest among the boys in such activities. We earnestly hope that the students will take a keen interest in the extra-curricular activities of the school since education does not stop with books but in fact goes far beyond them.

**R. Joseph Leo.**

## 3. LITERARY AND DEBATING SOCIETY

It can safely be said that this year has been the Society's most successful year. Not only has the membership been extended to the First Form boys, but it has also been possible to have quite a variety of topics among its discussions. This shows how popular the society is and also how well the students appreciate its activities. This year saw a great deal of spontaneous response from the students and consequently we were able to arrange some really interesting meetings. Special mention must be made of the discussion on cinemas. It is to be noted that even the strongest supporters of this industry quite unwittingly drifted to the conclusion that it has been doing more harm to society than good. But a saner conclusion would be that the evil lies not in cinema as such, but in the way it is utilised by the producers.

I am very happy to record that the students have been very regular in attendance and in fact, we have had almost the maximum attendance at all our meetings.

But this year also the students chose to read than rather deliver their speeches, and there were more discussions in Tamil than in English. I am confident that students will evince greater enthusiasm and better response and make English their medium of expression more frequently next year. I have great pleasure in thanking the committee members most sincerely for their unflinching co-operation in making the society meetings always a success.

**A. Meenakshisundaram.**

## 4. PEN CLUB

In these days of democracy and freedom of expression, it is indeed a precious possession to have a facile and powerful pen. One can by his writings easily and effectively transmit to others the wealth of his knowledge and thereby influence their minds and even mould, to some extent, their destinies. Hence the saying " Pen is might than the Sword ! " At school boys can be trained in the art of wielding the pen sucessfully and it is this work that our Pen Club has taken up and is doing fairly well. Originality of thought and expression is encouraged and fostered.

To facilitate the smooth and efficient working of the club and to afford opportunities for boys of all classes, as many magazines are got up as there are sections in the school. Each Form is put in charge of a teacher who guides the squad of boys formed in each section for this purpose, in the preparation of the manuscript magazine, one for each term. The best contributions in them find a place in the School Annual.

It is gratifying to note that the quality of the articles in Tamil has been satisfactory. Short stories, descriptive essays, tit-bits and poems are the regular features, and the budding artists have adorned the pages of the magazine with their sketches and paintings which are interesting and instructive . But the response in English, even from pupils of VI Form, is rather disappointing. The hearty co-operation of the staff and pupils in the successful conduct of the Pen Club is to be commended.

**G. Venkatakrishna Iyer.**

## 5. SOCIAL SERVICE LEAGUE

Besides the usual round of Social Activities, the Social Service League members about six hundred strong, went to every nook and corner of the town begging from door to door food grains etc., to feed a number of poor starving students of St. Mary's. By so doing they were able to feed fifty students at noon on all class days.

Apart from this, they are regulating the school fee remittance of students on the appointed dates ; they are enabling students to recover the r lost fountain pens, tiffin carieers, note books etc., and minimising the number of absentees and late-comers to school. By these activities, it is hoped, the students may get suitable training to become, in the long run, useful citizens of our land.

**K. A. Arokiaswamy.**

## 6. HEATLH ASSOCIATION

Of the various factors that contribute to the making of an efficient citizen in modern democracy, the building up of a sanitary conscience is one. With this end in view, the re-orgainsed scheme of Secondary Education lays special emphasis on the importance of Health Association in the scheme of extra-circular activities. So, immediately after the re-opening of the School, the Health Association of St. Mary's was reformed. The members of the staff, whose names are shown hereunder, constituted a Committee with the Senior member, as its Convener. The Committee immediately began to function devising ways and means to develop health habits among the boys. Squads were formed in each section of each form to look to the cleanliness and neatness of the class rooms and the adjoining verandah. Particular care was taken to see that cobwebs in the ceiling and window panes of class-rooms were removed and the walls and floor were kept as neat and tidy as possible. Special groups of boys were arranged to look after the neatness of the school-compound and also the latrines. Boys were discouraged from going in for cakes and sweets sold by the street vendors at the entrance of the school exposed to dust, flies and mosquitoes.

Due to dearth of water even for drinking purposes, attention to tree-plantings and tree-growing (which was a special feature of last year's activity) had to be given up. It is hoped that with the dawn of better times, the same will be revived in the ensuing year.

Our boys are to be congratulated on their readiness to imbibe health ideas and to put them into practice. Evidences of their earnest work are to be seen everywhere and the class-rooms present always a neat appearance. Any carelessness on their part, if pointed out, is quickly remedied indicating their capacity for improvement.

I would be failing in my duty, if I fail to thank my colleagues, who have heartily co-operated with me in carrying out the programme of the year.

The following constituted the Committee ;—

1. Sri P. Ganesan, B.Sc., B. T.,
2. ,, Devaraj, B. A.,
3. ,, K. Viswanathan, *Hindi Pandit.*

4. Sri Savaridoss.
5. „ Peter Raj.
6. „ Jesumani.
7. „ N. Subramanya Iyer, B. A., L. T., *Convener.*

**N. Subramaniya Iyer,**
**Convener.**

## 7. RAMBLERS' CLUB

During the first half of the school year the Ramblers' Club arranged for very many excursions in batches of a large number of boys to places of industrial and historical importance in and around Dindigul. Two excursions to the Sugar Factory at Pandiarajapuram deserve special mention.

The projected grand tour to Mangalore, Mysore, Bangalore etc., is yet to take place. An excursion to Goa and Bombay is being planned for December 1952 to enable the excursionists to witness the exposition of the Body of St. Francis Xavier.

Though it is some months since tents were purchased for camping purposes, they have not yet been used. Tent camps will mean a lot of privations and hard work on the part of the excursionists even to the extent of having to cook their own food. Hence they can more easily be used for some Leaders' Training Camps which it is hoped will be organised soon to give our pupils good training for social work and sound moral and mental formation.

**V. P. Viswanatha Iyer.**

## 8. ENTERTAINMENT COMMITTEE

Keeping in mind that drama is the best teacher, the Entertainment Committee is doing its best to foster and develop the histrionic talents of our boys. During this academic year, apart from the many small dialogues enacted within the class rooms, based on Social Studies, there was a regular drama "The Servant" under the presidency of the district judge of Madurai on the great occasion of our school day celebrations. Though the enthusiasm of our actors was somewhat damped by unexpected rain, they entered into the spirit of the play and acted so well that they won the admiration of the audience. There is also another drama under preparation to be staged on the Hostel Day.

Too many applications from our boys for taking part in the school dramas clearly indicate that they have overcome their shyness and stage fright and are keenly interested in drama and music. The Committee is always careful enough to choose only such plays and dialogues as will instil into young minds sound moral principles that will stand them in good stead later on in life.

**S. Pitchaimuthu.**


## 9. ARTS AND CRAFTS CLUB

எமது பள்ளியில் அமைந்துள்ள இக்கலைக்குழுவில் சென்ற ஆண்டுகளைவிட இவ்வாண்டில் அதிகமான மாணவர்கள் சேர்ந்து பயிற்சிபெற்று வருகிறார்கள். மேல் வகுப்பு மாணவர்களுக்கு வர்ணந்தீட்டுதல் **(Paintings)** விசேஷித்த விதமாகப் போதிக்கப்படுகிறது. கீழ்வகுப்பு மாணவர்களுக்கு கோட்டுருவப் படங்களும் **(line Drawings)** நிழலுருவப்படங்களும் **(light and shade)** போதிக்கப்படுகிறது. சித்திரம் வரைதல், பிற்கால வாழ்க்கையில் ஓர் உபயோகமுள்ளதும், பழகப்பழகப் பயனை அளிப்பதும், ஓர் விசேஷித்த பொழுதுபோக்குக்கானதுமான சிறந்த கலையாதலால், மாணவர்கள் தங்கள் பயிற்சியில் ஈடுபட்டிருக்கையில் தங்கள் கவனத்தை வெகுசிரத்தையுடன் காட்டுகிறார்கள்.

இவ்வருடம் நடந்தேறிய எமது பள்ளியின் ஆண்டுவிழாவிற்கு இக்குழுவினர் செய்திருந்த ஜோடனை வேலைகள் மிகவும் கவர்ச்சிகரமாயிருந்தது. பள்ளி நாடகம் நடக்கும்போதும், அதற்கு வேண்டிய சீன் ஜோடனைகள், மேக்-அப் செய்தல் முதலிய அலுவல்களில் பங்கெடுத்துக்கொண்டு தங்கள் ஆர்வத்தை வெகுவாக வெளிப்படுத்தினார்கள். இக்குழுவைச் சேர்ந்த ஆசிரியர்களும் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்துவந்தார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு இச்சிறு குறிப்பை முடித்துக்கொள்ளுகிறேன்.


**A. S. Manickam.**

CONNEMARA PUBLIC LIBRARY
22 JUN 1955
MADRAS



Altar of Boarding Chapel

# OUR DEPARTED



Rev. Fr. J. G. Gomez, S. J.
(1892—1951)

MARA PUBLIC LI
2 - JUN 1955
MADRAS



Rev. Fr. J. Rigly, S. J.
(1892—1951)

PUBLIC LIBRARY
JUN 1955
MADRAS

# IN MEMORIAM

We have to record here with very deep regret the deaths of Rev. Fathers J. G. Gomez S. J. and J. Rigly S. J. both of which occurred in 1951.

Rev. Fr. Gomez had gone to Ratnapura, Ceylon, to recoup his indifferent health and it was thought that he was getting better and that he would soon return to his post in the Palamcottah College but God designed otherwise and he was called to his eternal rest on 21st August, 1951. Death claimed him rather suddenly in the shape of heart failure in the clinic of a doctor to whom he had gone walking to get an injection.

The good Father was born in Tuticorin on 10—8—1892. He had his early education in Tuticorin and Palamcottah and went for his College studies to Trichinopoly. He joined the novitiate of the Society of Jesus at Shembaganur on 9—5—1914. His complete religious formation was over only in April 1930 when he became the Headmaster of St. Xavier's, Palamcottah. From 1935 to 1944 May he was in Dindigul as our Headmaster and Manager. Then for two years he was the Superior and Headmaster in St. Mary's, Madura, and these two years proved to be hard ones for him and brought on ill-health. Thinking that native air might do him good, Superiors transferred him to St. Xavier's Tuticorin, in July 1946. In June 1948 he was transferred to St. Xavier's, Palamcottah, as Minister and Spiritual Father. His health became worse from 1950 onwards from causes which no doctor could clearly diagnose. In 1951 May he was sent to Ceylon for a rest but that proved to be a prelude to eternal bliss.

To Rev. Fr. Gomez, it would seem, that the nine years he spent in our midst in Dindigul were the happiest days of his life. During his tenure of office as Headmaster, the results of our school in the Public Examination improved a good deal, the strength of the school rose to a thousand pupils, the precarious existence of the Hostel was made secure by starting it in its present compound and a high level discipline and all-round efficiency prevailed in the school. To perpetuate his memory and to recall his services to the school to succeeding generations of staff and pupils, an Attendance Shield bearing his name has been instituted.

Rev. Fr. Rigly is hardly known to most of our staff and pupils, many of whom must have seen him only in the School Film where he appears in the act of

feeding pigeons and ducklings. Having been a confirmed invalid, he was confined to his room almost aways during his stay here of two years as our Procurator. Some boys knew him as stamp collector and used to go him to see his collection or get a few stamps. His chronic asthma carried him off rather suddenly on 8th December, during the Christmas vacation when the compound was empty of pupils.

Rev. Fr. Rigly was born on 6th November 1892 at Ingherhseim a village in Alsace. He completed his High School Course in 1913. Though he wanted to become a Jesuit in 1913 itself, the Jesuit authorities thought it best to let him wait due to his delicate health. But that proved to be a long waiting since with the outbreak of The Great War in 1914, he was obliged to serve in the German army. His next five years were spent in trenches and battlefields, chiefly in Poland and Russia. Snow,, frost and poison gas told on his health. The German military authorities bestowed on him the 'Iron Cross', not easily granted to ordinary soldiers.

He joined the Society of Jesus in France in 1919, as soon as he was freed from military duties. In 1920 he came to India to continue his training in Shembaganur and later in Kurseong. He began his stamp collection in 1922 and continued the hobby till his death. After his Jesuit training was completed, he was appointed Minister and Procurator of Shembaganur, the Jesuit training institution. After 10 years stay there, he became the Procurator of the Madura Vice-Province in 1940, and as such resided in Madura. To give him some relief from ever recurring attacks of asthma, he was tansferred back to Shembaganur but this too proved unsuited to his health and so he was sent to Dindigul in October 1949, where it was hoped the dry and salubrious climate would do him good. His heart was, however, getting weaker and weaker all along and the good Father knew that no doctor could do much to help him and was fully resigned to his invalid state. He was fully prepared for death any day but was fortunate enough to die during his annual retreat, when, laying aside his account books, he was communing with God alone.

May their souls rest in peace !

...EMARA PUBLIC LIBRARY
2 - JU... 1955
MADRAS